58

புதுமுறைச் செந்தமிழ் வாசகம்

... RAR OF ...
9 - JAN 1950
MAD AS

ஆரும் புத்தகம் : முதல் பாரம்

58
1-50

வித்துவான்கள்
தி. பட்டுச்சாமி ஓதுவார்
கோ. இரத்தினம் பிள்ளை

V. S. வெங்கடராமன் கோ.,
கும்பகோணம்

TB
031(6)
N49
86944

புதுமுறைச்
செந்தமிழ் வாசகம்

ஆறும் புத்தகம் : : முதல் பாரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - JAN 1950
MADRAS

வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார்
வித்துவான் கோ. இரத்தினம் பிள்ளை
பொன்னையா உயர்நிலைப்பள்ளி : திருச்சிராப்பள்ளி

V. S. வெங்கடராமன் கம்பெனி
பப்ளிஷர்ஸ் : : கும்பகோணம்

பதிவு செய்தது] [விலை 14 அணா

TD
031(6)
N49
86944

முன்னுரை

தமிழ் நாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ்மொழியை முதன் மொழியாக்கி, அதற்கேற்றவாறு தமிழ்ப் பாடதிட்டத்தையும் திருத்தியமைத்துச் சென்னை அரசியலார் 1949-ல் ஒரு புதிய பாடவியல் வெளியிட்டுள்ளனர். அப்புதிய பாடதிட்டத்தை முற்றிலும் பின்பற்றி, **புதுமுறைச் செந்தமிழ் வாசகம்** என்னும் இப்புத்தக வரிசை அமைக்கப்பெற்றுளது.

இதில் தமிழ் மக்களின் சீரிய பண்புகளையும், தமிழ்மொழியின் தனிச் சிறப்புக்களையும் உணர்த்தும் வகையில் தமிழ்ப் புலவர்கள், வள்ளல்கள் முதலியோர் வரலாறுகளும், சிறுவர்களின் பொது அறிவை வளர்க்கும் முறையில் விஞ்ஞான விந்தைகள், இயற்கைக் காட்சிகள், கலைவளம், விவசாயம், கைத்தொழில், துணிகர முயற்சிகள் முதலியனவும் மாணவர் தகுதிக்கேற்பத் தெள்ளிய தமிழ் நடையில் உரைநடைப் பாடங்களாக அமைந்துள்ளன.

செய்யுட் பகுதியில் கடவுட்பற்றினை ஊட்டும் தேவாரம், திவ்வியப் பிரபந்தம், திருவருட்பா முதலிய பாடல்களும், அறிவை வளர்க்கும் நீதிச் செய்யுட்களும், கதைகளும், மனத்திற்கு மகிழ்ச்சி தரும் இயற்கை வருணனைகளும், நாடோடிப் பாடல்களும், பல்சுவைப் பாக்களும் இடம் பெற்றுள்ளன. இவை எளியனவாய், இனியனவாய், மாணவர் நிலைக்கு ஏற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பெற்றனவாம்.

ஒவ்வொரு பாட முடிவிலும், மாணவர்தம் சுயமுயற்சியைத் தூண்டும் வகையில் சொல்வளம், கருத்துணர்தல், கட்டுரை எழுதுதல் பற்றிய பயிற்சிகள் இணைக்கப்பட்டுள்ளன.

இப் புத்தக வரிசையில் தமது நூல்களிலுள்ள செய்யுட்களை எடுத்தாளுதற்கு உரிமை வழங்கிய, திருவாளர்கள் கவியோகி சுத்தானந்த பாரதியார், அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, செந்தமிழ் நிலையத்தார் முதலிய பெரியோர்க்கு எங்கள் உளமார்ந்த நன்றி என்றும் உரியதாகும்.

தமிழ் மாணவ உலகுக்கு இந்நூல் பெரிதும் பயன்படுமாறு தமிழன்னை இன்னருள் புரிக!

திருச்சிராப்பள்ளி
26—11—49

தி. பட்டுச்சாமி ஓதுவார்
கோ. இரத்தினம் பிள்ளை

பொருளடக்கம்

உரைநடைப் பகுதி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 - JAN 1950
MADRAS

எண்	பாடம்	பக்கம்
1.	இறைவன் வழிபாடு	1
2.	கடவுளை அறிந்தவர்கள்	5
3.	நம் தமிழ் நாடு	6
4.	நறுமலர்	11
5.	வாள் கொடுத்த வள்ளல்	14
6.	தென் மதுரை	19
7.	கோழி வளர்த்தல்	20
8.	புனிதவதியார்	26
9.	நான் பார்த்து வந்த பழைய நகரம்	31
10.	ஓவியர்மணி இரவிவர்மா	36
11.	நட்புப் பிரித்தல் (பஞ்சதந்திரம்)	38
12.	எவரெஸ்டு மலைச் சிகரம் ஏறுதல்	46
13.	அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை	51
14.	உழவுத் தொழிலும் உணவுப் பெருக்கமும்	54
15.	நீர்வளம்	60
16.	ஞானவான் சாலமன்	61
17.	காவிரியாறு	66
18.	ஆறு	71
19.	பிறர்க்குதவி	74
20.	சர் சி. வி. ராமன்	78
21.	விஞ்ஞான விந்தைகள்	85
22.	வெனிஸ் வர்த்தகன் (நாடகம்)	88

செய்யுட் பகுதி

எண்	பாடம்	பக்கம்
I.	துதி மலர்	 100-102
	தேவாரம் - திவ்வியப் பிரபந்தம் - பட்டினத்தார் பாடல் - திருப்புகழ் - திருவருட்பா - இரட்சண்ணிய யாத்திரிகம் - தமிழன்னை வணக்கம் - கொடி வணக்கம்	
II.	நீதி மலர்	 103-108
	1. திருக்குறள் 2. நல்வழி 3. நன்னெறி 4. நீதிவெண்பா 5. சதகம்	
III.	கதை மலர்	 113-115
	1. தேசிங்குராஜன் பாராசாரி என்னும் குதிரையை அடக்கிச் சவாரி செய்தல் 2. உபாயத்தால் வெல்லுதல் (பஞ்சதந்திரம்) 3. புத்தரும் ஏழைச் சிறுவனும்	
IV.	வருணனை மலர்	 115-116
	1. காடு 2. நாட்டு வளம் 3. மலர்கள்	
V.	தனி மலர்	 116-118
	எங்கள் தமிழ் - செயற்கை யறிவும் இயற்கை யறிவும் - ஈகை வகை - வாழைப்பழமும் பாம்பும் - செருப்பின் பயன் - சொற்சுவை - வண்டி மாடு - புண்ணுக்குப் புண் - பூசணிக்காய் மகத்துவம் - தமிழ் நாட்டின் சிறப்பு.	



அரசவைக் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

புதுமுறைச் செந்தமிழ் வாசகம்

ஆறாம் புத்தகம்

1. இறைவன் வழிபாடு

கதிரவன் கிரணக் கையால்
கடவுளைத் தொழுவான்; புட்கள்
சுதியொடும் ஆடிப் பாடித்
துதிசெயும்; தருக்க ளெல்லாம்
பொதிஅலர் தூவிப் போற்றும்;
பூதம்தம் தொழில்செய் தேத்தும்;
அதிர்கடல் ஒலியால் வாழ்த்தும்;
அகமேநீ வாழ்த்தா தென்னே!

—வேதநாயகம் பிள்ளை

மாணவர்களே! மாணவிகளே! உங்களில் பலர் இந்து மதத்தினர்; சிலர் மூகம்மதிய மதத்தினர்; சிலர் கிறிஸ்தவ மதத்தினர்; மற்றுஞ் சிலர் ஜைனம் முதலிய வேறு மதத்தினராக இருக்கலாம். இப் பல்வேறு மதங்கள் அல்லது சமயங்களின் அடிப்படையான கொள்கைகளை ஆராயுங்கால் அவைகளெல்லாம் ஒருமைப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

மேற்கூறிய எல்லா மதத்தினரும் பல்வேறு உலகங்களையும், அவற்றிற் காணும் எல்லா உயிர்களையும் படைத்துக் காக்கும் கடவுள் ஒருவர் உண்டு என்பதை ஒப்புக்கொள்கின்றனர். கடவுள் என்ற சொல், மனம், மொழி, மெய் என்பவற்றைக் கடந்தவரென்றும், கடவு + உள் எனப் பிரித்துச் செலுத்துதல் என்ற பொருள்கொள்ளின், எல்லாவற்றையும் உள்நின்று செலுத்தும் பெருமான் என்றும் பொருள்படும்.

எல்லாவற்றையும் படைத்துக் காப்பாற்றுகின்ற கடவுள் எல்லாம் அறிபவர். அவர் எள்ளில் எண்ணெய் போலவும், விறகில் தீப்போலவும், பாலில் வெண்ணெய் போலவும் எங்கும் நிறைந்தும், மறைந்தும், பரந்தும் விளங்குபவர். அவர் என்றும் உள்ளவர்; அன்புருவானவர்; அளவிடப்படாத அருளுடையவர்.

இறைவனால் படைக்கப்பட்ட அனைவரும் எச்சமயத்தினராயினும், எச்சாதியினராயினும், எந்நாட்டினராயினும் சகோதரர்களே. எல்லா உயிர்களின் உடல்களும் அவருக்குத் திருக்கோயில்களாகும். ஆதலால் எவ்வுயிர்க்கும் இரங்கி, உதவிபுரிதலே அவருடைய கோயிலுக்குச் செய்யும் திருப்பணியாகும். தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பதே அவருக்குகந்த வழிபாடாகும்.

முன்னொரு காலத்தில் ஆபு பின் ஆதம் என்னும் ஒரு முகம்மதிய மகான் இருந்தார். அவர் தம் உயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பவர். ஓர் இரவு களங்கமற்ற மனத்துடன் அயர்ந்து துயிலுகையில் திடுக்கென்று விழித்தெழுந்தனர். அப்போது அவ்வறையில் தோன்றிய நிலாவொளியில் ஒரு தேவன், பொன்னேட்டில் ஏதோ எழுதுவதைக் கண்ணுற்றார். வழக்கமாயுள்ள அமைதியோடு அவ்வுருவத்தை நோக்கிப் பணிவுடன் வினவினர்.

ஆபு :—தேவரே! பொன்னேட்டில் குறிப்பது யாது?

தேவன் :—எழுதுவது ஈசனிடத்தில் நேசமுள்ளோர்களின் பெயர்களே.

ஆபு :—என் பெயர் உளதோ?

தேவன் :—இல்லை, கிடையாது.

ஆபு :-தேவனே! நான் கனவிலும் கடவுளைக் கருதாக் கசடனாயினும், தன்னுயிரைப்போல் மன்னுயிரை நேசிப்பவன் என்று அருள்கூர்ந்து எழுதிக்கொள்ளுங்கள்.

தேவனும் அவ்வாறே செய்து மறைந்தனன். மறு நாள் இரவில் அதே வேளையில், அதே உருவம் ஆபு முன் தோன்றி, இறைவனுக்குப் பிரியமுள்ளவர்களின் பெயர்களைக் காட்ட, என்ன விந்தை! பொன் ஏட்டில் ஆபுவின் பெயரே முதன்முதலாக நின்றது.

மேலும், கடவுளுடைய நற்குணங்களை எப்பொழுதும் சிந்தித்து அவைகளில் பழகுவது மற்றொருவித வழிபாடாகும். கடவுள் தூய்மையானவர்; நீதி வடிவானவர்; உண்மை உருவினர். ஆதலால் நாமும் மனம், மொழி, மெய் இம்மூன்றிலும் தூய்மையுடன் இருத்தல்வேண்டும்; எப்பொழுதும் நீதி வழுவா நெறி முறையில் நிற்க வேண்டும்; உண்மையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

"ஒரு நாமம், ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி" வழிபடுதலையும் பெரியோர்கள் விதித்திருக்கின்றார்கள். நமது துன்பங்களைப் போக்கிக்கொள்ளவும், மேலான பேரின்பத்தைப் பெறவும் கடவுள் வழிபாடே சிறந்த சாதனமாகும். ஆதலால் இப்பிறவி எடுத்ததனாலாய பயன் இறைவன் வழிபாடென்று அறிஞர் வற்புறுத்தியுள்ளனர்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்றார் ஆசிரியர் திருவள்ளுவர்.

பயிற்சி

படிப்பின் வேகம்: இந்தப் பாடத்தைக் கருத்தறிந்து வாசிப்பதற்கு எத்தனை நிமிஷங்கள் ஆகின்றனவென்று கடிகாரத்தின் உதவியால் கண்டறிக. பிறகு படித்த சொற்களை எண்ணி, ஒரு நிமிஷத்தில் நீ படித்த சராசரி வார்த்தைகள் எத்தனையென்று குறித்துக்கொள்க. நாளடைவில் உன் படிப்பின் வேகத்தை அதிகப்படுத்த முயற்சிக்கவும்.

அருஞ்சொற்கள் : புட்கள் (புள் + கள்) - பறவைகள். சுதி - சுருதி, இன்னிசை. தரு - மரம். பொதி - குலை, கொத்து. அலர் - மலர்ந்த பூ. பூதம் - நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐம்பெரும் பூதங்கள். அகம் - மனம். மன்னுயிர் - நிலையான உயிர்கள்; இதர உயிர்ப் பிராணிகள். துயில் - தூக்கம். கசடன் - குற்றமுள்ளவன். வழுவா - தவறாத. நாமம் - பெயர். வாலறிவன்- கடவுள். நற்றாள் - நல்ல திருவடி.

கருத்து உணர்தல்:

1. எச் சமயத்தவரும் ஒப்புக்கொள்வது யாது?

2. இறைவனுக்குக் கடவுள் என்ற சொல் எவ்வாறு பொருந்தும்?

3. நாம் இறைவனுக்குச் செய்யக்கூடிய சிறந்த வழிபாடு யாது?

4. கடவுளை வேறு எவ்வகையில் வணங்கலாம்?

5. ஆபுவின் வரலாறு நமக்கு அறிவிப்பது என்ன?

6. கல்வி கற்றதனால் ஆய பயனென்ன?

கட்டுரை :

1. பாடத் தலைப்பிலுள்ள செய்யுளின் பொருளை உன் சொந்த வாக்கியங்களில் எழுதுக.

2. வேதநாயகம் பிள்ளையின் ஊர், காலம், மதம், உத்தியோகம், அவர் இயற்றிய நூல்களின் பெயர் இவற்றைக் கேட்டறிந்து குறித்துக்கொள்க.

2. கடவுளை அறிந்தவர்கள்

அவரே கடவுளை அறிந்தவ ராவர்
அனைவரும் மதித்திடத் தகுந்தவராவர். (அவ)

1. துன்பப் படுவோர் துயரம் சகியார்
துடிதுடித் தோடித் துணைசெயப் புகுவார்
இன்பம் தமக்கென எதையும் வேண்டார்
யாவரும் சுகப்படச் சேவைகள் பூண்டார். (அவ)

2. பசியால் வாடின எவரையும் பார்த்துப்
பட்டினி தமக்கென பரிதபித் தார்த்து
விசையாய் முடிந்ததை விருப்புடன் கொடுப்பார்
வீண்உப சாரம் விளம்புதல் விடுப்பார். (அவ)

3. நோயால் வருந்திடும் யாரையும் கண்டு
நோன்பெனச் செய்வார் எல்லாத் தொண்டும்
தாயாம் எனவே தம்சுகம் எதையும்
தள்ளிவைத் தருகினில் தாமிருந் துதவும். (அவ)

—ஆஸ்தான கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

பயிற்சி

[முந்திய பாடத்தின் கருத்தை இச்செய்யுட்கள் விளக்குவதை அறிக.]

அருஞ்சொற்கள் : மதித்திட - உயர்வாகக் கருதிட. சேவை - தொண்டு. ஆர்த்து - அநுபவித்து. விசை - விரைவு. நோன்பு- விரதம்.

கருத்துணர்தல் :

1. கடவுளை அறிந்தவர்
(i) துன்பப்படுவோர்க்கு,
(ii) பசியால் வாடினவர்க்கு,
(iii) நோயினால் வருந்துவோர்க்கு
—யாது செய்வார் ?

2. கடவுளை அறிந்தவர்கள் எவ்விதத்தில் தாயை ஒப்பாவர் ?

3. நம் தமிழ் நாடு

'செந்தமிழ் நாடெனும் போதினிலே — இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—'

என்று உணர்ச்சி ததும்புமாறு நம் தமிழ் நாட்டின் பெருமையைப் புகழ்ந்து பாடியுள்ளார் கவி சுப்பிரமணிய பாரதியார். அத்தகைய இனிமையூட்டும் தமிழ் நாட்டில் நாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்துவருவது பெருமிதங் கொள்ளத்தக்கதே.

நாம் பிறந்ததுமுதல் பேசிவருவது தமிழ்மொழி. ஆதலால், தமிழ் நமக்குத் தாய்மொழி. தொன்று தொட்டே இம்மொழி மிக மேலான நிலைமையில் இருந்து வந்திருக்கிறது. தமிழானது பழமைக்கும், இனிமைக்கும், தனிமைக்கும் ஒப்புயர்வற்ற ஒரு மொழியாகும். இஃது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் சிறந்து விளங்குகிறது.

தமிழ் பேசும் மக்கள் தமிழர்கள். தமிழ் மக்கள் வாழும் நாடு தமிழ் நாடு அல்லது தமிழகம் எனப்படும். 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகம்' எனப் பனம்பாரனர் என்ற பண்டைக்கால நூலாசிரியரும்,

'நீலத் திரைக்கட லோரத்திலே — நின்று
நித்தந் தவஞ்செய் குமரியெல்லை — வட
மாலவன் குன்றம் இவற்றிடையே — புகழ்
மண்டிக் கிடக்குந் தமிழ்நாடு.'

எனப் பாரதியாரும் தமிழ்நாட்டிற்கு எல்லைகளைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

என்ருலும், ஆராய்ச்சியாளர்கள் தமிழ் நாடானது பல்லாயிரம் ஆண்டுகட்குமுன்னே, இன்றைக்கு இந்துமாக் கடல் இருக்கும் பகுதியிலே கிழக்கு இந்தியத் தீவுகள், பர்மா, ஆஸ்திரேலியா, தென்னுப்பிரிக்கா முதலிய நிலப் பகுதிகளைத் தன்னகத்தே கொண்ட ஒரு பெரிய நிலப் பரப்பாக இருந்தது என்றும், அப் பகுதி தமிழர்களால் 'குமரி நாடு' என்றும், பிறநாட்டினரால் 'இலெமூரியா' என்றும் அழைக்கப்பெற்று வந்தது எனவும் தக்க சான்றுகள் காட்டி முடிவுசெய்துள்ளனர். அப் பெரும் பகுதியானது கடற்கோளினல் கொள்ளப்பெற்று அழிந்தொழிந்தது.

மேலும், புதைபொருள் ஆராய்ச்சியாளர் சிந்து நதிப் பள்ளத்தாக்கில் தோண்டி வெளிப்படுத்தியுள்ள மொஹெஞ்சோ - தரோ என்னும் பண்டைக்கால நகரத்தில் காணப்படும் பழங்காலச் சின்னங்கள் தமிழ்நாட்டுப் பொருள்களுடன் பெரிதும் ஒத்துக் காணப்படுகின்றன. இதனல் தமிழ் நாடு ஒரு காலத்தில் வடக்கே சிந்துவெளி வரை வெகுதூரம் பரவியிருந்தது என்றும் ஒருவாறு ஊகிக்கலாகும்.

ஆழியால் அழிந்துபோன பகுதியொழிய எஞ்சிநிற்கும் தென்னிந்தியாவே இக்காலத் தமிழகம் ஆகும். நம் தமிழ்நாடு நீர்வளம், நிலவளம் பெரிதும் வாய்ந்தது. இதன்கண் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனப்படும் நால்வகை நிலங்களும் காணப்படுகின்றன. இத்தகைய வளம் செறிந்த நம் தமிழ் நாடானது முற்காலத்தில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. இவற்றில் தமிழ் நாட்டு மூவேந்தர்கள் செங்கோல் ஓச்சிவந்தனர்.

சேர நாடு என்பது மேலைக் கடற்கரையின் ஓரத்திலே உள்ள மலைநாடேயாகும். தற்போதுள்ள திருவாங்கூர்,

கொச்சி, மலையாளம், தென் கன்னடம், கோயமுத்தூர், சேலம் முதலிய நிலப்பகுதிகள் இதன்கண் அடங்கியிருந்தன. சேரநாட்டு மலைச்சாரல்களில் யானைகள் மிகுதி. ஆதலின், 'வேழமுடைத்து மலைநாடு' என இந்நாடு சிறப்பிக்கப்பட்டுள்ளது.

சேரநாட்டை ஆண்ட மன்னர்கள் சேர மன்னர் ஆவர். இவர்கள் பனம்பூ மாலையையும், வில்லெழுதிய கொடியையும் உடையவர்கள்; வஞ்சி மாநகரத்தைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்தனர். தொண்டி, முசிறி என்பன அந்நாட்டின் சிறந்த துறைமுகங்கள். சேர மன்னர்கள் தமிழ்மொழியைப் பெரிதும் வளர்த்துவந்தனர். நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னும் நூல் சேர மன்னர் மரபில் தோன்றிய இளங்கோவடிகளால் இயற்றப்பட்டதாகும். சேர மன்னர்களுள் சிறந்தவர் பெருஞ்சோற்றுதியன், சேரன் செங்குட்டுவன் ஆவர்.

'ஏழ்தலம் புகழ் காவேரியால் விளை சோழமண்டலம்' எனப் புகழ்பெற்ற சோழநாடானது தற்பொழுது தஞ்சை, திருச்சிராப்பள்ளி என வழங்கும் சில்லாக்கள் அடங்கிய நிலப்பகுதியாகும். இந்நாட்டில் பாயும் காவிரியாற்றின் நீர்வளத்தால் பொன் கொழிக்கும் பொன்னாடாக அது திகழ்கின்றது; தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம் எனப் புகழப்படுகின்றது. ஆதலால், 'சோழவள நாடு சோறுடைத்து' என்று அஃது சிறப்பித்துக் கூறப்படுகிறது.

இந்நாட்டு மன்னர்கள் சோழ மன்னர்கள் ஆவர். இவர்கள் ஆத்திமாலையையும், புலிக்கொடியையும் உடையவர்கள். ஆதியில் புகாரையும், பின்னர் உறையூர், தஞ்சை, கங்கைகொண்ட சோழபுரம் முதலிய ஊர்களையும் தலைநகரங்களாகக்கொண்டு ஆண்டுவந்தனர். காவிரிப்பூம்பட்டினம்(புகார்) இந்நாட்டின் துறைமுகமாக விளங்கியது.

காவிரிக்குக் கரைகட்டிய கரிகாற்சோழன், இராசராசச் சோழன், இராசேந்திரச்சோழன் என்பவர் சோழமன்னர்களுள் சிறந்தவர் ஆவர். கம்பர், ஒட்டக்கூத்தர் முதலிய புலவர்கள் சோழ மன்னர் சபையினைச் சிறப்பித்த புலவர் மணிகளாம்.

பாண்டி நாடு என்பது இப்போதைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஆகிய சில்லாக்களைத் தன்னகத்தே கொண்டிருந்தது. பாண்டிய நாட்டு முத்துக்கள் பாரில் புகழ்பெற்று விளங்கின. ஆதலின் 'பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து' எனச் சிறப்பிக்கப்பெற்றது. வைகையும் தாமிரவர்ணியும் இந் நாட்டை வளம்படுத்துவன.

பாண்டிய நாட்டினை ஆண்டவர் பாண்டியர் எனப்பட்டனர். இவர்கள் வேப்பம்பூ மாலையையும், மீனக் கொடியையுங் கொண்டிருந்தனர். பாண்டிய மன்னர்கள் பண்டைக்காலத்தில் தென்மதுரை, கபாடபுரம் என்பவற்றைத் தலைநகராகக்கொண்டு ஆட்சிபுரிந்துவந்தனர். அப்பகுதி கடலாற் கொள்ளப்படவே, பின்னர் வைகை யாற்றுக் கரையிலுள்ள மதுரையைத் தலைநகராகக் கொண்டனர்.

பாண்டிய மன்னர்கள் தமிழ்ச் சங்கங்கள் கூட்டித் தமிழைப் பெரிதும் வளர்த்துவந்தனர். பழந்தமிழ் நூல்களென இன்று வழங்கும் நூல்கள் எல்லாம் இச்சங்கங்களில் தோன்றியவைகளே யாகும். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன், உக்கிரப் பெருவழுதி முதலியோர் பாண்டிய மன்னர்களுள் சிறந்தோராவர்.

நமது முன்னோர்களாகிய பண்டைத் தமிழ் மக்கள் சீரிய ஒழுக்கம், உயரிய கல்வி, சிற்பம், ஓவியம், தரை வாணிபம், கடல் வாணிபம், செல்வம் இவற்றில் தலை சிறந்து விளங்கினர். இக்காலத்தில் கிடைக்கும் தமிழ்

நூல்களும், காணும் கோயில்களும் அவர்களுடைய மேன்மையான நாகரிகத்துக்கு ஓரளவு சான்றாகும் அல்லவா ?

மாணவர்களாகிய நீங்கள் நம் தமிழ் நாட்டின் பழமையையும் பெருமையையும் உணர்ந்து, தமிழ்மொழிக்கும் தமிழ்நாட்டுக்கும் பணிசெய்ய முன்வருவீர்களாக !

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற—எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா."

பயிற்சி

[தமிழ்மொழிப் பற்றையும், தமிழ்நாட்டுப் பற்றையும் வளர்க்கும் நோக்குடையது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : பெருமிதம் - உள்ளச் செருக்கு, களிப்பு. மாலவன் - திருமால். கடற்கோளினல் - கடல் கொள்ளலால். ஆழி - கடல். குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும். முல்லை - காடும் காடு சார்ந்த இடமும். மருதம் - வயலும் வயல் சார்ந்த இடமும். நெய்தல் - கடலும் கடல் சார்ந்த இடமும். வேழம் - யானை. பூழியர் - பாண்டியர். பாரில் - பூமியில்

கருத்து உணர்தல் :

1. முத்தமிழ், நால்வகை நிலம், மூவேந்தர்—விளக்குக.

2. தமிழ்நாட்டின் எல்லைகளைக் குறிப்பிடுக.

3. பழங்காலத்தில் தமிழ்நாடு எந்தெந்த நிலப் பகுதிகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது ?

4. (i) சேர நாடு, (ii) சோழ நாடு, (iii) பாண்டிய நாடு இவற்றை முறையே சிறப்பித்துக் கூறும் தொடர்களைக் கூறுக.

5. கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்க :

(i) பாண்டியர் —— மாலையையும், —— கொடியையும் கொண்டிருந்தனர்.

(ii) சோழமன்னர் சபையைச் சிறப்பித்த புலவர்கள் ——, ——.

(iii) ——, —— என்பன சேரநாட்டின் துறைமுகங்கள்.

(iv) —— சிலப்பதிகாரத்தை இயற்றியவர் ——.

கட்டுரை :

1. இப்பாடத்தில் வந்துள்ள மேற்கோள்களை எடுத்தெழுதி, உன் சொந்த வாக்கியங்களால் விளக்குக.

2. சுப்பிரமணிய பாரதியார் இருந்த காலம், வசித்த ஊர்கள், தாய் தந்தையர் பெயர், மனைவி பெயர், இயற்றிய நூல்கள் இவற்றைக் கேட்டறிந்து குறித்துக்கொள்ளவும்.

---

4. நறுமலர்

மங்கலப் பொருளாகிய மலர்கள், வானத்தில் மின்னுகின்ற விண்மீன்கள் வான வெளியை அழகுபடுத்துவன போன்று மண்ணுலகத்தை வனப்புறச் செய்கின்றன. ஒரு தாவரத்தின் பல்வேறு உறுப்புக்களாகிய வேர், அடி மரம், கிளை, இலை முதலியவற்றுள் பூக்களே மிக்க எழில் உடையன. மலர்கள் தமது பன்னிறங்களாலும், பல்வகை உருவங்களாலும், மென்மைத்தன்மையாலும், நறுமணத்தினாலும் நமது மனத்தை மகிழச்செய்து நமக்கு இன்பத்தை அளிக்கின்றன. பூக்களின் பொலிவைப் புலவர்கள் பலரும் புகழ்ந்து பாடியுள்ளார்கள்.

மலர்கள் நமக்குப் பல்வகைகளிலும் பயன்படுகின்றன. நறும் பூக்களைத் தலையிற் சூட்டி மகிழ்கின்றோம்; மாலையாகத் தொடுத்து அணிகின்றோம்; மலர்களால் வீடுகளை அலங்கரிக்கின்றோம்; இறைவனை அருச்சிக்கின்றோம். பன்னீர், அத்தர், தைலங்கள் முதலிய நறுமணப் பொருள்கள் மலர்களினின்றும் தயாரிக்கப்படுகின்றன. பூக்களிலிருந்தே தேன் கிடைக்கிறது. மருந்தாகப் பயன்படும் மலர்களும் உண்டு.

தமிழ் நாட்டில் கோட்டுப்பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என மலர்களை நான்கு வகையாக வகுத்துக் கூறுவது மரபு. சண்பகம், மகிழ், புன்னை, பாதிரி முதலிய மலர்கள் மரக்கொம்புகளில் மலர்வதால் இவை கோட்டுப் பூக்கள் எனப்படும். கொடிகளில் உண்டாகும் முல்லை, சம்பங்கி முதலியன கொடிப்பூக்களாகும். செவ்வந்தி, ரோஜா, அலரி இவைகள் சிறு செடிகளிலும் புதர்களிலும் பூப்பதால் நிலப்பூ அல்லது புதர்ப்பூ எனப் பெயர் பெறும். தாமரை, அல்லி முதலிய மலர்கள் நீரில் மலர்வதால் நீர்ப்பூவாகும். மலர்களிற் சிறந்த செந்தாமரைப் பூவில் திருமகளும், வெண்டாமரைப்பூவில் கலைமகளும் வாழ்வதாகக் கூறுவர்.

பூக்களின் பலவித வண்ணங்களையும் நோக்குங்கள். செம்பருத்தி, செவ்வலரி, செந்நிறம். மல்லிகை, முல்லை வெண்ணிறம். சண்பகம், செவ்வந்தி மஞ்சள் நிறம். சம்பங்கி, மனோரஞ்சிதம் பச்சை நிறம். லைதா, நீலம் முதலிய தனி நிற மலர்களும், மற்றுங் கலப்பு நிறமுள்ள மலர்களும் எண்ணிறந்தன உள.

மரஞ்செடிகள் அரும்பு விட்டு மலரும் மாதங்களும் வேளைகளும் வேறுபடுவதைக் காண்கின்றோம். மாசியில் மாவும், பங்குனியில் வேம்பும், வைகாசி ஆனியில் மல்லிகை முல்லையுமாகப் பல்வேறு மாதங்களில் பல்வேறு தாவரங்கள் பூக்கின்றன. மேலும் ஒரே நாளில் அதிகாலை, முற்பகல், நண்பகல், பிற்பகல், மாலை, முன்னிரவு, நள்ளிரவு, பின்னிரவு முதலிய வெவ்வேறு காலங்களில் வெவ்வேறு வகைப் பூக்கள் மலர்கின்றன. இதனை நன்கு ஆராய்ந்து அறிந்த அறிஞர் லின்னேயஸ் என்ற தாவரநூல் ஆராய்ச்சியாளர், மணி காட்டும் மலர்ப்பாத்திக் கடிகாரமொன்றைத் தமது தோட்டத்தில் அமைத்துக் காட்டினாராம்.

பூக்களின் பருவங்களும் பலவகைப்படும். முதலில் தோன்றும் சிறு பூவை அரும்பு என்றும், முகிழ்ந்த பூவை முகை என்றும், மலரும் பருவத்துப் பூவைப் போது என்றும், மலர்ந்த பூவை மலர், அலர் என்றும், உதிரும் பூவை வீ என்றும் அறிஞர் உரைப்பர். பூக்களைப் பரிசோதித்து ஆராயுங்கால் காம்பு, புல்இதழ், அல்லிஇதழ், மகரந்தம், சூலகம் முதலிய பல பாகங்கள் காணப்படும். பூக்கள் தமது கண்கவர் வண்ணத்தாலும் நறுமணத்தினுலும் தேனீ, வண்ணுத்திப்பூச்சி, எறும்பு முதலியவற்றைத் தம்மிடம் வரச்செய்கின்றன. இரை தேடிப் பூக்களில் புகுந்த வண்டுகள் முதலியன உள்ளிருக்குந் தேனை நுகர்வதோடு, அம்மலரில் உள்ள மகரந்தத்தை மற்றொரு மலரில் கொண்டுசேர்க்கின்றன. அதனுல் மலரில் பிஞ்சு உண்டாகி, அது காய்த்துப் பழுத்துப் புதிய விதைகளைத் தோற்றுவிக்கின்றது. இப்புதிய விதைகளே மீண்டும் மரஞ்செடிகள் உண்டாக ஏதுவாகின்றன.

பூச்செடிகளை வைத்து வளர்த்தல் நமது கடமையாகும். ஆகையால் நீங்கள் சிறிது பெரிது என்றும், நாற்றமுள்ளது நாற்றமற்றது என்றும், அழகுடையது அழகற்றது என்றும் எம்மலரையும் அவமதிக்காது கருத்துடன் போற்றிவருவீர்களாக!

பயிற்சி

[இயற்கை வனப்பினை அறிந்து இன்புறச் செய்யும் நோக்கமுடையது இப் பாடம்.]

அருஞ்சொற்கள் : விண்மீன் - நட்சத்திரம். வனப்பு, எழில், பொலிவு - அழகு. பல + நிறம் - பன்னிறம். கோடு - கொம்பு. மரபு - வழக்கம். வண்ணம் - நிறம். எண்ணிறந்தன - கணக்கற்றன. ஏது - காரணம்.

கருத்துணர்தல் :

1. மலர்கள் மக்களுக்கு எவ்வெவ்வகையில் பயன்படுகின்றன?
2. மலர்களை எவ்வாறு பிரித்துக்கூறுதல் மரபு? ஒவ்வொரு வகைக்கும் இரண்டு உதாரணங்கள் தருக.

3. 'மலர்கள் காலங்காட்டும் கண்ணுடியாகும்'— எவ்வாறு?

4. ஒரு மலர் தனது பல பருவங்களுக்கேற்ப எப்பெயர்களைப் பெறும்?

5. தாவர இனவிருத்திக்கு மலர்கள் எவ்வாறு உதவுகின்றன?

கட்டுரை: நீ பெரிதும் விரும்பும் மலர் ஒன்றைப்பற்றி ஒரு பத்தி (பாரா) எழுதுக.

---

5. வாள் கொடுத்த வள்ளல்

நம் தமிழ்நாடு பண்டைக்காலம் முதற்கொண்டே ஈகையிற் சிறந்த நன்னுடாகத் திகழ்கின்றது. வரையாது கொடுக்கும் வள்ளல்கள் பலரும் வாழ்ந்திருந்தனர். அவர்களுள் தலைசிறந்தவன் குமணன் என்னும் பெருங் கொடையாளி யாவன்.

தமிழ் நாட்டின் ஒரு பகுதியான கொங்கு நாட்டிலே முதிரம் என்ற ஒரு மலையுண்டு. அம் மலையினையும் அதனைச் சார்ந்துள்ள ஊர்களையும் ஒரு காலத்தில் குமணன் என்னும் சிற்றரசன் ஒருவன் ஆண்டுவந்தனன்.

குமணன் அருங் குணங்கள் பலவும் அமையப்பெற்றவன்; கல்வியிற் சிறந்தவன்; அருளே வடிவானவன்; பிறர் துன்பங் காண ஒருபொழுதும் சகியாதவன். இரவலர்கள் இன்முகங் காணுமாறு அவர்கள் விரும்பியவற்றைக் குறிப்பறிந்து கொடுப்பவன். தமிழ்ப் புலவர்களை அன்போடு வரவேற்று, அவர்கட்குப் பொன்னும் மணியும், அணியும் ஆடையும் அளிப்பவன். தன்னுட்டுச் சிறந்த யானைகளைப் புலவர்கட்குப் பெரும் பொருளுடன் பரிசளித்து மகிழ்வான். இதனுல் இவனது புகழ் நாடெங்கும் பரவியது.

குமணனும் புலவரும்

குமண வள்ளலின் பின்னவன் இளங்குமணன். இவன் இயற்கையில் நல்லறிவு பெற்றிருந்தும் தீயவர் சேர்க்கையால் மனம் மாறிவிட்டான். அண்ணனுக்கு வரும் புகழைக் கண்டு பொறாமைகொண்டான். அதனல் தன் அருமை அண்ணன்மீது பகைமைகொண்டான். பேராசை பிடர் பிடித்துத் தள்ள அது காரணமாகத் தன் தமையனது அரசைக் கவரத் திட்டமிட்டான்.

தம்பியின் எண்ணத்தை உணர்ந்த குமணன் மனம் வருந்தி, நாடு, நகரம் முதலியவற்றைத் தம்பிக்கு வழங்கி விட்டுத் துறவு பூண்டு காட்டில் மறைந்து வசிக்கலானன். இதனை யறிந்த நாட்டு மக்கள் இளங்குமணனை இகழத் தொடங்கினர்.

அரசைக் கவர்ந்த இளங்குமணன், தமையன் செய்துவந்த தான தருமங்கள் அனைத்தையும் தடுத்து விட்டான். தமிழ்ப் புலவர்களைத் தன்னட்டில் தலை காட்டாதவாறு செய்தனன். குடிமக்களையும் கொடுங் கோலாட்சி புரிந்தான். இதனலும் இளங் குமணன் இகழப்பட்டான். குமண வள்ளலையே மக்கள் புகழ்ந்தனர். பொறாமையால் தூண்டப்பெற்ற இளங்குமணன் தமையன் இருக்கும் வரையில் தான் புகழடைய முடியாது என்று கருதினன். ஆதலால் அவனைக் கொல்லவுந் துணிந்தான். என்றாலும், தானே கொல்ல மனம் இசையாமல் குமணன் தலையைக் கொண்டுவருவோருக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாகப் பறையறைவித்தான். இதனை யறிந்த மக்கள் அவனை மேலும் இகழ்ந்தனர்.

இங்ஙனமிருக்க, பெருந்தலைச் சாத்தனர் என்னும் தமிழ்ப் புலவர் குமண வள்ளலின் கொடைச் சிறப்பைக் கேள்வியுற்று அவனைக் காணப் புறப்பட்டு வந்தார். முதிரமலை நாட்டை யடைந்து அந்நாட்டுக் குழப்பங்களைக் கண்டறிந்தார். இளங்குமணனைக் காண விரும்பாமல், காட்டிற்குச் சென்று குமணவள்ளலைத் தேடிக்கண்டனர்.

புலவரைக் கண்ட குமண வள்ளல் அகமலர்ந்து அன்புடன் வரவேற்ருர். புலவர் தம்மை அந்நிலையிலும் வரவேற்று உபசரித்த வள்ளலின் அருங் குணங்களில் ஈடுபட்டவராய்த் தம் வறுமை நிலையினை எடுத்துரைத்தார்.

குமணன் புலவரது வறுமை நிலையை உணர்ந்தான். அவருக்கு எவ்வாறு உதவிபுரிவதென ஏங்கினன். பின்னர் ஒருவாறு தேறிப் புலவரைப் பார்த்து, "அருங் கவிப் புலவரே! யான் அரசனுக இருந்த காலத்தில் வந்திருப்பீராயின் உமது வறுமை இதுகாறும் உம்மிடம் தங்கி நிற்குமோ? யான் அரசிழந்து வருந்துங் காலத்தில் என்பால் வந்து துயர் உற்றீர். என்றாலும், எனது இச் சிறிய தலைக்கு என் அருமைத் தம்பி ஆயிரம் பொன் கொடுப்பதாக அறிவித்துள்ளான். ஆதலால் என் தலையைக் கொண்டுபோய் என் தம்பியின் கையில் கொடுத்து அதற்குரிய விலையைப் பெற்று உமது வறுமை நோயைப் போக்கிக்கொள்வீராக" எனக் கூறித் தன் உடைவாளை யுருவிப் புலவர் கையில் நீட்டித் தலைசாய்த்து நின்ருன்.

கண்டார் புலவர்; துடிதுடித்தார்; உள்ளம் பதைத்தார். வாளை வாங்காவிடில் தானே தலையைத் துணித்துவிட்டால் என் செய்வது என விரைந்து வாளை வாங்கிக் கொண்டார். குமணனைப் பார்த்து, "வாள் கொடுத்த வள்ளலே! எனக்கு அளித்த இத்தலையை யான் வரும்வரை ஒன்றும் செய்தல்கூடாது. இதோ வருகின்றேன்" என்று கூறி விரைந்து சென்றனர்.

வாளை ஏந்திய கையுடன் புலவர் இளங் குமணனை அடைந்தார். புலவர் இளங் குமணனைப் பார்த்து, "மன்னவனே! இவ்வுலகத்துப் பொருள்கள் அனைத்தும் அழிந்துவிடும். இவ்வுடலோ நீரிற் குமிழி போன்று நில்லாது ஒழியும். இவ்வுடல் அழிந்தபிறகு பொருளால்

ஆகும் பயன் யாது? என்றும் இறவாது நிற்பது புகழன்றோ! புகழில்லார் தோன்றலிற் தோன்றாமை நன்றல்லவா? இதோ பார்! எனது வறுமை நிலையினை நின் தமையன்பால் சென்றுரைத்தேன். அவன் எனக்குக் கொடுப்பதற்கு ஒன்றும் இல்லாமையால் தன் தலையை வெட்டிக்கொண்டுபோய் உன் கை கொடுத்து உரிய தொகையை வாங்கிச் செல்லுமாறு கூறினான். இத்தகைய அருங் குணவானைத் தமையனாகப் பெற்ற உன்னைவிடச் சிறந்தவர் இவ்வுலகில் வேறு எவருளர்? உன் தமையனைக் கண்டதுமுதல் என் குடும்ப நிலையையும் மறந்தேன். ஆதலின் நீங்கள் இருவரும் இனியாவது ஒற்றுமையுடன் இருந்து ஓங்குபுகழ் பெறுவீராக!'' என்று எடுத்துரைத்தார்.

புலவர் கூறிய பொன்னுரைகள் இளங்குமணன் உள்ளத்தில் பதியவே மனம் இளகினான்; தன் தவறுதலை உணர்ந்தான்; அன்பு மேலிட்டது; புலவருடன் ஓடோடியும் சென்று அண்ணனைக் கண்டு பணிந்தான்; தன்னை மன்னித்து நாட்டரசாட்சியை மீண்டும் ஏற்க மன்றாடினான். புலவரும் தமக்குரிய தலையில் தாம் முடிசூட்டத் தடையுண்டோ எனச் சாதுரியமாகப் புகன்று குமணனை முடி தரிக்க இணங்கச்செய்தார்; பின்னர் நாட்டிற்கு அழைத்துவந்து முடிசூட்டி மகிழ்ந்தனர்.

குமணன் பெருந்தலைச் சாத்தனாரின் அருங்குணங்களைப் பாராட்டினான்; பரிசுகள் பல வழங்கினான். இளங்குமணனும் தமையனிடம் அன்றுமுதல் நீங்காத அன்பு பூண்டு அவனோடிருந்து ஆட்சிமுறையினைக் கவனித்து வரலாயினான்.

தலையைக் கொடுத்துப் புலவரின் வறுமையைப் போக்கத் துணிந்த குமணனை அனைவரும் 'தலையைக் கொடுத்த தருமப் பிரபு' என்றும், 'வாள் கொடுத்த வள்ளல்' என்றும் போற்றிப் புகழ்வாராயினர்.

பயிற்சி

[பண்டைத் தமிழ் மன்னரின் கொடைச் சிறப்பை விளக்குவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள்: ஈகை - கொடை. திகழ்தல் - விளங்குதல். வள்ளல் - யாவர் எதை வேண்டினும் கொடுப்பவர். கொங்குநாடு- கோயமுத்தூர், சேலம் சில்லாப் பகுதிகள். இரவலர் - யாசகர். அணி - ஆபரணம். கவர்தல் - அபகரித்தல். பறையறைவித்தல - பறையடித்துத் தெரிவித்தல். நாடுதல் - தேடுதல். அகம்- மனம். துணித்து - வெட்டி. தைத்தல் - பதித்தல். சாதுரியம்- சாமர்த்தியம்.

கருத்துணர்தல்:

1. தமிழ் நாட்டின் பண்பு யாது?

2. குமண வள்ளலின் குணநலங்களைக் கூறுக.

3. குமண வள்ளல் காட்டிற்குச் சென்று மறைந்து வாழ்ந்தது ஏன்?

4. இளங்குமணன் அரசுபெற்றதும் யாது செய்தனன்?

5. பெருந்தலைச்சாத்தனாரிடம் குமண வள்ளல் கூறியது என்ன?

6. இளங்குமணனை நோக்கிப் புலவர் கூறிய பொன்னுரைகளை எழுதுக.

7. புலவர் குமண வள்ளலை முடிதரிக்க இணங்கும்படி கூறிய சாதுரிய மொழி யாது?

கட்டுரை: பெருந்தலைச் சாத்தனாரின் சிறந்த இயல்புகளை விவரித்து ஒரு பத்தி எழுதுக.

6. தென் மதுரை

பட்டணமாம் பட்ட்ணமாம்
தென்மதுரைப் பட்ட்ணமாம்.
பாண்டியர்கள் ஆளுகின்ற
பாருயர்ந்த பட்டணமாம்.
செந்தமிழின் மாட்சியுள்ள
சீருயர்ந்த பட்டணமாம்.
அழகான தென்மதுரைக்(கு)
அழகுசெய்யும் ஆலயமாம்.
ஆலயத்தில் வீற்றிருக்கும்
அழகுக் குலதெய்வம்,
அங்கயற்கண் அம்மை,
அழகுள்ள மீனாட்சி.
ஆலயத்தைச் சூழ்ந்திருக்கும்
அழகான வீதிகளாம்.
திரவியங்கள் தேடித்
திரைகடல்கள் ஓடித்
தரணியெலாம் வாணிபம்செய்
தனவணிகர் வீதிகளாம்.
நவநவமாய் மலர்ந்திருக்கும்
நன்மலர்கள் நறுமணமும்,
சிவமணமும் தவமணமும்,
செந்தமிழின் புதுமணமும்,
கவிவாணர் புகழ்மணமும்
கலந்துவரும் வீதிகளாம்.

மங்கலஞ்சேர் ஏழுமெத்தை
மணிமாட வீதிகளாம்.
சுந்தரஞ்சேர் கண்மடவார்
பந்துபயில் மேடைகளாம்.

கோட்டைகளாம், கொத்தளமாம்,
கோபுரப்பொன் வாசல்களாம்.

— நாடோடிப் பாடல்

பயிற்சி

[தமிழ் நாட்டில் வழங்கும் நாடோடிப் பாடல்களின் நயமறியும் பொருட்டு இச் செய்யுட் பாடம் தரப்பட்டுளது.]

அருஞ்சொற்கள் : பாருயர்ந்த - பூமியின்கண் சிறந்த. அங்கயற்கண் (= அம் + கயல் + கண்) - அழகிய மீன்கள் போன்ற கண்களையுடைய. தரணி - பூமி. நவநவமாய் - புதிது புதிதாய். மங்கலம் - அழகு. மடவார் - பெண்கள்.

கருத்துணர்தல் :

1. அங்கயற்கண், அம்மை, மீனாட்சி — பெயர்க்காரணம் கூறுக.
2. மதுரையில் காணப்படுமிடங்கள் எவை ?
3. மதுரை வீதிகளில் வீசும் ஐவகை மணங்கள் யாவை ?

---

7. கோழி வளர்த்தல்

அம்பலவாணன் :—நண்பா! அதோ பார்! நம் நாட்டு மக்கள் படும் பாட்டினை. ஐயோ! வறுமை அவர்களை வாட்டுகின்றதே! பிறநாட்டு மக்கள் செல்வத்தில் சிறந்து விளங்கவும், பொன் விளையும் இப்புண்ணிய நாட்டினர் இவ்வாறு ஏழ்மையால் ஏங்கித் தவிக்கவும் காரணம் என்ன ?

அறிவானந்தன் :—அம்பலவாணா! ஆம், உண்மைதான். நம் நாட்டினர் நிலையினைக் கண்டு வருத்தமுறத்தான் வேண்டும். ஆலோசித்துப் பார்த்தால் இதற்குக் காரணம் அவர்களே ஆவர்.

அம்பலவாணன் :—என்ன! அவர்கள் வறுமைக்குக் காரணம் அவர்களா? புரியவில்லையே!

அறிவானந்தன் :—ஆம், அவர்களேதான். நம் நாட்டு மக்களிற் பெரும்பாலோர் துன்பப்படுங் காலத்தில் அத் துன்பத்தினைப் போக்க வழிதேடாமல், 'எல்லாம் வினைப் பயன்', 'எல்லாம் ஈசன் செயல்' என விதியை நொந்து கொள்கின்றனர். தங்கள் பொருள் நிலையை வளர்க்கப் பாடுபடுவது இல்லை; வீண்பொழுது போக்குகின்றார்கள். நகரத்து மக்களைவிடக் கிராமவாசிகளே இதில் பெரிய குற்றவாளிகள் ஆகின்றனர்.

அம்பலவாணன் :— வீண்பொழுதா? அவர்கள்தான் ஓயாது உழைக்கின்றார்களே! அவர்களுக்குப் பொழுது போக்க நேரம் ஏது?

அறிவானந்தன் :—நன்று சொன்னாய். அவர்களுக்கா நேரம் இல்லை? ஒவ்வொரு கிராமவாசிக்கும் ஓர் ஆண்டில் ஐந்து அல்லது ஆறு மாதங்களுக்கே வேலையுண்டு. இன்னும் தக்க எந்திர சாதனங்களைக்கொண்டு செய்தால் அவ்வேலையை நாற்பது நாட்களில் செய்துவிடலாகும். எஞ்சிய பொழுதெல்லாம் வீண்பொழுதுதானே?

அம்பலவாணன் :—அறிவானந்தா! இஃதெல்லாம் உன் சொந்த ஆராய்ச்சியின் முடிவுகள்தானே?

அறிவானந்தன்:—அம்பலவாண! அவ்வாறு எண்ணாதே. அறிஞர்கள் கண்ட முடிபையே கூறுகின்றேன். தென்னிந்தியாவைப்பற்றி ஆராய்ச்சி செய்த டாக்டர் சிலேட்டர் என்பார் "வருடத்தில் பன்னிரண்டில் ஐந்து பாகமே

விவசாயி பயனுள்ளதாகக் கழிக்கின்றான்'' எனக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தார் நியமித்த விவசாயப் பரிசீலனைக் குழுவின் அங்கத்தினர்கள், "பொதுவாகக் கூறுமிடத்து, விவசாயி மிகக் குறைந்த அளவாக ஓர் ஆண்டில் இரண்டு முதல் நான்கு மாதங்கள் வீண்பொழுது போக்குகின்றான்'' எனத் தெரிவித்துள்ளார்கள். ஐக்கிய மாகாண பாங்கு விசாரணைக் குழுவினர், "விவசாயிகளுக்கு 200 நாட்களுக்குமேல் வேலையில்லை'' எனக் கணக்கெடுத்துள்ளனர். வேலைசெய்த நாட்கள் போக ஏனைய நாட்கள் வீணாகத்தானே கழிகின்றன. நண்பா! இப்பொழுது என்ன கூறுகின்றாய்?

அம்பலவாணன்:— ஆம்; உண்மையே! அந்நாட்களில் அவர்களை என்ன செய்யச் சொல்லுகின்றாய்? வேலை செய்து அலுத்தவர்கள்தானே?

அறிவானந்தன்:— விவசாயத்தில் மட்டும் போதிய வருவாய் கிடைப்பது அரிதாக இருத்தலின், திரு. டார்லிங் என்பார் கூறியவாறு ஏதேனும் ஓர் உதவிக் கைத் தொழிலை மேற்கொள்ளுதல் வேண்டும்.

அம்பலவாணன் :— இந்திய விவசாயி மேற்கொள்ளத் தக்க உதவித் தொழில்கள் ஏதேனும் உண்டோ?

அறிவானந்தன் :— ஏன் இல்லை? ஏராளமாக இருக்கின்றன. பாற்பண்ணை வைத்தல், கோழி வளர்த்தல், தேனீ வளர்த்தல், பாய் முடைதல், கதர்நூல் நூற்றல் முதலிய எத்துணையோ இலாபந்தரும் தொழில்கள் இருக்கின்றன. இவைகள் குடிசைத் தொழில்கள் எனப்படும். பேரறிஞர் ஒருவர், "விவசாயிக்கு ஏற்ற உதவித்தொழில் கோழி வளர்த்தலேயாகும்'' எனக் குறிப்பிட்டுள்ளார்.

அம்பலவாணன் :— கோழி வளர்த்தல் ஓர் இலாபந் தரும் குடிசைத் தொழிலா? எவ்வாறு?

அறிவானந்தன் :— இதில் உனக்கு ஐயம் ஏன் ? கோழியின் முட்டை மிகவும் சத்துள்ள உணவு என்பது நீ அறிவாய் அல்லவா ? அது சிறுவர்முதல் முதியோர் வரை பலவீனமுள்ள இருபாலருக்கும் ஊட்டமளிக்கும் சிறந்த உணவாகும். ஆதலால் கோழிகளை முறைப்படி வளர்த்து விருத்திசெய்வது அதிக உணவு உற்பத்திக்கு ஏதுவாகுமல்லவா ? ஒவ்வொரு வீட்டிலும் உணவுக்காகவும் விற்பனைக்காகவும் காய்கறித் தோட்டம் அமைத்துப் பயிர் செய்வதுபோலவே சில கோழிகளை வளர்த்து உணவுப் பொருளை அதிகரித்துக்கொள்ளலாம்; எஞ்சிய முட்டைகளையும் கோழிகளையும் விற்று இலாபம் எடுக்கலாம்.

அம்பலவாணன் :—முட்டைகளை விற்று இலாபம் பெறத் தக்க அளவில் கோழிகள் முட்டையிடுமா ?



பெட்டை : சேவல்
நாட்டுக்கோழி



வெள்ளைலெக்ஹார்ன்

அறிவானந்தன் :— ஆம். நாட்டுக்கோழிகள் ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 80 முதல் 120 முட்டைகள் வரை இடும். ஆனால் 'வெள்ளை லெக்ஹார்ன்', 'ரோடு ஐலண்டு ரெட்' முதலிய சீமைக்கோழிகள் சராசரி 150 முதல் 250 முட்டைகள் வரை இடுகின்றன. ஒருவன் நாற்பது கோழிகள் கொண்ட

ஒரு கோழிப் பண்ணையை வைத்திருப்பானுயின் மாதந் தோறும் ரூ. 50-க்குக் குறையாத துணை வருமானம் கிடைக்க வழியேற்படும்.

அம்பலவாணன் :— நீ சொல்லுவதெல்லாம் சரிதான். கோழிகளை வளர்த்துப் பராமரித்தல் எல்லோருக்கும் இயலுமா ?

அறிவானந்தன் :— கோழியை வளர்ப்பது யாவரும் செய்யக்கூடியதே. ஓர் எளிய குடியானவனும் கோழிகளை இலாபகரமாக வீட்டில் வளர்க்கலாம். பெரிய பட்டணங் களில்கூட எவரும் தாம் வசிக்குமிடங்களில் கோழிகளை ஓய்வு நேர வேலையாக வளர்க்கலாம். கோழிகளை இம்மாதிரி வீட்டில் வளர்ப்பதற்குக் "கொல்லைக் கோழிப் பண்ணை" என்று பெயர். பெண்பிள்ளைகளும் சிறுவர் களுங்கூடக் கோழிகளைக் கவனித்துக்கொள்ளலாம்.

அம்பலவாணன் :— கோழிகளுக்குத் தீனிச் செலவு அதிகம் ஆகுமல்லவா ?

அறிவானந்தன் :— இல்லை. பண்ணைகளில் சிந்திக்கிடக் கும் பயனற்ற தானியங்களையும், மற்றும் இதர கீரை, புழு, பூச்சிகளையும் தின்று கோழிகள் வளரும். மேலும், பயிர்களை நாசஞ் செய்யும் புழுக்களையும், பூச்சிகளையும் தின்றுவிடுவதால் அவை உழவனுக்கு உற்ற துணை ஆகின் றன. விவசாயத்தோடு கோழிப் பண்ணைகளை வைத்துப் பரிபாலித்தால் அதிகச் செலவு ஏற்படாது.

அம்பலவாணன் :— உணவுப்பெருக்கத்துக்கு உதவு வதோடு கோழிகள் நம் நாட்டுப் பொருளாதார நிலையை யும் உயர்த்தக்கூடியனவா ?

அறிவானந்தன் :— ஆம். நமது மாகாணத்தில் மட்டும் சுமார் ஒன்றரைக் கோடி கோழிகள் இருப்பதாகக் கணக் கெடுத்திருக்கிறார்கள். கோழி ஒன்றுக்கு விலை இரண்டு

ரூபாய் வீதம் மதிப்புப் போட்டாலும் அவைகளின் மொத்த மதிப்பு சுமார் மூன்று கோடி ரூபாய் ஆகிறது. ஆதலால் கோழிகளும் ஒருவகைச் செல்வமே.

அம்பலவாணன் :— ஆம். நீ சொல்வதிலிருந்து கோழி வளர்த்தல் ஒரு சிறந்த குடிசைத் தொழில் என்று உள்ளங்கை நெல்லிக்கனியென உணர்ந்துகொண்டேன். எங்கள் வீட்டிலும் கோழிப் பண்ணை ஒன்று வைத்து வளர்க்க ஏற்பாடு செய்கின்றேன்.

அறிவானந்தன் :— நண்ப ! அது நல்ல செயலே. கொத்திப் பொறுக்கக் கோழியும், கொஞ்சி விளையாடக் குழந்தையும் இல்லாத வீடு வீடாகுமா ? குடிசைத் தொழில் உயரவே குடித்தனம் உயரும்.

பயிற்சி

[குடிசைத் தொழிலின் உயர்வை உணர்த்துவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : ஏழ்மை - வறுமை. குழு - கூட்டம். விவசாயி - உழவன். பால் + பண்ணை - பாற்பண்ணை. ஐயம் - சந்தேகம். இருபாலர் - ஆண், பெண் என்ற பகுதியார்.

கருத்துணர்தல்:

1. நம் நாட்டுமக்கள் வறுமையால் வாடக் காரணம் என்ன?
2. நம் நாட்டு உழவர்கள் வேலைசெய்யும் காலத்தைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள் கண்டுள்ள முடிபுகளைக் கூறுக.
3. இந்திய விவசாயி மேற்கொள்ளக்கூடிய உதவிக் கைத் தொழில்கள் யாவை ?
4. கோழி வளர்த்தல் ஓர் இலாபந் தரும் குடிசைத் தொழிலாகும். எவ்வாறு ?
5. கோழிப்பண்ணை வைத்து நடத்தல் யாவர்க்கும் எளிதான ஒரு செயலே என்பதை விளக்கி விவரிக்க.
6. கோழி நம் நாட்டுச் செல்வப் பொருள்களில் ஒன்று என்பதைப் புள்ளி விவரங்களுடன் காட்டுக.
7. ‘கொல்லைக் கோழிப்பண்ணை’ - இஃது யாது ?

கட்டுரை :

கோழிகளின் தீவனத்தைப்பற்றி ஒரு பத்தி எழுதுக.

8. புனிதவதியார்

மௌனமாகப் படித்து விடை கண்டறிக:

1. புனிதவதியாரின் மற்றொரு பெயர் யாது?
2. கோடிட்ட இடத்தைப் பூர்த்தி செய்:
   (i) புனிதவதியாரின் தந்தையின் பெயர் ——; மாமனாரின் பெயர் ——; கணவனின் பெயர் ——.
   (ii) அம்மையார் இயற்றிய நூல்கள் ——, ——, ——.
   (iii) இவரது சரித்திரம் —— என்னும் நூலில் கூறப்பட்டிருக்கிறது.
3. அம்மையார் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதச் செயல் யாது?
4. புனிதவதியாரின் தெய்வீகத்தன்மையைப் பரமதத்தன் எதனால் உணர்ந்தான்?
5. சிவபெருமானிடம் அம்மையார் வேண்டிய வரம் யாது?

சோழவளநாட்டிலே கடற்கரையின் வளங்களால் சிறப்புற்று விளங்குவது காரைக்கால் என்னும் திருப்பதியாகும். ஆங்கே அறப்பெருஞ் செல்வனாய் தனதத்தன் என்னும் வணிகர்குலத் தலைவன் ஒருவன் வாழ்ந்து வந்தனன். அவனுக்குப் புனிதவதி என்னும் பெண் மகவு பிறந்து நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துவருவாளாயினள். புனிதவதி முன்னை செய்த நல்வினைப் பயனால் இளமையிலிருந்தே முழுமுதற் கடவுளாகிய அம்மையப்பன்பால் மிகுந்த அன்புகொண்டு ஒழுகலாயினள்.

பேரழகு படைத்த புனிதவதியும் கல்வியறிவிற் சிறந்து மணப்பருவத்தை அடைந்தனள். காரைக்காலையடுத்த நாகை நகரில் வாழ்ந்த நிதிபதி என்னும் பெருவணிகனுக்குப் பரமதத்தன் என்னும் புதல்வன்

ஒருவன் இருந்தனன். அவன் செல்வத்திலும் கல்வியிலும் சிறந்து விளங்கினபடியால் தனதத்தன் தன் மகள் புனிதவதியைப் பரமதத்தனுக்கு மணம்புரிவித்து மகிழ்ந்தான்.

பரமதத்தன் தன் மாமனாரின் பெருவிருப்பின்படி காரைக்காலிலேயே தனி மனையொன்றில் வாழ்ந்துவரலாயினன். புனிதவதியும் கற்பொழுக்கங்களால் தன்னைக் காத்தும், தற்கொண்டானைப் பேணியும் இல்வாழ்க்கையினை வளமுற நடத்திவந்தனள். அவள் சிவனடியார்களைக் காணப்பெறின், அவர்களை அன்புடன் வரவேற்று உபசரித்து, உணவருத்தி மகிழ்வாள். புனிதவதியின் பெயருக்கேற்ப உள்ளமும் புனிதம்; வாழ்க்கையும் புனிதம்; ஒழுக்கமும் புனிதம்.

இங்ஙனமிருக்கையில் ஒரு நாள், பரமதத்தனிடம் காரிய மூலமாக வந்த சிலர் அவனுக்கு இரண்டு மாம்பழங்கள் கொடுத்தனர். அவன் அவற்றைப் புனிதவதியாரிடம் அனுப்ப, அவர் அவற்றை வாங்கிவைத்திருந்தார். பின்பு, சிவனடியார் ஒருவர் பசியினால் வருந்திவரவே, அம்மையார் அவருக்கு உணவளித்து உபசரித்ததோடு, அம் மாம்பழங்களில் ஒன்றையும் அவரது உண்கலத்திலிட்டுத் திருவமுது செய்வித்தார்.

பின்னர் வீட்டிற்கு வந்த கணவனார்க்கு அறுசுவையுண்டி படைத்து எஞ்சியிருந்த மாங்கனியையும் கலத்திலிட்டனர். மாங்கனியின் சுவையில் ஈடுபட்ட பரமதத்தன் மற்றொரு கனியையும் கொண்டுவருமாறு கூறினன். அம்மையார் நடந்ததைக் கூற இயலாதவராய் உள்ளே சென்று, "பாற்கடலில் எழுந்த ஆலகால விடத்தை யருந்தித் தேவர்களைக் காத்த நீலகண்டனே, நீர்தான் அடியாளைக் காப்பாற்றவேண்டும்." என அரனை வேண்டிக்கொண்டனர். அடியார்க்கெளியனாகிய சிவபெருமான் அம்மை-

யாரின் கைகளில் ஓர் அரிய மாம்பழத்தைத் தோன்றச் செய்தார். அம்மையாரும் மகிழ்ந்து அதனைத் தம் கணவர்க்கு இட்டனர்.

அதனை யுண்ட பரமதத்தன் அக்கனியின் தெய்வீக இனிமையைக் கண்டு வியந்து 'அஃது ஏது' என்று வினவினன். ஈசன் ஈந்ததைப் புனிதவதியார் தெரிவிக்கப் பரமதத்தன் அதனை நம்பாதவனாகி, "இக்கனி சிவபெருமானுடைய திருவருளினாற் கிடைத்ததாயின் பின்னுமொரு கனியை அவர் திருவருளினாலேயே தருவித்துத் தா" என்றான். புனிதவதியார் அவ்விடத்தை விட்டு அகன்று, உள்ளே சென்று மங்கைப் பாகனைத் துதித்து, "அடியார்க் கெளியனே! இன்னுமொரு கனி ஈந்தருளாவிடில் அடியேனுடைய வார்த்தை பொய்யாகிவிடும்" என்று விண்ணப்பஞ்செய்ய, இறைவனது திருவருளினாலே பின்னுமொரு மாங்கனி அவர் கையகத்து உற்றது. அம்மையார் அக்கனியைத் தம் கணவனது கரத்திற் கொடுக்க, அவன் பெரு வியப்படைந்து அதை வாங்கினான். வாங்கினவளவிலே, அது மறைந்துபோயிற்று.

அப்பொழுது பரமதத்தன் மனந் திடுக்கிட்டு அன்று முதல் புனிதவதியாரை மானிடப் பெண் அல்லள் என மதித்து, அவரோடு இல்லற வாழ்க்கையில் இருக்க அஞ்சினன். அவரைத் தம் வழிபடுந் தெய்வமாகவே கருதினான். பின்னர் வாணிபஞ் செய்து பொருள் தேடிவரச் செல்பவன்போல அம்மையாரைப் பிரிந்து சென்றான்.

சென்றவன் கடல் கடந்து வாணிபம் செய்தான்; பெரும் பொருள் ஈட்டினான்; மீண்டும் காரைக்காலுக்குச் செல்லாது, பாண்டிய நாட்டில் ஒரு பட்டினத்தே தங்கினான். அங்கே ஒரு வணிகர்குல மகளை மணந்து வாழ்க்கை நடத்திவரலாயினன். அவர்கட்கு ஒரு பெண் மகவு

பிறந்தது. அக்குழந்தைக்குத் தான் தெய்வமாக மதித்துவந்த புனிதவதியாரின் பெயரைச் சூட்டி மகிழ்வானாயினன்.

பரமதத்தன் இங்ஙனமாகப் பாண்டிய நாட்டில் வாழ்ந்து வருதலை உணர்ந்த புனிதவதியாரின் உறவினர் அம்மையாரைப் பரமதத்தன்பால் அழைத்து ஏகினர். அம்மையாரின் வரவினையறிந்த பரமதத்தன், மனையாளும் மகளும் உடன்வர விரைந்து எதிர்சென்று அவர் அடிமலர்களில் வீழ்ந்து வணங்கினான். அம்மையார் அச்சமுற்று விலகவே சுற்றத்தார் அதிசயித்து நின்றார்கள். பரமதத்தன் அங்கிருந்த சுற்றத்தார்கட்கு அம்மையாரின் தெய்வீக நிலையைப் புலப்படுத்தி அவர்களையும் வணங்கச் செய்தான்.

பின்பு, கணவனால் மனைவிமுறையினின்றும் மறுக்கப்பட்ட புனிதவதியார் கயிலையைக் காண விழைந்து அதனை நோக்கி நடந்தனர். கயிலைமலையை அணுகவும் அதனைக் காலால் மிதித்தற்கு அஞ்சித் தலையால் நடந்து சென்றனர். இச்செயலைக் கண்டு வியந்த உமையம்மை பரமனை நோக்கி "இவர் யாவர் ?" என்றனர். பரமனும் "இவர் நம்மைப் போற்றும் அம்மை"யெனக் கூறித் தம் வாயால் அன்பு ததும்ப "அம்மையே" அன அழைத்தனர். அக்காரணம்பற்றிப் புனிதவதியாருக்குக் காரைக்காலம்மையார் என்ற பெயர் வழங்கலாயிற்று. அம்மையாரும் "அப்பா" எனக் கூறி அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர். சிவபெருமான் அம்மையாரை நோக்கி "நினக்கு வேண்டும் வரம் யாது ?" என்று வினவினர். அதற்கு அம்மையார், "ஐயனே! நின்பால் இறவாத இன்ப அன்பு வேண்டும். இனிமேல் உலகில் பிறவாமை வேண்டும். ஒருக்கால் பிறப்பினும் உன்னை என்றும் மறவாமை வேண்டும். மேலும் பெருமானே! தேவரீர்

திருநடனம் ஆடுங்கால் உமது திருவடி நீழலின் கீழிருந்து உம்மை மகிழ்ச்சியுடன் பாடிக்கொண்டிருக்கும்படியான பெருவாழ்வினையும் எனக்களித்தல் வேண்டும். வேறு ஒன்றும் வேண்டிலேன்" என இறைஞ்சி நின்றார். அம்பலவாணன் அங்ஙனமே அருளிச் செய்து திருவாலங் காட்டில் தம் நடனத்தைக் கண்டு பேரானந்தத்தோடு பாடிக்கொண்டிருக்கும் பெருவாழ்வினையுந் தந்தருளினார்.

புனிதவதியார் சிவபெருமான் அருளிய ஞானத்தைக் கொண்டு மூத்த பதிகம், அற்புதத் திருவந்தாதி, திருவிரட்டை மணிமாலை முதலிய நூல்களை இயற்றியுள்ளார். சைவ நாயன் மார்கள் அறுபத்துமூவரில் ஒருவராகிய இவரது வரலாறு பெரிய புராணம் என்னும் அரிய நூலில் விரிவாகக்கூறப்பட் டிருக்கிறது.

பயிற்சி

அருஞ் சொற்கள்: அறப்பெருஞ்செல்வன் - நல்லவழியில் பெரும் பொருள் தேடியவன். அம்மையப்பன், மங்கைப் பாகன் - உமையை இடப்பாகத்தில்கொண்ட சிவபெருமான். தற்கொண் டான் - தன்னைக்கொண்டவன், கணவன். அறுசுவை - இனிப்பு, கைப்பு, புளிப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்ற ஆறு சுவைகள். இறவாத - நீங்காத. நீழல் - நிழல். பட்டினம் - கடற்கரை ஊர்.

கட்டுரை :

1. இப்பாடத்திலுள்ள ஒவ்வொரு பத்திக்கும் ஏற்ற தலைப்புப் பெயர் அமை.

2. பின்வரும் சொற்றொடர்களைச் சொந்த வாக்கியத்தில் அமைத்துக் காட்டு :

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும்; முன்னை செய்த நல்வினைப் பயன்; தற்கொண்டான்; திருவமுது செய்வித் தார்; தெய்வீகத் தன்மை; அடியார்க்கு எளியன்; வழிபடுந் தெய்வம்; இறவாத அன்பு; இல்லற வாழ்க்கை.

9. நான் பார்த்துவந்த பழைய நகரம்

மயிலாப்பூர்,
30-10-49.

அன்பார்ந்த நண்ப,

நலம். நலமறிய அவா. தொழிலினல் களைப்புற்ற மக்கள் உல்லாசப் பயணம் போய்வருதல் அவர்கட்கு ஓய்வும் உற்சாகமும் அளிக்கும் அல்லவா? இக்கருத்தைக் கொண்டு ஒவ்வொரு சனி, ஞாயிறுகளில் மகாபலிபுரத்துக்குத் தனி மோட்டார் பஸ் அரசியலார் ஆதரவில் சென்னையிலிருந்து போய்வருவதை நீ கேள்விப்பட்டிருக்கலாம். நானும், தங்கை கற்பகவல்லியும் அத்தகைய பஸ் ஒன்றில் மகாபலிபுரம் போய்விட்டு இன்று மாலை ஊர் திரும்பினேம்.

மகாபலிபுரம் சென்னை மா நகருக்குத் தெற்கே சுமார் முப்பது கல் தொலைவில் கடற்கரையில் இருக்கின்றது.

1 உழக்கெண்ணெய்ப்பெருமான் கோவிலும் கல் இரதங்களும்

2 சிற்ப உருவங்கள் அமைந்த கற்பாறை

இவ்வூர் சிற்பக் காட்சிகளுக்குப் பெயர்பெற்றது. ஆதலால் அவைகளைப் பார்க்கும்பொருட்டுத் திரளான மக்கள் இங்கு வந்து போகின்றனர்.

அவண் நாங்கள் முதலில் பார்த்தது உழக்கெண்ணெய்ப் பெருமான் கோவில் என்னும் குகைக் கோயிலாகும். இதன் முன்புறம் ஆறு தூண்களோடு விளங்குகின்றது. இத்தூண் களும் உள் மண்டபமும் ஒரு பெரிய பாறையைக் குடைந்து ஆக்கப்பட்டவை. மண்டபத்தின் நடுச்சுவரில் சிவபெருமான் உமையம்மையுடன் அமர்ந்திருக்கும் அரிய காட்சியைக் காண்கிறோம். அம்மையின் மடியில் குழந்தை முருகன் விளங்குகின்றான். இறைவனுக்குப் பின்புறத் தில் அரியும் அயனும் கைகூப்பி நிற்கின்றனர்.

இக்கோயிலின் தென்புறச் சுவரில் துர்க்காதேவி மகிடாசுரனுடன் போரிடும் காட்சி காணத்தக்கதாகும். கையில் வில்லேந்தி அரக்கன்மீது அம்பைச் செலுத்தும் நிலையில் அமைந்திருக்கும் சிற்பநுட்பம் வியக்கத்தக்கது. மண்டபத்தின் வடபுறச் சுவரில் திருமால் அரியணைமீது அமர்ந்து அறிதுயில் கொள்வதைக் காணலாம்.

உழக்கெண்ணெய்ப் பெருமான் ஆலயத்தினுச்சியில் ஒரு விமானம் இருக்கிறது. முற்காலத்தில் இவ்விமானத் தில் பெரிய விளக்குகளை ஏற்றிவைத்துக் கடலிற் செல்லும் மரக்கலங்களை எச்சரிப்பது வழக்கம். ஆனால் இதற்கரு கில் புதிய கலங்கரை விளக்கம் ஒன்று அமைத்தபிறகு இவ்விமானத்தில் விளக்குகளை எரியவிடுவதில்லை.

பின்னர், சிறிது தூரம் தெற்கே சென்று பஞ்ச பாண்டவர் இரதங்கள் எனப் பெயர்பெற்ற கற்கோவில் களைக் கண்ணுற்றோம். இவை ஒவ்வொன்றும் ஒரே கல்லிற் செதுக்கியமைத்த தனிக் கோயிலாகும். இந்த இரதங் களுள் மிகப் பெரிது தருமராசன் இரதம். இதனை யடுத்து முறையே பீமசேனன் இரதம், அர்ச்சுனன் இரதம், நகுல சகதேவர் இரதங்கள், பாஞ்சாலி இரதம் என்ற இரதங் கள் இருக்கின்றன. பாஞ்சாலி இரதத்தின் முன்புறத்தில்

ஒற்றைக் கல்லில் செதுக்கப்பெற்ற யானையின் உருவச் சிலையும், சிங்கத்தின் உருவச்சிலையும் பொலிவுடன் தோன்றுகின்றன.

அடுத்தபடியாக, வடக்கே சிறிது தூரம் சென்று வராகப்பெருமாள் குகைக் கோவிலைப் பார்த்தோம். அதனையடுத்து அழகிய சிற்பங்கள் பல செதுக்கியுள்ள பெரும்பாறையொன்று இருக்கின்றது. அதன் நடுவில் ஒற்றைக்காலில் நின்று தவஞ்செய்யும் ஓர் உருவத்தைக் காண்கிறோம். இதை அர்ச்சுனன் தவநிலை என்றும், பகீரதன் கங்கையை வரவழைக்கும்பொருட்டுச் செய்யும் தவநிலை என்றும் கூறுகின்றனர். அண்மையிலுள்ள நீர்ச்சுனை பிந்திய கருத்தை வலியுறுத்துவதாகும். இப் பெரும்பாறையில் மனித உருவங்களும், தெய்வ உருவங் களும், மிருக உருவங்களும் காண்போர் கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவருமாறு அமைந்துள்ளன.

அங்கிருந்து தல சயனப்பெருமாள் ஆலயத்திற்குச் சென்றோம். இது ஒரு சிறந்த வைணவத் தலமாகும். திருமங்கையாழ்வாரால்,

“............... கடல்மல்லைத் தலசயனம்
வணங்கும்மனத் தாரைநீ வணங்(கு) என்தன் மடநெஞ்சே”

என இத்தலம் பாடப்பெற்றுள்ளது.

இறுதியாக, நாங்கள் கண்டது கடலோரத்திலுள்ள கற்கோவில் ஆகும். இதன் புறச்சுவர்களின்மீதும், சில வேளைகளில் கோவிலின் உள்ளும் கடல் அலைகள் வந்து மோதுகின்றன. இந்த ஆலயத்தில் நின்றுகொண்டு

கடலை நோக்கும்பொழுது ஓயாமல் ஆரவாரித்து முழங்கிக் கொண்டிருக்கும் அலைகளின்கீழ்ப் பழமையான நகர் ஒன்று மூழ்கிக் கிடக்கின்றது என்பதை நாம் நினைத்துக் கொள்ளவேண்டும். ஏனென்றால், பல நூற்றாண்டுகளுக்கு முன்னே பழைய மகாபலிபுரம் என்னும் பட்டினத்தைக் கடல்கொண்டதென்பது சரித்திர ஆராய்ச்சியால் தெரிய வருகிறது.

இவ்வாறு உயிரற்ற பாறைகளுக்கும் கற்களுக்கும் உயிரமைத்துத் தருதற்குக் காரணமாக இருந்தவன், ஏழாம் நூற்றாண்டில் காஞ்சீபுரத்தில் ஆட்சிசெய்த பல்லவ மன்னனான நரசிம்மவர்மன் ஆவான் என்று ஆராய்ச்சியால் தெரியவருகிறது. இம் மன்னவன் பகைவர் பலரை வென்று 'மாமல்லன்' என்ற சிறப்புப்பெயர் பெற்றவன். ஆதலால் அவனது துறைமுகப்பட்டினமாகிய இவ்வூருக்கு மாமல்லபுரம் என்ற பெயர் வந்ததுபோலும். பின்னர், அது மகாபலி ஆண்ட ஊர் எனக் கருதப்பட்டு, மகாபலிபுரம் என இப்பொழுது அழைக்கப்படுகிறது. இவ்வூர்ச் சிற்பங்களின் அழகினை நோக்கும்போது பண்டைத் தமிழ் மக்களின் கலைத்திறனும், அதனைப் போற்றி வளர்த்த மன்னர்களின் கலையுணர்வும் நன்கு புலப்படுகின்றன.

வாழ்க ! வளம் பெறுக !

இங்ஙனம்

நின் அன்பார்ந்த நண்பன்

மணிவாசகன்

முகவரி :

திரு. இராமலிங்கம்,

12, தெற்கு வீதி,

திருவானைக்கா.

பயிற்சி

[நம் நாட்டுச் சிற்பக் கலையின் சிறப்பை எடுத்துக்காட்டுவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : சிற்பம் - கல், உலோகம் முதலியவற்றால் உருவங்கள் செய்தல். அவ்வித உருவங்கள் செய்பவர்கள் சிற்பிகள் எனப்படுவார். அறிதுயில் - யாவற்றையும் உணர்ந்து கொண்டே தூங்கும் தூக்கம். பொலிவு - அழகு. அண்மை - அருகாமை. திருமங்கையாழ்வார் - வைணவ ஆழ்வார்களில் ஒருவர். தலசயனம் - பூமியில் படுத்திருக்கும் நிலை. மல்லன் - வலியன். பட்டினம் - கடற்கரை ஊர். பட்டணம் - நகரம். பாஞ்சாலி - திரௌபதி.

கருத்துணர்தல் :

1. கடிதம் எழுதுவதில் அமையவேண்டிய முக்கியத் தலைப்புக்கள் யாவை ?

2. உல்லாசப் பயணம் போவதை ஊக்கும் வகையில் அரசியலார் செய்திருக்கும் ஏற்பாடு என்ன ?

3. உழக்கெண்ணெய்ப் பெருமான் கோவிலில் காணப்படும் சிற்ப நுட்பங்களை விவரிக்கவும்.

4. 'பஞ்சபாண்டவ இரதங்கள்' — இவை யாவை ?

5. வராகப்பெருமாள் கோயிலை அடுத்துள்ள பெரும்பாறையில் காணக்கூடிய சிற்பங்கள் யாவை ?

6. கடற்கரைக் கோவிலில் நின்று கடற்கரையை நோக்குவார்க்கு எழும் நினைவு யாது ?

கட்டுரை :

நீ பிறந்த ஊரைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் வரைக. (ஒரு பக்க அளவில்)

10. ஓவியர்மணி இரவி வர்மா

1. மலரினில், நீல வானில்,
மாதரார் முகத்தில் எல்லாம்
இலகிய அழகை யீசன்
இயற்றினன்; சீர்த்தி யிந்த
உலகினி லெங்கும் வீசி
யோங்கிய இரவி வர்மன்
அலகிலா அறிவுக் கண்ணால்
அனைத்தையும் நுகரு மாறே.

2. மன்னர்மா ளிகையில், ஏழை
மக்களின் குடிலில் எல்லாம்
உன்னருந் தேசு வீசி
உளத்தினைக் களிக்கச் செய்வான்
நன்னரோ வியங்கள் தீட்டி
நல்கிய பெருமான், இந்நாட்
பொன்னணி யுலகு சென்றான்
புவிப்புகழ் போது மென்பான்.

3. அரம்பையூர் வசிபோ லுள்ள
அமரமெல் லியலார் செவ்வி
திறம்பட வகுத்த வெம்மான்!
செய்தொழி லொப்பு நோக்க
விரும்பியே கொல்லாம் இன்று
விண்ணுல கடைந்து விட்டாய்?
அரம்பையர் நின்கைச் செய்கைக்
கழிதல்அங் கறிவை திண்ணம்.

— பாரதியார்

பயிற்சி

[சித்திரம் எழுதுவதில் ஒப்புயர்வற்று விளங்கிய நம் நாட்டு இரவி வர்மாவைப்பற்றிய இப்பாடலைப் படிப்பது, மாணவர்கட்கு அக்கலையைப் பயிலுவதில் சுவையூட்டுமென்று கருதப்படுகிறது.]

அருஞ்சொற்கள் : ஓவியர்மணி - சித்திரம் எழுதுவதில் சிறந்தவர். இலகிய - விளங்கிய. சீர்த்தி - கீர்த்தி. அலகிலா - குறைபாடு இல்லாத. உன்னுதல் - நினைத்தல். தேசு - ஒளி. அணி பொன்னுலகு - அழகிய தேவலோகம். அமர மெல்லியலார் - தேவ உலகப் பெண்கள். செவ்வி - அழகு. எம்மான் - எமது தலைவன். (கொல் - அசைச்சொல்). அழிதல் - தோல்வியுறுதல்.

விளக்கக் குறிப்பு :

ஓவியர்மணி இரவி வர்மா திருவனந்தபுரம் அரசர் குடும்பத்தில் பிறந்தவர். அவர் 1906-ல் காலஞ்சென்றபொழுது, இரங்கற்பாவாகப் பாரதியார் இப்பாக்களைப் பாடினர்.

கருத்துணர்தல் :

1. ஓவியர்மணி இரவி வர்மாவின் உருவப் படத்தை உற்று நோக்குக. அவரது முகத்தோற்றத்திலிருந்து நீ என்ன அறிகின்ருய்? அவர் இந்து மதத்தினர் என்பதை எவ்வாறு ஊகிக்கிருய்?

2. இரவி வர்மா அனைவரும் நுகருமாறு செய்தது என்ன?

3. அவரது ஓவியங்கள் எங்கெங்கு மிளிர்கின்றன?

4. இரவி வர்மா விண்ணுலகு அடைந்ததற்குப் பாரதியார் காட்டும் காரணம் என்ன?

கட்டுரை : இரவி வர்மா தீட்டிய படங்களில் நீ பார்த்துள்ள ஒன்றை விவரித்து, ஒரு பத்தி வரைக.

---

11. நட்புப் பிரித்தல் (பஞ்சதந்திரம்)

[ஒரு காட்டில் **பிங்களன்** என்ற சிங்கமொன்று வாழ்ந்து வந்தது. அது **சஞ்சீவகன்** என்ற எருதுடன் மிகவும் நட்புக்கொண்டு மற்றைய மிருகங்களை மதியாமல் இருந்தது. அதனுல், அவற்றின் நட்பிலே பிளவு உண்டுபண்ணவேண்டுமென்று அதன் அமைச்சன் மகனை **தமனகன்** என்ற நரியானது காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. ஒருநாள் **தமனகன** மிருகேந்திரனை பிங்களனிடம் சென்று அடிபணிந்து நின்றது.]

பிங்களன் :— தமனகா! வருக. என்னவேண்டி இங்கு வந்தாய்?

தமனகன் :— ஐயனே! வணக்கம். தங்கட்கு இன்றைக்கு ஒரு பொல்லாங்கு நேரிட இருக்கின்றது. அதனை யான் அறிந்து, தங்கள் கட்டளை இல்லாமலேயே தங்களிடம் தெரிவிக்க வந்துள்ளேன்.

பிங்களன் :— பொல்லாங்கா? அஃதென்ன? விரைவாகச் சொல்.

தமனகன் :— சுவாமி! உமது நண்பனாகிய சஞ்சீவகன் உம்மிடம் அன்புடையவன்போல நடித்து, உமது அரசைக் கைப்பற்றத் திட்டமிட்டு வருகின்றான். இதை நீர் நம்பாமல் பொய்யென மதித்து, என்மீது கோபமுற்றாலும் அல்லது என்னைத் தண்டித்தாலும் யான் அதை அன்புடனே ஏற்றுக்கொள்வேன். மன்னவனுக்குத் துன்பம் நேரும்போது, தன்னலத்தைக் கருதாமல், நல்ல உபாயங்களை எடுத்துக் கூறி, செய்யத்தக்க செயல்களைச் செய்வித்தல் அமைச்சருக்கு உரிய தொழிலாதலின், யான் இதை உமக்குத் தெரிவிக்கின்றேன்.

பிங்களன் :—என்ன! நீ கூறுவது விந்தையாகவன்றோ இருக்கிறது!

தமனகன் :—ஆம். விந்தைதான். நீர் அவனை முதல் அமைச்சனாக ஆக்கியுள்ளீர். அதனால் எனக்கு ஒன்றும் குறைவு ஏற்படவில்லை. அரசனும் பிரதானியும் சரிசமானமாக இருப்பாராயின் இராசலட்சுமி அவர்களில் ஒருவனைக் கைவிடுவாள் என்பது அறிஞர்கள் கண்ட உண்மையாகும். மேலும், மன்னவன் தன் கீழிருப்பவர்களுள் ஒருவனை மட்டும் தன் முக்கியப் பிரதானியாக ஆக்குவானாயின், அப்போது அந்தப் பிரதானிக்குக் கர்வமுண்டாகிறது. அவன் சுதந்திரனாய், அரசைக் கவர ஆசையுற்று, வேந்தனைக் கொன்றுவிடவும் விரும்புகின்றான். இப்படிப்பட்டவனை உடனே அழித்துவிடுதல் வேண்டும். இல்லாவிடில் அவனால் தீங்கு நேரிடும். இதனைத் தங்களுக்கு எடுத்துச்சொல்லவும் வேண்டுமோ? தாங்கள் எல்லாம் அறிந்தவர். உலகத்தில் செல்வத்தை விரும்பாதவனும் உண்டோ?

பிங்களன் :— தமனகா! நீ என்ன கூறினும் சஞ்சீவகனிடம் எனக்கிருக்கின்ற நட்பு குறையாது. நண்பர்கள் தம் அறியாமையால் தீங்கு பல புரிந்தாலும், அறிவுடையோர் அதைப் பொருட்படுத்தமாட்டார்கள்.

தமனகன் :— பெருமானே! தாங்கள் அறியாது கூறுகின்றீர்கள். இதனால் உமக்கு அபாயம் நேரிடும். அறிஞர் கூறும் நல்லுரையைக் கேளாமல் துட்டர் புத்தியைக் கேட்கிறவன், 'மருந்து தின்ன மறுக்கின்ற நோயாளியைப்போல்' துன்பத்தை அடைவான். காதுக்கு இனிமையாயும் நன்மை தரக்கூடியதாயும் இருக்கின்ற சொற்களைக் காணுவது அருமையாகும். தீயவர் சொற்கள் செவிக்கு இனிமை தருவனவாக இருப்பினும் அவற்றைக் கேட்கலாகாது.

பிங்களன் :— என்னால் அபயங் கொடுத்துக் காக்கப்பட்டவன் எனக்குத் தீங்கு செய்யவும் நினைப்பானா? தமனகா! என்ன உன் பேச்சு?

தமனகன் :— தீயவரை எவ்வளவுதான் திருத்தினாலும் திருந்துவரோ? நாயின் வாலை நிமிர்த்த இயலுமா? வேம்பிற்குப் பால் வார்த்து வளர்த்தாலும் அதன் கசப்பு மாறிவிடுமோ? எவ்வகையிலும் மற்றவர்க்கு நன்மை புரிவதுதான் சான்றோரது கடமையாகும். ஆகையால் தாங்கள் கேளாமலிருந்தும் இவ்வரலாற்றைக் கூறினேன். இனி, என்மேல் குற்றமில்லை. சில வேளைகளில் அரசர்கள் அற்பர்கள் புத்தியைக் கேட்டு அல்லற்படும்போது காரியக்காரர்மீது குற்றஞ் சுமத்துகிறதுண்டு; ஆகையாற் சொன்னேன்.

பிங்களன் :— அப்படியானால், நான் இதைச் சஞ்சீவகனுக்குக் கூறி அவனை நல்வழிப்படுத்துகிறேன்.

தமனகன் :— கூடாது. அவன் இதை அறிவானாயின் முன் எச்சரிக்கையுடன் வேறொரு சூழ்ச்சியினால் தீங்கு புரிய வழி தேடுவான். ஆகையால் இதை அவனிடம் சொல்லாதிருத்தலே நலம். மன்னரின் மந்திராலோசனை இரகசியமாகவே இருத்தல்வேண்டும்.

பிங்களன் :— அச் சஞ்சீவகன் விரோதப்பட்டு என்னை என்ன செய்ய இயலும்? அவன் ஆற்றல் எம்மாத்திரம்?

தமனகன் :— நாம் அவனை அறியமாட்டோம். அவனது வலிமையும் தன்மையும் நமக்கு எப்படித் தெரியும்? ஒருவனது குணத்தை யறியாமல் அவனுடன் நட்புக்கொள்ளுதல் கூடாது.

பிங்களன் :— அந்தப் பொல்லாத சஞ்சீவகனின் உட்கருத்தை நான் எவ்வாறு உணரமுடியும்? அறிந்தால் அதற்கேற்றவாறு எச்சரிக்கையுடன் இருப்பேன் அல்லவா?

தமனகன் :— அவன் தங்களைக் கொல்லச் சமயம் பார்த்துவருகின்றான். தங்கள் முன்னிலையில் வரும்போது தன் கொம்புகளை முன்னிட்டுக்கொண்டு வருவானாயின், அதுவே அவன் தங்களைக் கொல்லும்பொருட்டுக்கொண்ட குறிப்பாகும்.

பிங்களன் :— தமனகா! யான் இதுவரையிலும் அறியேன். இன்று பார்க்கின்றேன். அவன் அவ்வாறு என்னைக் கொல்லுங் குறிப்புடன் வருவானானால் இன்றே அவனைத் தொலைத்துவிடுகின்றேன். சென்று வருக.

பின்னர், தமனகன் தன் கருத்து ஒருவாறு பலித்தது என்று மகிழ்ந்தது. சஞ்சீவகனையும் சிங்கத்தினிடம் மனவேறுபாடு கொள்ளுமாறு செய்யக் கருதி அவனிடம் சென்றது.

சஞ்சீவகன் :— நண்பா ! நலந்தானே ?

தமனகன் :— சேவகனுக்குச் சுகமெங்கே யிருந்து வரும்? வாழ்வும் தாழ்வும் கூடவே யிருக்கின்றன. அரசனுக்கு அன்புடையராய் யாரிருக்கின்றார்கள் ? ஆதலால், தனக்கு நண்பன் யாவன்? தன் வலி எவ்வளவு என்று எப்போதும் விசாரித்துக்கொண்டிருக்க வேண்டும்.

சஞ்சீவகன் :— ஏன் இப்படிச் சொல்லுகிறாய் ?

தமனகன் :— அரசாங்கக் காரியத்தி லுண்டாகும் சூழ்ச்சிகளை மற்றவரோடு சொல்லலாமோ? மன்னவன் அறிந்தாற் கொன்றுவிடுவான். ஆனாலும் நீ என்னிடம் கொண்ட நம்பிக்கையாலே, சிங்கத்தோடு நட்புக்கொண் டாயாதலின் உனக்கு இதனைச் சொல்லுகிறேன். அந்தச் சிங்கம் உன்மேல் மிகவுங் கோபங்கொண்டு உன்னைக் கொன்று, தன் சேனைக்கெல்லாம் நல்ல விருந்திட நினைத்திருக்கின்றது. யாதொன்று நேரிடுமோ அதற்குத் தக்கவாறு நடக்கவேண்டும்.

சஞ்சீவகன் :— நீ சொன்னதெல்லாஞ் சரிதான். உலகத்திலும் அவ்வாறே நிகழ்ந்துவருகின்றது. சாதாரண மாய் வேந்தர்கள் தீயவர்களைப் பரிபாலிக்கின்றார்கள் ; தீயவன்பால் மிகவும் நட்புக்கொண்டால் அவன் வேறுவித மாக நினைக்கின்றான் ; குருடனுக்குக் கண்ணாடியைக் காண்பித்தாலும், செவிடன் காதில் உபதேசித்தாலும் அவற்றை அவர்கள் மாறுபாடாகவே நினைப்பார்கள் ; தீயவனும் அப்படியே நினைக்கின்றான் ; எப்படிச் சந்தன மரம் பாம்போடு கூடியிருக்கிறதோ, எவ்வாறு தாழை முட்களோடு கூடியிருக்கிறதோ அவ்விதமாகவே, பெரும் பாலும் அரசர்கள் தீயவர்களாற் சூழப்பட்டிருக்கிறார்கள். ஆகையாற்றான் இப்படிப்பட்ட பொல்லாங்கு நமக்கு நேரிட்டது.

தமனகன் :— அந்தச் சிங்கத்திற்கு வாய்ப்பேச்சு இனிமையேயல்லாமல் மனது மிகவுங் கொடுமை நிறைந்ததுதான். கடலைக் கடக்க கப்பல் இருக்கின்றது; இருட்டைப் போக்க விளக்கு உண்டு; யானையை அடக்க அங்குசம் அமைந்துள்ளது; ஆனல் தீயவர்களின் மனத்தை அடக்க யாதொன்றும் இல்லையே!

சஞ்சீவகன் (பெருமூச்செறிந்து):— பெரிய தீவினை நேரிட்டிருக்கிறது. இதினின்று தப்பித்துக்கொள்ள எனக்கும் ஆற்றல் இல்லை. யமனுடைய வாயில் அகப்பட்டவன் எப்படித் தப்பிப் போவான்? எப்படியொரு குற்றமுமில்லாத ஒட்டகத்தைக் காகம் முதலானவை கூடிக் கொலை செய்தனவோ, அப்படியே, வஞ்சனை பண்ணுகிற தீயவர்கள் ஒருவனிடத்திற் குற்றமில்லாதிருக்கவும் அவனைக் கொலை செய்கிறார்கள். ஆகையால் எங்கே கீழ்களிருப்பரோ அங்கே சுகமிராது; உயிருக்கு அழிவு வருமென்றே நினைக்கவேண்டும். இங்கும் அவ்வாறே அமைந்திருக்கிறது. தீயவர் கையிலகப்பட்டு மடிவதைக் காட்டிலும் சண்டை செய்வதே சிறந்ததாகும். ஒருவன் போர்முனையில் மரித்தால் வீர சுவர்க்கமடைகின்ருன். ஆகலால் வீரர்களுக்குச் சாவும் பிழைப்புஞ் சமமேயாம்.

தமனகன் :— பகைவர்களுடைய பலத்தை யறியாமல் பகைத்துக்கொள்ளுகின்றவன், சிட்டுக் குருவியினல் சமுத்திரம் அவமானமடைந்தது போன்று அவமானமடைவான். ஆகையால் எதிரிகளுடைய பலமறியாமற் பகைத்துக்கொளளலாகாது. இஃது அந்தச் சிங்கத்திற்குக் கர்வத்தால் தெரியவில்லை.

சஞ்சீவகன் :—நல்லது; அந்தச் சிங்கத்தின் சண்டைக் குறிப்பு எப்படியிருக்கும்? சொல்.

தமனகன் :— எப்போது அவன் காதுகளைத் நெரித்துக் கொண்டு வாலைத் தூக்கிவருவானே, அப்போது, கொல்ல நினைத்தா னென்றறியவேண்டும். அக்காலத்தில் அப்படியே நீயு மவனுக்கு முன்னே கொம்புகளை நீட்டிச் செல்லவேண்டும். சுத்த வீரனாகிய உனக்குத் தெரியாததா? எல்லாந் தெரிந்தவர்களுக்குச் சொல்வானேன்?

(இருவரும் பிரிகிறார்கள்)



[சிறிது பொழுது கழித்துத் தமனகன் பிங்களனிடம் சென்றபோது அச் சிங்கம் சஞ்சீவகனோடு போரிட்டு அதைக் கொன்றுவிட்டு வருத்தத்துடன் உட்கார்ந்திருந்ததைக் கண்டது.]

தமனகன்:—பெருமானே! தாங்கள் பகைவனைக் கொன்று துக்கப்படுகின்றீர்கள். இது நியாயமல்லவே; பகைவரைக் கொல்லவேண்டுமென்றுதான் நீதி நூல்கள் கூறுகின்றன. தந்தையானாலும், உறவினனாயினும், புதல்வனானாலும், நண்பனானாலும் இவர்களில் எவன் தன்னைக் கொல்ல முற்படுகிறானோ அவனை அரசன்

கொல்லுதல் வேண்டும்; தீய நண்பனும், மாறுபாடுடைய சேவகனும், அசாக்கிரதையான மந்திரியும், நன்றியறியாத கீழ் மகனும் ஒறுக்கப்படவேண்டும். அதன்படியே தாங்கள் செய்தீர்கள். ஆகையால் கவலையைவிட்டு மகிழ்ச்சியுறுவீர்களாக.

[இவ்வாறு சொல்லித் தமனகன் சிங்கத்தை மகிழ்வித்தது. பிறகு மிருகேந்திரன், அந்தக் காட்டில் முன் போலத் தன் ஆட்சியை நடத்திக்கொண்டு மற்றைய மிருகங்களுடன் கூடி இனிது வாழ்ந்துவந்தது.]

பயிற்சி

[கட்டுக் கதைகளின் மூலம் சிறந்த கருத்துக்களைப் புகட்டும் பஞ்சதந்திரக் கதைகளைத் தழுவி உரையாடல் முறையில் எழுதப்பட்டது இப்பாடம்.]

அருஞ்சொற்கள்: மிருக + இந்திரன் - மிருகேந்திரன் - மிருகங்களுக்கு அரசன். கட்டளை - உத்தரவு. விந்தை - வேடிக்கை. பிரதானி - முதலமைச்சன். கவர்தல் - அபகரித்தல். அபயங் கொடுத்தல் - அண்டினவரை ஆதரிப்பதாக வாக்குறுதி கொடுத்தல். சான்றோர் - அறிஞர், மேலோர். அல்லல் - துன்பம். மந்திராலோசனை - மந்திரி முதலானவர்களுடன் கூடிச் செய்யும் ஆலோசனை. பரிபாலித்தல் - காத்தல். ஒறுக்கப் படுதல் - தண்டிக்கப்படுதல்.

கருத்துணர்தல்:

1. சிங்கம், எருது இவற்றின் நட்பினைப் பிரிக்கத் தமனகன் செய்த சூழ்ச்சி யாது?

2. மருந்து தின்ன மறுக்கின்ற நோயாளி; நாயின் வாலை நிமிர்த்த இயலாது; வேம்புக்குப் பாலூற்றி வளர்ப்பினும் கைப்பு மாறாது; குருடனுக்குக் கண்ணாடி காண்பித்தல்—இவைகளால் விளக்கப்பெறுவன யாவை?

3. நட்புப் பிரித்தல் என்ற தலைப்பு இப்பாடத்திற்கு எவ்வகையில் பொருந்தும்?

கட்டுரை:

1. பஞ்சதந்திரக் கதை எழுந்த வரலாற்றைக் கேட்டறிக.

2. ஒட்டகத்தைக் காகம் முதலியன கொன்ற கதை, சமுத்திரம் சிட்டுக் குருவியினால் அவமானமடைந்த கதை—இவற்றைக் கேட்டறிந்து சுருக்கத்தை எழுதிக்கொள்க.

12. எவரெஸ்டு மலைச் சிகரம் ஏறுதல்

"மன்னும் இமயமலை எங்கள் மலையே,
மாநில மீதிதுபோற் பிறிது இலையே"

என்று பாரதியார் சொந்தம் பாராட்டிப் புகழ்ந்து பாடியுள்ள இமயமலையிலேயுள்ள எவரெஸ்டு என்னும் கொடுமுடியே உலகத்திலுள்ள மலைச்சிகரங்களிலெல்லாம் மிக உயர்ந்தது. அது கடல்மட்டத்தினின்றும் 29,002 அடி உயரமுடையது. அதனைத் திபெத்தியர் 'பனி அன்னைத்தேவி' என்று அழைக்கின்றனர். அந்த எவரெஸ்டு மலைமீது ஏறினல் பனி அம்மனுக்குக் கோபம் வரும் என்பது திபெத்தியர் கருத்து.

திபெத்தியர்கள் இப்படி நினைத்தாலும் உலகத்தில் மனிதன் காலடி படாத இடமே இருக்கலாகாதெனக் கருதிப் பூமியின் எல்லாப் பாகங்களையும் தேடிக் கண்டறியத் தலைப்பட்ட மேனட்டார், எவரெஸ்டு மலைச் சிகரத்தின் மேலும் ஏறிவிடவேண்டுமென்று தீர்மானித்தனர். 1914-ம் ஆண்டு, பிரிகேடியர் ஜெனரல் ஸி. ஜி. ப்ரூஸ் எவரெஸ்டு மலைப் பயணத்துக்கு வேண்டிய ஒழுங்குகள் செய்து, மலை ஏறுவதில் தேர்ந்த மனிதர்களைக் கூட்டிச் சேர்த்தார். ஆனல் அவ்வாண்டு உலகப் பெரும்போர் ஆரம்பித்ததனலே, அவர் தாம் கொண்ட நோக்கத்தை நிறைவேற்ற முடியவில்லை. 1921-ம் வருஷம் கர்னல் ஹவ்வாடு பரி எவரெஸ்டு மலையின் அடிவாரங்களைப் பரிசோதனை செய்தார். 1922-ம் வருஷம் ஜெனரல் ப்ரூஸ் திரும்பவும் அம்மலையின்மேல் ஏற முயன்றார். அந்தத் தடவையிலும் அவரது முயற்சி பலிக்காமற்போயிற்று.

'முயற்சி திருவினையாக்கும்' என்னும் முதுமொழியைப் பொன்னெனப் போற்றிய ப்ரூஸ் திரும்பவும் 1924-ம் வருஷம் எவரெஸ்டு மலைச் சிகரப் பயணத்திற்கு ஆயத்தமானர். இம் முயற்சியும் கைகூடவில்லை. இந்த

முயற்சியிலேதான் மலைச்சிகர மேறுவதில் மிகவுந் திறமை வாய்ந்த மலோரியும், இர்வினும் உயிர் இழக்க நேரிட்டது. அத்துடன் ப்ரூஸ் என்பவரும் நோய்வாய்ப்பட்டு மலையேறும் முயற்சியைக் கைவிட நேர்ந்தது.

1933-ம் வருஷம் ஹ்யூ ரட்லெஜ் என்பவர் எவரெஸ்டு முயற்சிக்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து மலைச்சிகரம் ஏறுவதில் தேர்ந்தவர்களைத் துணையாகக்கொண்டு புறப்பட்டார். இவர்கள் அம்மலைச் சிகரத்தில் 28,190 அடி உயரம்வரை ஏறினர்கள். அதன் பின்னர் ரட்லெஜோடு சென்றவர்களிலே ஸ்மித் என்பவர் ஷிப்டன் என்பவரோடு எவரெஸ்டு மலையுச்சிக்குப் போகப் புறப்பட்டார். அவர் இந்த எவரெஸ்டு பயணத்தைப்பற்றி எழுதியிருக்கிற மிகவும் இரசமான செய்திகளில் சிலவற்றை படிப்போம்:

“எங்களது மலைச் செலவு பலருக்கும் பயித்தியச் செயலாகத் தோன்றலாம். ‘எதற்காக இப்படி உயிரைக் கொடுத்து இம்மலையுச்சியைக் கண்டறியவேண்டும்?’ என்று பலர் வினவலாம். முதலாவது, பூமியின் மேலுள்ள ஆகாயப் பரப்பின் வெப்பதட்ப நிலைகள் எவ்வாறு இருக்கின்றன என்று நிதானிப்பதற்கு மலைச் சிகர ஆராய்ச்சி மிகவும் பயன்படுகிறது; இரண்டாவது, பூமிப் படத்திலே எவரெஸ்டு மலைச் சிகரத்தின் விவரங்களைத் திட்டவட்டமாகக் குறிக்கமுடியாமல், ‘இன்னும் மனிதன் கண்டறியவில்லை’ என்று சொல்வதைத் தவிர்ப்பதற்காக இச்சிகரத்தை ஆராயவேண்டும். மூன்ருவதாக, மனிதன் இடையூறுகள் அனைத்தையும் எதிர்த்துப்போராடி வெற்றி வீரனக நிற்கவல்லவன் என்பதை நிலைநாட்ட முயலுவதாகும்.

“ சம நிலத்தில் வாழ்கிறவர்களுக்கு மிகவும் உன்னதமான மலைகளின் வெப்பதட்ப நிலைமை இன்னதென்று தெரியாது. இமயமலையில் எண்ணாயிரம் அடிகளுக்குமேலே தாவரங்களைக் காணமுடியாது. தாவரங்களும் மனித நடமாட்டமும் இல்லாத பனி மூடிய பகுதிகளில் எவ்விதமான பிராணிகளையும் பார்க்கமுடியாது. பதினாலாயிரம் அடிகளுக்கு மேலான பிரதேசங்கள் பனிக்கட்டி மயமாகவே இருக்கும். இந்த இடங்களில் தோன்றுகின்ற பேரொளி பார்ப்போர் பார்வையைக் கெடுத்துவிடும்.

“ கடல் மட்டத்திலிருந்து மேலே செல்லச் செல்ல, வாயுவின் கனங் குறைந்துபோகும். மனிதன் உயிரோடிருப்பதற்கு இன்றியமையாத பிராணவாயுவும் குறைந்து கொண்டே வரும். பிராணவாயு குறையக் குறைய மனிதனுடைய நுரையீரல் தன் அளவுக்கு அதிகமாக விரிந்து வேலைசெய்யத் தொடங்கும். ஆகையால், உன்னதப் பிரதேசங்களில் மூச்சுத் திணறும். மனிதனுக்குப் பிராணவாயு குறையும்பொழுது அவன் ஓர் அடி எடுத்துவைப்பது கூட முடியாத செயலாகும்.

“ இத்தகைய தன்மைகளோடு கூடிய குளிர் மிகுந்த கொடுமுடிகளில் ஏறுகிறவர்கள் அங்கங்கே தங்கித் தங்கள் உடலை வெப்பதட்பநிலைமைகளுக்கு ஏற்றவாறு பழக்கிக் கொள்ளவேண்டும். இதற்காக நாங்கள் அங்கங்கே பாளையம் அமைத்துச் சில நாட்கள் மட்டும் தங்கியிருப்போம். மனித நடமாட்டமில்லாத இந்த இமயமலைப் பகுதிகளில் எங்களுடைய உணவுக்கு வேண்டிய எல்லாப் பொருள்களையும் உடன் கொண்டுபோகவேண்டும். உடலைத் தூக்கிக்கொண்டு போவதே கடினம் என்றால், சாமான்களைத் தூக்கிக்கொண்டு போவது இலகுவானதா? இதற்காக மலைநாட்டிலேயே வாழ்பவர்களுடைய உதவியை நாடினோம். பல கூலியாட்கள் எங்களுடைய சாமான்களைத் தூக்கிக்கொண்டு வந்தார்கள்.

"இவற்ரேடு எங்களுடன் பிராணவாயுப் பைகளையும் கொண்டுபோகவேண்டியிருந்தது. மலை ஏறுதற்குப் பயன் படுத்துகிற கயிறுகள், கோடரி, குத்துக்கோல், வழுக்கு மிதியடி, சறுக்கு வண்டி முதலிய பல உபகரணங்களையும் கொண்டுபோனேம். முதலுதவிச் சிகிச்சைக்காகப் பல மருந்துகளும், இரண வைத்தியக் கருவிகளும் கொண்டு போகவேண்டியிருந்தது.

"உடலை வருத்துகிற பனிக் காற்றிலிருந்து காத்துக் கொள்ளக் காற்று நுழையாத சட்டைகள் போட்டுக் கொண்டு பிரயாணஞ் செய்தோம். நாங்கள் ஒரு பாளை யத்தைவிட்டு மேலே இன்னொரு பாளையத்திற்குப் போகும் பொழுது எப்போதும் சிலரை அங்கேயே வைத்துவிட்டுப் போவது வழக்கம். முதன்முதலில் தங்குகிற பாளையத் திற்கு அடிவாரப் பாளையம் என்று பெயர். இங்கே எங்களுக்கு அதிகத் தேவையில்லாத பல சாமான்களையும் வைத்துவிட்டுப் போவோம். அப்படி வைத்துவிட்டுப் போன சாமான்களில் ஏதாவது தேவையாக இருந்தால் வேலையாட்களை அனுப்பித் தருவித்துக்கொள்வோம்.

"நானும் ஷிப்டனும் 27,400 அடி உயரத்திலே அமைத்திருந்த எங்களுடைய ஆருவது பாளையத்திலிருந்து ஒரு நாட் காலை எவரெஸ்டு மலை உச்சிக்கே ஏறிவிட்டு வந்துவிடவேண்டும் என்று தீர்மானித்துக்கொண்டு புறப் பட்டோம். புறப்பட்ட இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் ஷிப்டனுக்குத் தாங்க முடியாத வயிற்று வலி வந்து விட்டது. அதனல் அவர் ஆருவது பாளையத்துக்குப் போய் விட்டார்.

"பின்பு நான் மட்டும் புறப்பட்டேன். முந்தின நாள் வெட்டிவைத்திருந்த கற்படிகளையெல்லாம் பனி மூடி யிருந்தது. அதனலே எனக்கு வழி நடப்பது மிகவும்

கடினமாக இருந்தது. சிறிது தூரம் சென்றதும், பெரிய பனிக்காற்று அடிக்கத் தொடங்கிற்று. நான் அந்தப் பனிப் புயலிலே அடிபட்டுக் கீழே இறங்கி நான்காவது பாளையத்துக்கு வந்தது என் நல்வினைப் பயன் என்று தான் சொல்லவேண்டும்.

"இவ்வாறாக எங்கள் எவரெஸ்டு யாத்திரை வெற்றி யளிக்கவில்லை. என்றாலும், எங்கள் தோல்வியிலுள்ள அநுபவங்களை வைத்துக்கொண்டு எங்களுக்குப் பின் வருபவர்களாவது இந்த எவரெஸ்டு மலைச் சிகரத்தின் மீது வெற்றிக்கொடி நாட்டுவார்கள் என்று நம்புகிறேன்."

பயிற்சி

[இஃது உண்மையான மலைச்செலவின் வரலாற்றையும், துணிகரச் செயல்களையும், அனுபவங்களையும்பற்றியதொரு பாடமாகும்.]

அருஞ்சொற்கள்: 'மாநில மீதிதுபோற் பிறிதிலையே'— இத் தொடரைப் பதம் பிரித்து எழுதுக.

முயற்சி திருவினையாக்கும், வெப்பதட்ப நிலை, வழுக்கு மிதியடி, சறுக்கு வண்டி, கொடுமுடி, முதலுதவி, பாளையம்— இவற்றின் விளக்கங்களைக் கேட்டறிக.

கருத்துணர்தல்:

1. எவரெஸ்டு மலைச்சிகரத்தை ஏறிக் கண்டறிய முயன்றவர்களின் பெயர்களை எழுதுக.

2. உயிரைக் கொடுத்தாவது எவரெஸ்டு கொடுமுடியைக் கண்டறிய விரும்பியது ஏன்?

3. மலைப் பயணத்திற்கு வேண்டிய கருவிகளும் சாதனங்களும் யாவை?

4. விடுபட்ட இடங்களைத் தக்க சொற்களைக்கொண்டு நிரப்புக :

i. உலகத்தில் உள்ள மலைச் சிகரங்களிலெல்லாம் மிக உன்னதமானது ——. அது கடல் மட்டத்தினின்று —— அடி உயரமுடையது. அதனைத் திபெத்தியர் —— என அழைக்கின்றனர்.

ii. உயர்ந்த பனிக்கட்டிப் பிரதேசங்களில் தோன்றுகிற —— பார்ப்போர் பார்வையை —— விடும்.

iii. மனிதன் தனக்கு நேரிடும் எவ்வித —— எதிர்த்துப் போரிட்டு —— வல்லவனாகின்றான்.

கட்டுரை : நீ போய் வந்த மலைச்செலவு அல்லது உல்லாசப் பயணம் ஒன்றை நூறு சொற்களில் விவரித்து எழுதுக.

---

13. அரசவைக் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

தமிழ் மக்களுக்குப் புத்துணர்ச்சியும், தமிழ்மொழிக்கு மறுமலர்ச்சியும் தந்து, தமிழ்நாட்டைத் தட்டி எழுப்பிய புலவர்மணிகளுள் நமது **அரசவைக் கவிஞர், நாமக்கல் வே. இராமலிங்கம் பிள்ளை** ஒருவராவர். இவர் நாமக்கல் என்னும் நற்பதியிலே பல ஆண்டுகளாக வசித்துவரும் காரணம்பற்றி **நாமக்கல் கவிஞர்** என்றே கூறப்படுகின்றனர். சென்னை அரசியலார் இவரது கலைத் திறனையும், கவிச் சிறப்பினையும், நற்பண்பினையும் நன்கு உணர்ந்து, இவரைத் தம் அரசவைப் புலவராகத் (ஆஸ்தான கவிஞர்) தேர்ந்தெடுத்துச் சிறப்பித்துள்ளனர். "கற்றறிந்த ஓவிய நற் கலைஞன் — ஓதுபுகழ் நாமக்கல் பாவலன் இராம லிங்கம்" எனக் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளையவர்களும் நம் கவிஞரைப் புகழ்ந்து பாராட்டியுள்ளார்கள்.

கவிஞர் இராமலிங்கனர் 1888-ஆம் ஆண்டு, அக்டோபர் திங்கள் 19-ஆம் நாள் சேலம் சில்லாவில் நாமக்கல்லை

யடுத்த மோகனூரில் ஒரு சாதாரண குடும்பத்தில் பிறந்த வர். இவரது தந்தையார் வேங்கடராம பிள்ளையாவார். கவிஞர் இளமையில் உயர்நிலைப் பள்ளியில் பயின்று தேர்ச்சியுற்றதும், திருச்சிராப்பள்ளி அர்ச். சூசையப்பர் கல்லூரியில் எப். ஏ. வகுப்பில் சேர்ந்து கல்வி கற்றனர். இடையில் கல்லூரிப் படிப்பைக் கைவிட நேரிட்டது. இவர் இளமை முதலாகவே கவிகள் இயற்றுவதிலும், ஓவியம் வரைவதிலும் ஊக்கஞ் செலுத்திவந்தனர்.

நம் தாய்நாட்டின் விடுதலை குறித்து எழுந்த சுதந்திரப் போராட்ட இயக்கங்களில் நமது கவிஞர் மனங் கொள்வாராயினர். அதனால் காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றத் தொடங்கினர். அக்காலத்தில் ஆங்கிலப் பேரரசை அஹிம்சை மார்க்கத்தால் எதிர்த்துப் போராடிய காந்தியடிகளின் தன்னலமற்ற தியாக உணர்ச்சியும், திண்மை வாய்ந்த செயலும், நல்லொழுக்கங் களும் நம் கவிஞரின் உள்ளத்தைக் கவரலாயின. எனவே அவர், காந்தியடிகளை தம் வாழ்க்கைக்குரிய ஒரு வழி காட்டியாக ஏற்று அவரது கொள்கைவழி நிற்கலாயினர். அன்னர் 1930-ஆம் ஆண்டில் தொடங்கிய **உப்புப் போராட்டத்தைப்**பற்றி நமது கவிஞர்பெருமான் '**கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது**' என உணர்ச்சியூட்டும் வகையில் பாடினர். இப்பாடலே அவரது புகழ் நாடெங்கும் பரவுவதற்குக் காரணமாயிற்று என்னலாம்.

நமது நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்கள் பல. அவற்றுள் **என் கதை, மலைக் கள்ளன்** முதலிய உரைநடை நூல் களும், **பிரார்த்தனை, தமிழன் இதயம், காந்தி யஞ்சலி, அவனும் அவ ளும், சங்கொலி** முதலிய கவிதைகளும் சிறப்பு வாய்ந்தன. 'என் கதை' என்ற நூல் படித்தற்கேற்ற சுவைமிகுந்த இனிய பகுதிகள் அடங்கியது. சிறுவர்களுக்கென்றே பாடப்பட்டது 'பிரார்த்தனை' என்னலாம். இக்காலத் தமிழ் மகனின் இதயத் துடிப்பை எடுத்துக்காட்டுவது '**தமிழன்**

இதய'மாம். காந்தியடிகளிடம் தாம் கொண்ட அன்பின் காணிக்கையாக எழுதப்பட்டது 'காந்தி யஞ்சலி.' இலக்கியச் செறிவு நிறைந்த நூல் 'அவனும் அவளும்' ஆகும். ஏனைய நூல்களும் இத்தன்மையனவே.

நமது கவிஞர் பெருமான் நமக்குக் கிடைத்த ஓர் அரும்பெரும் நிதியம். அவர் ஒரு குணக்குன்று ஆவார்; ஆழ்ந்த கடவுட் பற்றுக்கொண்டவர்; சாந்தம், அடக்கம், அன்பு இவற்றின் இருப்பிடம். காந்தீயமே அவரது உயர்ந்த குறிக்கோள். அவர் பாமர மக்களிடம் பரந்த அன்புகொண்டவர்; தீவிரத்தியாகி; நாட்டுத் தொண்டையே தமது தலைசிறந்த கடனாகக் கொண்டொழுகுபவர். அவரது கவிதைகளும் நூல்களும் நாட்டினரை நல்வாழ்வு வாழச் செய்வன. நம் கவிஞர்பெருமான் வளம் பல பெற்றுப் பல்லாண்டு வாழ்வாராக!

பயிற்சி

[**தற்காலக் கவிஞர் ஒருவரது வாழ்க்கை வரலாற்றை எடுத்துக் கூறுவது இப்பாடம்.**]

அருஞ்சொற்கள் : புது + உணர்ச்சி - புத்துணர்ச்சி. அரசவை - அரச சபை. ஆஸ்தானம் - அரசாங்கம். பண்பு - குணம். பாவலன் - புலவன், பாட்டுப் பாடுவதில் வல்லவன். மனங் கொள்ளல் - விரும்புதல். அஹிம்சை - துன்பஞ் செய்யாமை. திண்மை - உறுதி. நிதியம் - செல்வம். காந்தீயம் - காந்தியடிகளின் கொள்கை.

கருத்துணர்தல் :

1. நமது நாமக்கல் கவிஞரை யார், யார் எவ்வெவ்வாறு பாராட்டியுள்ளனர்?
2. நமது கவிஞரின் நற்புகழுக்குக் காரணமாக இருந்தது யாது?
3. நாமக்கல் கவிஞர் இயற்றிய நூல்கள் யாவை? அவற்றின் தன்மையினை எழுதுக.
4. கவிஞரின் பண்புகளை எடுத்துக் கூறுக.

கட்டுரை : நீ உன் வாழ்க்கை வரலாற்றினை ஒரு பக்கத்தில் எழுதுக.

14. உழவுத்தொழிலும் உணவுப்பெருக்கமும்

உலகில் உணவின்றி எவரும் உயிர்வாழ இயலாது. உணவுப்பொருள்களை உண்டாக்கித் தரும் தொழில் உழவுத்தொழில் அல்லது வேளாண்மை எனப்படும். அத்தொழிலைச் செய்பவர் உழவர் அல்லது வேளாளர் ஆவர். ஏனைய எத்தொழிலைச் செய்பவரும் தத்தம் தொழிலால் வரும் பயனைக்கொண்டு நேரடியாகத் தம் பசியைப் போக்கிக்கொள்ளுதல் இயலாது; தம் பசித் துன்பத்தைப் போக்கிக்கொள்ள உழவர்களின் உதவியையே எதிர்பார்த்து நிற்பர். எனவே, உலகத்தார்க்கு உற்ற துணைவராக இருப்பவர் வேளாளர் என அறிகின்றோம். இது பற்றியே

> " உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம்
> தொழுதுண்டு பின்செல் பவர். "

எனத் தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

> " உழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
> பழுதுண்டு வேறோர் பணிக்கு. "

என்று ஔவைப்பிராட்டியும் உழவுத்தொழிலைச் சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

பயிர்த்தொழிலே உயிர்த்தொழிலென்பதை உணர்ந்த நம் முன்னோர் அதனைக் கண்ணுங் கருத்துமாகப் பேணி வந்தனர். அதனால் வேளாளருடைய இல்லங்களில் நெல்லுங் கரும்பும், கம்பும் சோளமும், அவரையும் துவரையும், பயறும் உளுந்தும், வாழையும் தெங்கும் வளமுறப் பொலிந்தன. உழவினைச் செய்துயர்ந்த காளைகளும், பாலைப் பொழியும் பசுக்களும் மலிந்து நாட்டின் செல்வங்களாகத் திகழ்ந்தன. அதனால் வேளாளர் செல்விருந்து ஓம்பி, வருவிருந்தை நோக்கி அனைவர்க்கும் உபகாரியாய் வாழ்க்கையினை வளமுடன் நடத்திச்சிறப்புற்றார்கள். கோல் ஓச்சி முறைசெய்யும் வேல்வேந்தரும் இவ்வேளாளர் கையினையே எதிர்பார்த்து நின்றனர்.

ஆனால், காலப்போக்கில் பற்பல காரணங்களால் குடியரசாய்த் திகழ்ந்த கிராமங்கள் சீர்குலையலாயின. காரணம் என்ன? கிராமத்து மக்கள் தங்கள் நிலையினை மறந்து ஆடம்பரங்களில் ஈடுபட்டு உழவுத்தொழிலைப் பேணாது ஒழிந்தனர். குடும்பப் பிரிவினை காரணமாக நிலங்கள் சிறு சிறு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொருவரது நிலமுங் குறுகியது. ஏரும், எருவும், பணியாட்களும், பிற வசதிகளும் குறையலாயின. அதனால் விளைவு குறையத் தொடங்கியது. விளைவு குறையவே வாழ்க்கைத் தரமும் குறைந்து வறுமை தலைகாட்டலாயிற்று. சிற்றூர் சீர்குலையவே நாடு நலிவுற ஆரம்பித்தது. எங்கும் பஞ்சமும், பசியும், பட்டினியும் சூழ்ந்து மக்களை வருத்தத் தொடங்கின. உணவுப் பொருளுக்குப் பிறநாடுகளின் தயவினை எதிர்நோக்கி நிற்கும் நிலை ஏற்பட்டது. ‘தனி ஒருவனுக்கு உணவில்லை’ என்ற சொல் நம் நாட்டிடை நிலவலாமோ? இதனைப் போக்கும் நிலையினை நாம் கூர்ந்து நோக்குதல்வேண்டு மல்லவா ?

நமது சென்னை மாகாணம் உலகப்போருக்கு முன்பிருந்தே உணவுப் பற்றாக் குறையில் இருந்துவருகின்றது. ஆண்டு ஒன்றுக்குச் சராசரி 50 லட்சம் டன் அரிசியும், 25 லட்சம் டன் இதர தானிய வகைகளும் உற்பத்தி செய்தும், வருடந்தோறும் $4\frac{1}{2}$ லட்சம் டன் அரிசியை வெளிநாட்டிலிருந்து தருவித்துவந்துளது. சென்ற ஆறு ஆண்டுகளாக நமது அரசியலார் அதிக உணவு உற்பத்தியின்பொருட்டுப் பெரும் பொருள் செலவழித்தும், பெருமுயற்சி எடுத்தும் போதிய பலன் கிட்டவில்லை. அதற்குக் காரணம் 1941-ஆம் ஆண்டில் எடுத்த குடிமதிப்பிற்குப் பிறகு நமது மாகாணம் மக்கட் தொகையில் 45 லட்சம் அதிகரித்திருக்கின்றது. எனவே, நாம் தேவையான உணவுப்பொருளைப் பெற இயலாமல் பங்கீட்டு முறையில் உணவுப் பொருளைப் பெற்றுவருகின்றோம்.

நமது அரசாங்கம் சென்ற 1948-49-ல் உணவுப் பொருள் இறக்குமதி வகையில் 130 கோடி ரூபாய் செலவழித்துள்ளது. அரசாங்க வருவாயின் பெரும் பகுதி இவ்வாறு உணவுப் பொருள்களுக்காக அயல்நாடுகளுக்குப் போகுமாயின் அதனல் நாட்டின் பொருளாதார நிலையும் பாதிக்கப்படுகிறது.

இவற்றை எல்லாம் நன்குணர்ந்த நமது அரசாங்கத் தலைவர்கள் இவ்வுணவுப் பஞ்சத்தைப் போக்கடிக்கும் பணியில் தற்போது முனைந்துவருகின்றனர். அதுவே தமது முதற்கடனாகவும் கொண்டுள்ளனர். எக்காரணம் பற்றியும் 1951-க்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்து உணவுப்பொருள்களை இறக்குமதி செய்வதில்லை என உறுதிபூண்டுள்ளனர். அதற்காகும் முறைகளும் வகுக்கப் பெற்றுவருகின்றன.

உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கு முதன்முதலாகப் பயிரிடும் நிலங்களைப் பெருக்குதல்வேண்டும். நமது நாட்டில் இப்பொழுது பெரும் பகுதியான நிலங்கள் தரிசாகக் கிடக்கின்றன. காடும் மேடும், மலைச் சரிவும், புல் தரிசும், பள்ளமும், தாழ்ந்த சதுப்பு நிலமுமாகக் கிடக்கும் பரந்த இடங்களை விளைநிலமாக மாற்றுதல் வேண்டும். மேலை நாடுகளில் பயன்படுத்தும் மோட்டார் டிராக்டர் போன்ற நவீன எந்திர சாதனங்களைக்கொண்டு இதனைச் செய்துமுடிக்கலாம். இதற்குப் பெரும் பொருள் செலவாக நேரிட்டாலும் அதனல் நாடு நலமுறலாகும்.

தரிசுகளை விளைநிலமாக்க நீர்ப்பாசன வசதிகளையும் அமைத்துக்கொடுத்தல் இன்றியமையாததாகும். கடலிற் சென்று விழுந்து வீணாகும் ஆற்றுவெள்ளத்தை ஆங்காங்கே அணைகட்டித் தேக்கிப் பயன்படுத்துதல்வேண்டும். ஆற்றுப் பாசனம் அற்ற இடங்களில் ஏரிகளைப் பராமரித்தும், புதிய கிணறுகளைத் தோண்டுவித்தும்

குடியானவர்கட்கு உதவிபுரிதல் அரசியலாரின் கடமை. மேலும், தண்ணீர் இறைப்பதற்கான மின்சார மோட்டார் பம்புகளை பெருவாரியாகக் குடியானவர்கட்குக் கொடுத்து உதவுதல்வேண்டும். இப்பொழுது நம் அரசியலார் கோதாவரி, கிருஷ்ண, துங்கபத்திரை, பெண்ணையாறு, பவானி முதலிய ஆறுகளில் அணைகள் கட்டத் திட்டம் வகுத்துள்ளனர். இவை நிறைவேற்றப்படுமாயின் நம் நாட்டின் உணவுப் பஞ்சமும் அறவே ஒழியும். மேனாடுகளில் நிலங்களை உழுது பண்படுத்துவதற்கும், விதை விதைப்பதற்கும், அறுவடை செய்வதற்கும் எந்திரங்களைப் பயன்படுத்துகின்றனர். கூட்டுறவு முறையில் பெரிய பண்ணைகளை அமைத்து, அவ்வித எந்திரங்களை உபயோகிப்போமாயின், தற்பொழுது, பல ஆட்கள் செய்து முடிக்கும் வேலையை மிகக் குறைந்த காலத்திலும், சுருங்கிய செலவிலும் செய்துமுடிக்கலாம்; உற்பத்தியும் அதிகரிக்கும்.

விளைநிலங்கள் நல்ல பலனைத் தரவேண்டுமாயின் சத்துள்ள உரமிடுதல்வேண்டும். பயிர்கள் பூசாரத்தை உறிஞ்சிவிடுவதால் நிலம் வளங்குறைந்துபோகிறது. இதனை ஈடுபடுத்த எருவிடுதல் தேவையாகும். நம் நாட்டு உழவர்கள் இதுபற்றிப் போதிய ஊக்கம் காட்டாதிருக்கின்றனர். நம் நாட்டில் ஒரு ஏக்கர் நன்செய் நிலத்திற் கண்டுமுதலாகும் தானியத்தைவிட மேனாட்டார் மூன்று அல்லது நான்கு பங்கு அதிகமாக விளைவிக்கின்றனர். காரணம், அவர்கள் நிலத்திற்குத் தகுந்த உரத்தினைத் தெரிந்து இடுதலேயாகும். தொழு உரம், பசுந்தாள் உரம், கடலைப் பிண்ணாக்கு, எலும்புத் தூள், ஸல்பேட், பாஸ்பேட் போன்ற இரசாயன உரங்கள் முதலிய சத்துள்ள எருக்களைத் தேவை யறிந்து நம் உழவர்கள் உபயோகிப்பார்களாயின் விளைச்சலைப் பெரிதும் அதிகப்படுத்தலாம்.

குறுகிய காலப் பயிர்களை விளைவிப்பதாலும், பயிர்களைச் சுழற்சி முறையில் மாற்றி மாற்றிப் பயிர்செய்வதாலும் உணவு உற்பத்தியைப் பெருக்குதல் கூடும். துணை உணவுப் பொருள்களாகச் சோளம், கம்பு, வரகு முதலிய புன்செய்ப் பயிர்கள், மரவள்ளி, சர்க்கரைவள்ளி முதலிய கிழங்குகள், காய்கறிகள், கனிவகைகள் முதலியவற்றையும் உற்பத்திசெய்வதில் முனைதல்வேண்டும்.

நிலங்களை உழுவதற்கும், அறுவடையான தானியம், வைக்கோல் முதலியவற்றை வண்டிகளில் ஏற்றிவருவதற்கும் கால்நடைகள் மிகவும் பயன்படுகின்றன. மேலும், சத்துள்ள தொழு எருவை அவைகளே தருகின்றன. ஆகையால் கால்நடைகளைப் பராமரித்தலும் உணவு உற்பத்திக்குச் சாதகமாகும்.

ஆகையால், உழவுத் தொழிலை இழிவெனக் கருதாமல் அதிக உணவு உற்பத்தியில் நாட்டங்கொண்டு உழைப்பீர்களாக. 'ஒரு தானியக் கதிர் விளையும் இடத்தில் இரு கதிர்களை விளைவிப்பவனே சிறந்த உலக உபகாரியாவான்' என்ற பொன்மொழியை நினைவிலிருத்துங்கள். எல்லாவற்றிற்கும் மேலாக, "உற்பத்தியைப் பெருக்குங்கள்; செலவைக் குறையுங்கள். எதையும் வீணாக்காதீர்கள்" என்று நமது இந்திய உதவிப் பிரதம மந்திரி சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள் கூறிய மொழிகளை மூலமந்திரமாகக்கொண்டு வாழ்க்கையை நடத்துவீர்களாக!

பயிற்சி

[உழவுத் தொழிலின் மேன்மையையும், உணவுப் பெருக்கத்தின் அவசியத்தையும், அதற்காகும் முறைகளையும் விளக்குவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : பேணி - பாதுகாத்து. தெங்கு - தென்னை. மலிந்து - மிகுந்து. விருந்து - புதிதாக வந்தவர். கோல் - செங்கோல். ஓச்சுதல் - செலுத்துதல். சிற்றூர் - கிராமம். நலிவு - துன்பம். குடிமதிப்பு - சென்ஸஸ்; ஜனத்தொகைக் கணக்கு. நாட்டம் - கருத்து.

கருத்துணர்தல் :

1. உழவுத் தொழிலின் சிறப்பினைக் கூறுக.

2. கிராமங்கள் நாளடைவில் சீர்குலையக் காரணமென்ன ?

3. உணவுப் பற்றுக்குறையைப் போக்க அரசியலார் யாது செய்துவருகின்றனர் ?

4. 1951-க்குப் பிறகு வெளிநாடுகளிலிருந்து உணவுப் பொருள்களை இறக்குமதி செய்வதில்லையென அரசாங்கம் முடிவு செய்ததன் கருத்து யாது ?

5. சர்தார் பட்டேல் அவர்களின் பொன்மொழிகள் யாவை? அவற்றின் உட்பொருளை விளக்குக.

செய்முறை :

1. உன் வீட்டுக்கொல்லைப்புறத்தில் நான்கு வாழைக் கன்றுகள் நட்டு, அவற்றைப் பராமரித்து வருக.

2. காய்கறிப் பாத்தி யமைத்து, வீட்டிற்கான சில காய்கறி களை உன் தனி முயற்சியால் பயிர்செய்க.

கட்டுரை :



மேலேயுள்ள படத்தில் பயிர்த் தொழிலின் ஆறு நிலைகள் காட்டப்பட்டுள்ளன. அவை ஒவ்வொன்றையும்பற்றி ஒவ்வொரு பத்தி எழுதுக.

15. நீர்வளம்

நல்லமழை பெய்ததனல்
நாடு செழித்தனவே
பூமி குளிர்ந்தனவே
பொய்கை நிரம்பினவே

ஏரிகள்தாம் நிரம்பி
எதிர்க்கிறதே ஏகவெள்ளம்
மடுவுகள் நிரம்பி
வழிகிறதே வெள்ளமெங்கும்

ஆறுகள் நிரம்புவதால்
அடைபடும் வெகுசனங்கள்
கழனிகள் நிரம்பிக்
கண்வாய்கள் தாம்நிரம்பி

ஊற்றுபல தாம்சுரந்து
ஓடிற்று வெகுவிசையாய்
தடாகங்கள் தாம்நிரம்பித்
தாமரை பூத்தனவே

வயல்கள் மிகநிரம்பி
வாய்க்காலும் தாளுேடி
உலர்ந்த மரங்கள்எல்லாம்
உயிருண்டாய்த் தளிர்த்தனவே

காடு செடிகளெல்லாம்
கனக்கவே தான்தழைக்கும்
செடிகள் மரங்களெல்லாம்
செழித்துத் தழைத்தனவே

பூவா மரங்களெல்லாம்
பூத்துச் சொரிந்தனவே
காயா மரங்களெல்லாம்
காய்த்துச் சொரிந்தனவே
செந்நெல் விளைந்தனவே
தேசம் செழித்தனவே
பயிர்கள் விளைந்தனவே
பலனைக் கொடுத்தனவே.

—அல்லியரசி மாலை

பயிற்சி

[இது நாடோடிப் பாடல் வகையைச் சேர்ந்தது. இதன் சந்தம், சொல் நயம், பொருள் வளம் இவற்றை ஓர்க.]

அருஞ்சொற்கள்: பொய்கை - குளம். கழனி - வயல். கண்வாய் - ஏரி.

---

16. ஞானவான் சாலமன்

ஆசியாக் கண்டத்தின் மேற்குப் பாகத்தில் பாலஸ்தீனம் என்னும் சிறு நாடு உளது. இந் நாட்டில் தான் கிறிஸ்துநாதர் அவதரித்தார். அவர் அவதரிப்ப தற்குப் பல நூற்றூண்டுகளுக்கு முன்னரே அத்தேசம் நாகரிகத்திலுஞ் செல்வத்திலுஞ் சிறப்புற்றிருந்தது. 'பாலுந் தேனும் பாயும் பாலஸ்தீனம்' என்று அத்தேசத் தார் அதைப் புகழ்ந்து கூறுவது வழக்கம். இவர்களது அரச பரம்பரையில் சாலமன் என்ற ஓர் அரசர் இருந் தார். அவர் ஒரு சிறந்த அறிஞர். அயல்நாடுகள் பல வற்றை வெற்றிகொண்டு தமது இராச்சியத்தைப் பல துறைகளிலுஞ் சிறப்புறச் செய்தார். தமது தலைநகராகிய ஜெருசலத்தில் ஒரு பெரிய ஆலயத் திருப்பணி செய்து தமது பெயரை நிலைநாட்டினர். "நீதி மொழிகள்", "உத்தம

கீதங்கள்'' முதலிய நூல்களை இவர் இயற்றியுள்ளார். செங்கோல் மன்னரான இவர் துலாக்கோல்போல் சமன் செய்து சீர்தூக்கி நீதி செலுத்திவந்தார். இவரது கீர்த்தி பாரெங்கும் பரவிற்று. இவரது ஞானமொழிகளைப்பற்றி யும், நீதி வழங்கும் நெறியைப்பற்றியுங் கேள்விப்பட்டு ஷீபா நாட்டு மகாராணியார் இவரை நேரில் கண்டு, இவரது புகழைப்பற்றிய உண்மையை அறிய எண்ணி அளவிறந்த பொன்னையும் இரத்தினங்களையும் காணிக்கையாக எடுத்துக்கொண்டு ஜெருசலத்துக்கு வந்தார்.

இராணியார், சாலமனது கூரிய அறிவைச் சோதிக்க வெண்ணி ஒரு நாள் இயற்கைப் பூக்களால் தொடுத்த மாலையையும், செயற்கைப் பூக்களால் ஆகிய மற்றொரு மாலையையும் தூரத்தில் பிடித்துக் காட்டி, "மன்னர் பெருமானே! இவ்விரண்டு மாலைகளில் எது இயற்கைப் பூக்களால் அமைந்தது?'' என்று வினவினர். இரண்டு மாலைகளும் பார்வைக்கு எள்ளளவுகூட வித்தியாசமின்றி இருந்ததால் சாலமன் சிறிது தயங்கிக்கொண்டிருக்கும் போது சில தேனீக்கள், சன்னல் வழியாக உள்ளே பறந்து வந்து ஒரு மாலையில் மட்டும் உட்கார்ந்ததை நுட்ப மாகக் கவனித்து, 'இயற்கைப் பூமாலை இதுதான்' என்று அனைவரும் வியப்புறுமாறு அறிவித்தார். அவர் மாலை களை வேறுபடுத்தி யறிந்த விதத்தைக் கூறும்படி ஷீபா இராணி கேட்க, சாலமன், "தேனீக்கள் மொய்ப்பதைக் கவனியுங்கள்,'' என்று விடை பகர்ந்தார். இராணியாரும் அம்மன்னரது நுண்ணறிவை வியந்து சென்றார்.

சாலமன் மன்னரது நீதி செலுத்துந் திறமையைப் பற்றிய பல கதைகள் வழங்கிவருகின்றன. அவ்வூரில் ஓர் ஆடவனுக்கு இரு மனைவிகள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஓர் ஆண் மகவு இருந்தது. இருவரும் தத்தம் குழந்தையைச் சீராட்டிப் பெருமையுடன் வளர்த்து

சாலமனும், ஷீபா இராணியாரும்

வந்தனர். ஓர் இரவு இளைய மனைவியின் குழந்தை திடீரென்று நோய்கண்டு இறந்துவிட்டது. மூத்தவள் அச்சமயம் தன் குழந்தையைத் தொட்டிலில் தூங்கச் செய்து அருகில் தானும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். மகவை இழந்த தாயார் பொறாமை கொண்டு, கள்ள மனத்துடன் சந்தடியின்றி இறந்த மகவை மற்றவளது தொட்டிலிற் கிடத்தி விட்டு, அவளது உயிருள்ள பிள்ளையை எடுத்துத் தன் அருகிற் படுக்கவைத்துத் தானும் உறங்குவதுபோலப் பாசாங்கு செய்தாள். பொழுது புலர்ந்ததும் மூத்தவள் விழித்துக்கொண்டு குழந்தை இறந்து கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு உற்று நோக்கும்போது அது தனதல்லவென்றும், மாற்றாளது மதலை என்றும் உணர்ந்து, தன் குழந்தை இளையவள் பக்கத்தில் கண்வளர்வதைப் பார்த்தாள். உடனே, "உயிருள்ள குழந்தை என்னுடையது," என்று மூத்தவள் கூற, இளையவள், "இஃது என் குழந்தையே; உன்னுடையதுதான் இறந்து கிடக்கிறது" என்று சாதித்தாள். இருவரும் வழக்குத் தொடர்ந்து சாலமன் மன்னரிடம் உயிருள்ள குழந்தையை எடுத்துக்கொண்டு போய் முறையிட்டார்கள். ஒவ்வொருத்தியும் 'குழந்தை தன்னுடையது' என்று சாதித்ததால் அரசர் சிறிது ஆலோசனை செய்து, இருவரும் ஒரே விதமாக உரிமை கொண்டாடுவதால் குழந்தையை இரண்டு துண்டாக்கிப் பேருக்கொன்றாகக் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தார். இளையவள், 'அவ்வாறே செய்யுங்கள்' என்று கூறவும், மற்றவளோ, 'பெருமானே! வெட்டவேண்டாம் குழந்தையை; அவளே வைத்து வளர்க்கட்டும்; எப்படியாவது குழந்தை உயிருடன் இருந்தாற்போதும்,' என்று மன்றாடினாள். உடனே அரசர் இவள்தான் குழந்தையின் தாயார் என்று ஊகித்துக் குழந்தையை அவளிடம் அளிக்கவும், மற்றவளைக் காவலில் வைக்கவும் கட்டளையிட்டார். இதனைக் கேட்டவர் அனைவரும் அவரைப் புகழ்ந்தார்கள்.

மற்ெறாரு அமயம் திறமை வாய்ந்த ஓவியக்காரர்கள் இருவர் சிறந்த படங்கள் இரண்டு வரைந்து, அரசரது அரண்மனை வாயிலிற் கொண்டுவந்து வைத்து அவற்றுள் அதிக நேர்த்தியானது எது? என்று அறிவிக்கவேண்டினர். ஒரு தட்டில் பலவகைப் பழங்கள் வைத்திருப்பதுபோல் வண்ணங்கள் தீட்டிய படம் ஒன்றை ஓர் ஓவியக்காரர் வரைந்திருந்தார். மற்றொருவர், மெல்லிய திரைக்குப் பின் நிற்கும் ஓர் அழகிய பெண்ணின் உருவத்தை வரைந்திருந்தார். திரளான மக்கள் வந்து இப் படங்களைப் பார்த்து ஒன்றுக்கொன்று அதிக அழகாயிருப்பதாக மெச்சினர். வரையப்பட்ட பழங்கள் இயற்கைக் கனிகளைப் போலவே காணப்பட்டதால் சில பறவைகள் வந்து அவைகளைக் கொத்தித் தின்ன முயன்று ஏமாறின. அரசரின் அமைச்சர் மற்றொரு சித்திரத்தைப் பார்த்தபொழுது, "இந்தப் பெண் மிக அழகாக இருக்கிறாள். மேலே மறைக்குந் திரையைச் சற்று விலக்குங்கள்; நன்றாகப் பார்க்கலாம்" என்றார். சாலமன் அரசர், "பெண்ணுருவமுள்ள படமே மேலானது. ஏனென்றால் பழங்கள் பறவைகளை ஏமாற்றின. ஆனால் இந்தப் படமோ மந்திரியையே ஏமாற்றிவிட்டது," என்று கூறினர். கூடியிருந்தவர்கள் மன்னரைப் புகழ்ந்து வாழ்த்தினார்கள்.

சாலமன் அரசர் செங்கோல் மன்னராகவும் செந்நெறியாளராகவும் விளங்கியதால், அவர் 'ஞானவான்" என்ற அடைமொழி அளிக்கப் பெற்று, "ஞானவான் சாலமன்" என விவிலிய நூலிற் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளார்.

பயிற்சி

[சாலமன் மன்னரது அறிவுத்திறனை விளக்கும் மூன்று வரலாறுகள் இப்பாடத்தின்கண் கூறப்பட்டுள.]

அருஞ்சொற்கள் : அவதரித்தார் - பிறந்தார். நூற்றுண்டு (= நூறு + ஆண்டு) = 100 வருஷம். துறை - வழி. பார் - பூமி. புலர்தல் - விடிதல். கண்வளர்தல் - தூங்குதல். செந்நெறியாளர் - நன்னடத்தையுள்ளவர். விவிலிய நூல் - கிறிஸ்து வரது வேத புத்தகமாகிய பைபிள்.

கருத்துணர்தல் :

1. சாலமன் மன்னரின் குண நலன்களைக் கூறுக. அவருக்கு 'ஞானவான்' என்ற சிறப்புப் பெயர் எவ்வகையில் பொருந்தும்?

2. இயற்கைப் பூமாலை, செயற்கைப் பூமாலை இவற்றின் வேறுபாடு எவ்வாறு அறியப்பட்டது?

3. ஓவியக்காரர் இருவர் வரைந்த படங்களில் எது சிறந்ததாகும்? ஏன்?

4. 'பாலுந் தேனும் பாயும்' என்னும் அடைமொழியை விளக்குக.

5. குழந்தை என்னும் பொருள்கொண்ட பிற சொற்களை இப்பாடத்தில் கண்டெழுதுக.

கட்டுரை :

1. பிள்ளை வழக்குத் தீர்த்த வரலாற்றை 10 வாக்கியங்களில் எழுதுக.

2. அரச பரம்பரை, திருப்பணி, எள்ளளவுகூட, புலர்தல், பேருக்கொன்ருக, கண்வளர்தல் — இத்தொடர்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டுக.

---

17. காவிரியாறு

'வான் பொய்ப்பினும் தான் பொய்யாத' காவிரியாறு தென்னிந்தியாவின் நிலவளத்துக்கும், நீர்வளத்துக்கும், செல்வப் பெருக்கத்துக்கும் காரணமாக விளங்குகிறது. பண்டைக்காலம் முதல் தமிழ் மக்கள் இவ்வாற்றின் பெருமையை நன்குணர்ந்து இதைப் போற்றிக் கவிகளும் காவியங்களும் இயற்றியிருக்கிறார்கள். காவிரி நதியின் பெருமையைச் **சாத்தனர்** என்னும் புலவர் தாம் எழுதிய **மணிமேகலையில்**

> "கோள்திரிந்து கோடை நீடினும்,
> தானிலைதிரியாத் தண்டமிழ்ப் பாவை"

என்று அழகாகப் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்.

முன்னொரு காலத்திலிருந்த **கவேரர்** என்னும் முனிவரது ஆச்சிரமத்திலிருந்து உற்பத்தியாகி ஓடிவந்ததுபற்றி இந் நதிக்குக் **காவேரி** (அதாவது கவேரர் புதல்வி) என்ற பெயர் ஏற்பட்டதாகக் கூறுவர். தனது இரு கரைகளிலும் விரிந்த சோலைகளையுடையதால் இதற்குக் **காவிரி** (கா - சோலை) என்ற தமிழ்ப் பெயர் வந்ததாகவுஞ் சொல்லுவர். பொற்பொடிகளை அடித்துவருவதாற் **பொன்னி** யென்றொரு பெயரும் இந்நதிக்கு உண்டு.

காவிரியாறு மேற்கு மலைத்தொடரின் ஒரு பாகமாகிய குடகு மலையில் **மெர்க்காரா** என்னும் ஊருக்கருகில் உற்பத்தியாகி, மைசூர் இராச்சியத்தில் ஓடிப் பின் தமிழ்நாட்டில் முதலிற் சேலம், கோயமுத்தூர் சில்லாக்களிலும், பின்னர் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் சில்லாக்களிலும் பாய்ந்து, **காவிரிப்பூம்பட்டின**த்துக் கருகில் வங்காளக்குடாக் கடலில் கலக்கிறது. குறுகலான **தலைக் காவிரி** இடையில் பவானி, அமராவதி முதலிய உபநதிகளின் நீரைப் பெற்று ஒரு மைல் அகலமுள்ள **அகண்ட காவிரி**யாகப் பெருகிக் கடைசியில் பல கிளை நதிகளாகப் பிரிந்து **விருத்த காவிரி** என்னும் சிற்றாறாகிறது.



தலைக்காவிரி



மேட்டூர் அணை

உற்பத்தியாகுமிடத்தில் காவிரி ஒரு சிறு ஊற்றுப் போல் இருக்கிறது. அதற்கருகில் ஓர் ஆலயம் நிறுவி அதில் காவிரியம்மனின் சிலையொன்று வைத்து, நாள் தோறும் பூசை நடத்திவருகிறார்கள். கோவிலில் ஒரு நுந்தா விளக்கும் தொங்குகிறது. இந்த ஊற்று நீர் வழிந்துவருமிடத்தில் முப்பது அடிச் சதுரஅளவில் ஒரு திருக்குளம் அமைத்து, இரண்டடி ஆழத்துக்கு மேற்பட்ட நீரைப் போக்குமடை மூலம் வெளிவிடுகிறார்கள். இந்த இடமே தலைக் காவிரி. தமிழ் நாட்டில் வரும் வெள்ளப் பெருக்குக்கு இதுவே மூலாதாரம்.

காவிரி மைசூர் இராச்சியத்தில் பாய்ந்து வருகையில் மைசூர் நகருக்குப் பதின்மூன்று மைல் தூரத்திலுள்ள கண்ணம்பாடி என்னுமிடத்தில் ஓர் அணை கட்டி, ஐம்பது மைல் சுற்றளவுக்கு ஒரு நீர்த் தேக்கம் அமைத்திருக்கிறார்கள். இந்த நீர்த் தேக்கத்துக்குக் கிருஷ்ணராஜ சாகரம் என்று பெயர். அதிலிருந்து பல வடிகால்கள் மூலம் காவிரி நீரை வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள். இங்கு மைசூர் அரசாங்கத்தார் நிறுவியுள்ள பிருந்தாவனம் என்னும் பூங்கா மிக்க எழில் வாய்ந்தது. அங்கே அரிய பூஞ்செடிகள் பலவற்றை அழகுற வளர்த்துவருகிறார்கள். செயற்கை ஊற்றுக்களிலிருந்து உயரக் கிளம்பி விழும் நீர்த் திவலைகளின்மேல் பல நிற மின்-ஒளிக்கதிர்களைப் பாய்ச்சுவதால் அத்திவலைகள் பன்னிறப் பூமாரிபோல் விழுவது கண்கொள்ளாக் காட்சியாகும்.

பிறகு காவிரி நதி மைசூர் இராச்சியத்தில் முதலாவது ஸ்ரீரங்கபட்டணத்திலும், பிறகு சிவசமுத்திரம் என்னுமிடத்திலும் இரண்டு கிளைகளாகப் பிரிந்து ஒன்றுகூடுகிறது. நாலா பக்கங்களிலும் தண்ணீர் சூழ்ந்திருப்பதால் இந்த இரண்டு ஊர்களும் சிறு தீவுகளாகும். ஸ்ரீரங்கபட்டணத்தில் இருக்கும் அரங்கநாதர் ஆலயமும், திப்பு சுல்தான் கோட்டையும் பார்க்கத்தக்கன.

சிவசமுத்திரத்திற்கருகில் காவிரியாறு 400 அடி உயரமுள்ள ஓர் ஆகாச கங்கையாக விழுகிறது. இந்த இடத்தில் சில எந்திரங்களை அமைத்து, நீர்வீழ்ச்சியின் சக்தியினால் அவைகளின் சக்கரங்களைச் சுழலச் செய்து, பேரளவில் மின்சார சக்தியை உற்பத்திசெய்கின்றனர். இந்த மின்-சக்தி மைசூர் இராச்சியத்தின் பல விடங்களிலும் மின்-விளக்குகள் ஒளிரவும், எந்திரத்தொழில்கள் நடத்தவும் பயன்படுகிறது.

பின்னர்க் காவிரியாறு சேலம் ஜில்லாவினுட் புகுந்து, பல மலைகளைக் கடந்து, பள்ளங்களில் விழுந்து மேட்டூர் என்னும் இடத்தை அடைகிறது. இவ்விடத்தில் அரசாங்கத்தார் காவிரியின் இருபுறங்களிலுமுள்ள மலைகளைச் சேர்த்து ஒரு பெரிய அணை கட்டி, ஆற்று நீரைத் தடுத்து, மாபெரும் ஏரிபோன்ற நீர்த்தேக்கத்தை அமைத்துள்ளனர். இந்த அணை மேட்டூர் அணை எனப்படும். உலகத்திலுள்ள மிகப் பெரிய அணைகளில் இஃது ஒன்றாகும். ஏரியில் தேக்கப்பட்ட காவிரி நீர் உரிய காலங்களில் வேண்டிய அளவு நதியில் விடப்படுகிறது.

மேட்டூர் அணையும் நீர்த்தேக்கமும் 1925-ம் ஆண்டில் தொடங்கி 1934-ல் சுமார் ஆறுகோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பெற்றன. இந் நீர்த்தேக்கத்திலுள்ள தண்ணீர் சுமார் 33 மைல் வரை ஆற்றில் எதிர்த்துப் பரவியுள்ளது. இதன் பரப்பு சுமார் 60 சதுர மைல்; ஆழம் 165 அடி. இந்த அணை ஏறக்குறைய ஒரு மைல் நீளமும், 214 அடி உயரமும் உள்ளது. மேட்டூர் அணையில் நீரோட்டத்தைக் கட்டுப்படுத்தி ஆற்றில் விடுவதற்கு மூன்று வரிசை மதகுகள் பற்பல உயரத்தில் இருக்கின்றன. கசிவு நீர் வெளிப்போவதற்கும், அணையை அடிக்கடி சோதிப்பதற்கும் உதவியாகச் சுரங்க வழி யொன்று இவ்வணையில் அமைக்கப்பட்டுள்ளது.

மேட்டூர் அணையினால் ஏற்பட்டுள்ள நன்மைகள் பலவாகும். இந்த மேட்டூர் அணை திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் சில்லாக்களிலுள்ள பழைய நன்செய் நிலங்களுக்கு வான் பொய்த்த காலங்களில் தட்டில்லாமல் தண்ணீர் விடவும், பெருமழையினால் வெள்ளச் சேதம் நேரிடாமல் தடுக்கவும் உதவுகிறது. மேலும், தஞ்சாவூர் சில்லாவின் தென்பகுதியில் நீரற்றுத் தரிசாய்க் கிடந்த மூன்று லட்சம் ஏக்கர் நிலங்கள் புதிதாக நன்செய்ச் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

மேட்டூர் அணை மதகுகளின் வழியாய்ப் பாயும் நீரோட்டத்தினால் பல எந்திரங்களை இயங்கச் செய்து மேட்டூரில் மின்-உற்பத்திச்சாலை அமைத்திருக்கின்றனர். இங்கு உற்பத்தியாகும் மின்-சக்தியினால் மேட்டூரிலேயே பல நெசவு ஆலைகளும், இரசாயனப் பொருள் உற்பத்திச்சாலைகளும் நடைபெறுகின்றன. மேலும், அங்கு விளைவிக்கப்படும் மின்-சக்தி வெகு தொலைவிலுள்ள பல ஊர்களுக்கும் கடத்தப்பட்டு, அங்கே விளக்குகள் போடவும், தொழிற்சாலைகளிலுள்ள எந்திரங்களை இயங்கச்செய்யவும் பயன்படுகிறது. மாணவர்களே! இந்த மாபெரும் அணையையும் நீர்த் தேக்கத்தையும் நீங்கள் ஒருமுறையாவது போய்ப் பார்த்துவருவது நலம்.

காவிரி, மேட்டூர் அணையைக் கடந்து இடையில் பவானி, நொய்யல், அமராவதி முதலிய உபநதிகளின் நீரைக்கொண்டு பெருகி, திருச்சிராப்பள்ளியின் மேற்கிலுள்ள திருப்பராய்த்துறை என்னும் ஊருக்கு அருகில் அகண்ட காவிரியாக விளங்குகிறது. அங்கே அது காவிரி, கொள்ளிடம் என்ற இரு பிரிவுகளாகப் பிரிகின்றது. இவ்விரு நதிகளின் இடையிற்றான் திருவரங்கம், திருவானைக்கா என்ற தலங்கள் இருக்கின்றன. கொள்ளிடத்தின் தலைப்பில் ஓர் அணை கட்டப்பட்டுள்ளது. அது மேலணை என்று பெயர்பெறும். காவிரியாற்றின் நீர்ப்பெருக்கு தாழ்ந்த

மட்டத்திலுள்ள கொள்ளிடத்திற் பாய்ந்து வீண்போகாமல் தடுக்கும்பொருட்டே இம்மேலணை 1836-ல் கட்டப்பட்டது. திருச்சிராப்பள்ளிக்குக் கிழக்கே சுமார் 10மைல் தூரத்தில் கல்லணை என்ற மற்றொரு அணையும் கட்டப்பட்டுள்ளது. இங்கு காவிரியிலிருந்து வெண்ணாறும், புதிய கல்லணைக் கால்வாயும் பிரிகின்றன. மேலும், காவிரியில் அதிகமாக வரும் வெள்ளத்தைக் கொள்ளிடத்தில் திருப்பிவிட ஒரு மணற்போக்கியும் இங்கு அமைத்திருக்கிறார்கள். பின்னர், காவிரியானது பல கிளைகளாகப் பிரிந்து, தஞ்சாவூர் ஜில்லாவில் பாய்ந்து, அச்ஜில்லாவைத் 'தென்னிந்தியாவின் நெற்களஞ்சியம்' எனப் புகழுமாறு வளப்படுத்துகிறது.

இத்தகைய புண்ணிய நதியாகிய காவிரியின் வளத்தைக் கம்பரும், "தண்ணீரும் காவிரியே! தார் வேந்தன் சோழனே! மண்ணாவதும் சோழ மண்டலமே" எனப் பாராட்டிப் பாடியுள்ளார்.

அன்னை காவிரி என்றும் வாழ்க!

பயிற்சி

[காவிரியாற்றின் பெருமையையும் உபயோகத்தையும் விளக்குவது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : கோள் - கிரகங்கள். நீடுதல் - மிகுதல். தண்டமிழ் (தண்மை + தமிழ்) - இனிய தமிழ். பாவை - பெண். தண்டமிழ்ப் பாவை - காவிரி. விருத்த - வயது முதிர்ந்த. நுந்தா விளக்கு - தூண்டா விளக்கு; எப்பொழுதும் எரிந்து கொண்டிருக்கும் விளக்கு. போக்குமடை - வடிகால். சாகரம் - கடல். பூங்கா - பூந்தோட்டம். மின்-ஒளிக்கதிர்கள் - மின்சாரக் கிரணங்கள். திவலை - நுண்ணிய நீர்த்துளி. ஒளிர்தல் - பிரகாசித்தல். தார் - மாலை. உபநதி, கிளைநதி,—வேற்றுமை யறிக.

கருத்துணர்தல் :

1. காவிரியின் பெயர்க் காரணத்தை எழுதுக.

2. தலைக் காவிரி, அகண்ட காவிரி, விருத்த காவிரி இவற்றைப்பற்றிச் சிறு குறிப்புக்கள் வரைக.

3. கண்ணம்பாடி அணை; மேட்டூர் அணை, சிவசமுத்திரம் நீர்வீழ்ச்சி இவற்றால் தனித்தனி விளையும் நன்மைகளைக் கூறு.

4. 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரி'; 'கோள் திரிந்து .... தண்டமிழ்ப் பாவை', 'தண்ணீரும் .... சோழமண்டலமே'—பொருள் விளக்குக.

5. மேலணை கட்டப்பட்டதன் நோக்கம் யாது ?

கட்டுரை : தான் ஓடும் வழியைக் காவிரி நதியே விவரித்து உரைப்பதுபோல் ஒரு கட்டுரை ஒரு பக்க அளவில் எழுதுக.

---

18. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன்—பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன் ;
எல்லை விரிந்த சமவெளி எங்கும் நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.

காயும் நிலத்தழல் ஆற்றிவந்தேன்—அதில்
கண்குளி ரப்பயிர் கண்டுவந்தேன் ;
ஆயும் மலர்ப்பொழில் செய்துவந்தேன்;-அங்(கு)என்
ஆசைதீ ரவிளை யாடிவந்தேன்.

ஏருத மேடுகள் ஏறிவந்தேன்—பல
ஏரி குளங்கள் நிரப்பிவந்தேன் ;
ஊருத ஊற்றிலும் உட்புகுந்தேன்;—மணல்
ஓடைகள் பொங்கிட ஓடிவந்தேன்.

ஆயிரம் காலால் நடந்துவந்தேன்;—நன்செய்
அத்தனையும் சுற்றிப் பார்த்துவந்தேன் ;
நேயமுறப் புன்செய்க் காட்டிலும் அங்கங்கு
நீரை இறைத்து நெடுகவந்தேன்.

மாங்கனி தேங்கனி வாரிவந்தேன்—நல்ல
வாச மலர்களும் அள்ளிவந்தேன் ;
தீங்கரும்(பு) ஆயிரம் தள்ளிவந்தேன்—மிகத்
தேனும் தினையும் சேர்த்துவந்தேன்.

அல்லும்பகலும் அலைந்துவந்தேன்;—எங்கள்
ஆழி இறைவனைக் காணவந்தேன்;
நில்லும் எனக்(கு) இனி நேரமில்லை; இன்னும்
நீண்ட வழிபோக வேண்டும்அம்மா.

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

பயிற்சி

[இச் செய்யுள் சுய சரிதை முறையில் எழுதப்பட்டுள்ளதை ஓர்க.]

அருஞ்சொற்கள் :

அழல் - வெப்பம். மலர்ப்பொழில் - மலர்ச்சோலை. ஆயிரம் காலால் - பல கால்வாய்களால். நேயம் - அன்பு. நன்செய் - சேருக்கிப் பயிரிடும் நிலம். புன்செய் - புழுதியில் பயிரிடும் நிலம். தினை - ஒரு தானியம். அல் - இரவு. ஆழி இறைவன் - கடலாகிய தலைவன்.

கருத்துணர்தல் :

1. ஆறு எவ்வெவ்விடங்களில் முறையே குதித்தும், கடந்தும், தவழ்ந்தும் வந்தது?

2. ஆறு ஆசை தீர எங்கு விளையாடி வந்தது?

3. நன்செய் புன்செய் வழியாகப் பாய்வது எந்தச் செய்யுளில் கூறப்படுகிறது?

4. ஆறு அடித்து வரும் ஆறு பொருள்களை நவில்க.

5. ஆறு யாரைக் காண, எவ்விதம் வந்ததாகச் சொல்கிறது?

1. வாக்கியங்களில் உபயோகி: அல்லும் பகலும், காடும் செடியும், வாசமலர், ஆழி, பொழில், நன்செய், புன்செய்.

2. கொல்—கொள். விலங்கு—விளங்கு.

லகர, ளகர, ழகரங்கள் சொற்களில் வரும்பொழுது பொருள் வேறுபடுவதைக் காண்க.

வேறு உதாரணங்கள் :

தலை	வால்	ஆல்
தளை	வாள்	ஆள்
தழை	வாழ்	ஆழ்

இரந்தான்—பிச்சை யெடுத்தான். இறந்தான்—மரித்தான்.

ரகர, றகரங்கள் சொற்களில் வரும்பொழுது பொருள் வேறுபடுவதைக் காண்க:

எரி, ஏரி, உரி, உரை, மரம், பரி.

எறி, ஏறி, உறி, உறை, மறம், பறி.

3. ஒவ்வொரு இனத்திற்கும் அதே வகையான மூன்று வேறு பொருள்கள் எழுது:

1. ஆறு, ஏரி, குளம், ———, ———. ———.
2. உருது, தமிழ், தெலுங்கு, ———, ———, ———.
3. சீனா, ஜப்பான், ஜெர்மனி, ———, ———, ———.
4. வீணை, தவுல், புல்லாங்குழல், ———, ———, ———.
5. வழக்கறிஞர், கவிஞர், சிற்பி, ———, ———, ———.

பிற நூல் ஆராய்ச்சி :

தற்காலக் கவிஞராகிய திரு. சி. தேசிகவிநாயகம் பிள்ளையவர்களது **மலரும் மாலையும்** என்னும் நூலிலிருந்து வேறு பாடல்கள் சிலவற்றைப் படித்தறிக.

19. பிறர்க்குதவி

உதவியின் சிறப்பை என்னென் றுரைப்பது? உதவிபுரிதல் எனுந்தன்மை தெய்வத்தன்மையாகும். இத்தன்மை இயற்கையில் விளங்கும் முக்கிய இயல்பாகும். எங்ஙனமெனில், நாடோறுங் காலையிலே குணதிசையில் எழுஞ் செங்கதிரவனை நோக்குங்கள். அவன் இவ்வுலகிற்கு உதவிபுரிவதில் முதல்வனாய் விளங்குகின்றான். பகலோன் காய்வதால் கடல் நீர் ஆவியாகி விசும்பில் எழுந்து மழை பொழிகின்றது. தினகரனது கிரணத்தால் தாவரங்கள் பசிய நிறம் பெற்று வளருகின்றன.

இவ்வுலகிலுள்ள மிகச் சிறு பொருள்களும் ஒன்றிற் கொன்று உதவிபுரிந்து வாழ்கின்றன. உலகிலுள்ள சராசரப் பொருள்களிடத்தில் உதவிபுரியுங் குணமில்லை யாயின், அவை இவ்வுலகிலிருக்க இடம் பெறாவாம். சிறிய தேனீ, நாடோறும் மலர்களிற் புகுந்து, பூந்தாதிற் புரண்டு தேனைப் பருகாவிடில் மரங்கள் கனி கொடா. மலர்கள் தம்மகத் துறைந்த தேனை வண்டுகளுக்கு ஊட்டாவிடில், வண்டுகள் மாண்டுபோகும். இப்படியே பார்க்கும்பொழுது, ஒன்றிற்கொன்று உதவிபுரிதல் என்னுங் குணம் இவ்வுலகத்திலுள்ள எல்லாப் பொருளையும் ஒன்றுசேர்த்துக் கட்டுகின்ற பொற்சங்கிலியாக இருக்கிறது.

இத்துணைச் சிறப்பு வாய்ந்த இவ்வரிய குணம், எல்லா உயிர்களிலுஞ் சிறந்து விளங்குகின்ற மனிதனிடத்தில் முழுமையாகக் காணப்படாவிட்டால், அவன் பரிபூரண மான முன்னேற்றமடைய முடியாது. எவனிடத்தில் இக் குணம் முதிர்ந்து கனிந்து விளங்குகின்றதோ, அவனே மகா ஞானி; அவனே மகாத்மா. எப்பொழுதும் பிறர்க்கு உதவிபுரியவேண்டு மென்னும் பேரவாவோடு கண்ணுங்

கருத்துமாய் முயற்சித்துவருகிறவனே உலகம் போற்றுமென்பதற்கு ஐயமில்லை. தன்னலமுடைய மக்கள் அவனைக் கண்டு நாணமுறுவார்கள்.

நமது தேசமெங்கும் புகழ்பெற்ற ஈசுவர சந்திரர் என்பவர், ஒரு நாள் வங்காளத்தில் ஒரு நதிக்கரை வழியாக நடந்து செல்லுகையில், அங்கு நீராடுந் துறையொன்றின் அருகில் ஒரு மனிதன் அமர்ந்திருப்பதைக் கண்டார். அவன் துயரக் கடலில் மூழ்கினவனைப் போற் காணப்பட்டான். அவன் தன் முழந்தாளைக் கட்டிக்கொண்டு தலை கவிந்தவாறு இருந்தான். ஈசுவர சந்திரர் அவனது நிலையைக் கண்டு உள்ளங் கனிந்து அவனை அணுகினர். அவன் முதலில் அன்னரிடம் தனக்குற்றவைகளைச் சொல்ல மறுத்தானாயினும், இறுதியில் தன் ஒரே மகளைத் தக்க வரனொருவனுக்கு மணஞ்செய்துகொடுக்கும்பொருட்டுத் தான் வாழ்ந்திருந்த வீட்டை அடைமானம் வைத்துக் கடன் கொண்டதையும், பின்பு அக்கடனைத் தீர்க்க வகையில்லாமையாற் கடன்காரர் அவ்வீட்டை மறுநாள் ஏலமிட விருப்பதையும் அவரிடங் கூறினன். தன் வயது சென்றதாய் இளமை முதல் வாழ்ந்த அவ்வீட்டை விட்டு வேறொரு வீட்டிற் குடிபுக மனமற்றிருப்பதாகவும் நவின்றான். ஈசுவர சந்திரர் அவனிடமிருந்து கடன் கொடுத்தவனுடைய விலாசத்தைத் தெரிந்துகொண்டு அவண் இருந்து அகன்றார். மறுநாள், அவர் கடன் கொடுத்தவனைச் சந்தித்து, அவனுக்குச் செல்லாகவேண்டிய பொருள் முழுவதையுங் கட்டி இரசீது பெற்றுக்கொண்டு போய்விட்டார். கடன் பட்டவனுக்கு நீடிய காலம் வரை தனக்குதவி புரிந்தவர் இன்னரென்றே புலப்படாதிருந்தது.

ஸர் பிலிப் ஸிட்னி என்பவர் போர்க்களத்தில் காயம் பட்டு மரணத்தறுவாயி லிருக்கையில், சில வீரர்கள் ஒரு பாத்திரத்தில் நீர் கொண்டுவந்து அவரிடங் கொடுத்தார்

கள். அவர் அதைக் குடிக்கப்போகுந் தருணத்தில், அண்மையில் ஒருவீரன் நீர் வேட்கையிலிருப்பதைக் கண்டு, தமது கையிலிருந்த நீர்ப் பாத்திரத்தை அவனிடங் கொடுத்துவிட்டார். அவன் அதை ஆவலோடு வாங்கிப் பருகுவதைக் கண்டு, அவர் மகிழ்வடைந்து உயிர்துறந்த தாகச் சரித்திரம் கூறுகிறது.

"காலத்தினுற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது."

ஆகையால், செய்கின்ற உதவியை உற்றவிடத்தே உரிய காலத்திற் செய்தல்வேண்டும்.

ஒருபொழுது சித்தார்த்தர் ஒரு பூங்காவிலிருக்கையில் அங்கே ஓர் அன்னம் அம்பு பட்டுக் கிடந்தது. அதன் வெண்மையான சிறகுகள் செங்குருதியில் தோய்ந்து கிடந்தன. அவ்வன்னம் நோவைத் தாங்க முடியாது துடித்துக்கொண்டிருந்தது. சித்தார்த்தர் ஓடிச் சென்று, அப்பறவையை மெத்தெனப் பிடித்து அதன்மேல் தைத்திருந்த பாணத்தை மெல்லென எடுத்தார். பின்பு அதன் புண்ணில் மருந்திலைகளைப் பிழிந்து கட்டினுர். அதன் துயரத்தைத் தம்மாலானமட்டும் ஆற்ற முயன்றுர். ஆயினும், அதற்குற்ற நோய் எப்படிப்பட்டதென்று அவர் அறியாதிருந்தார். ஆதலால் அவர், அந்தக் கணையை எடுத்துத் தமது கரத்தில் உறுத்திப் பார்த்தார். அப்பொழுதுதான், அவருக்கு அப்பறவையின் நோய் எத்தன்மைத்தென்று புலப்பட்டது. இவ்வாறு பிறவுயிர்களின் துயரை உணர அவர் இளமை முதற்கொண்டே பயின்றதினுல், முடிவில் உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும் அன்பு மிகுந்த மகா புத்தராய் விளங்கினுர்.

அன்பு மேலீட்டால் நிகழ்த்தப்படும் உதவியே சாலச் சிறந்ததாகும். கைம்மாறு கருதிச் செய்தல் உண்மை உதவியாகாது.

'அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு'

என்றார் திருவள்ளுவனாரும்.

பிறர் துயர் துடைப்பதற்கு இளமையிலிருந்தே பயிலல்வேண்டும். இதுபற்றியே கல்விச்சாலைகளில் சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், சமூகப் பணி இவைகளில் சிறுவர்களையும் சிறுமிகளையும் ஈடு படச் செய்து, பிறர்க்குதவி புரிவதில் பயிற்சியளிக்கின்றனர். அவ்வியக்கங்களில் நீங்களும் சேர்ந்து, இளமையிலிருந்தே பிறர்க்குதவிபுரியப் பழகுங்கள்.

பயிற்சி

[பிறர்க்குதவிசெய்தலில் இளைஞர்களை ஊக்கும் நோக்குடையது இப்பாடம்.]

அருஞ்சொற்கள் : குணதிசை - கிழக்குத் திசை. விசும்பு. வானம். சராசரம் - அசையும் பொருளும் அசையாப் பொருளும். பூந்தாது - மகரந்தம். கணை - அம்பு. ஞாலம் - உலகம். மாண - மிகுதியாக. வரன் - மணமகன்.

தினகரன், கதிரவன், பகலோன், சூரியன் இவை ஒரு பொருட் பல சொற்களாம்.

கருத்துணர்தல் :

1. பிறர்க்கு உதவிசெய்யும் தன்மை இயற்கையில் விளங்கும் இயல்பாகும் என்பதை உதாரணங்களால் விளக்குக.

2. மலரும் வண்டும் ஒன்றுக்கொன்று எவ்வாறு உதவி செய்கின்றன?

3. ஈசுவர சந்திரர் புரிந்த உதவியை 10 வரிகளில் எழுதுக.

4. "காலத்தினாற்................... மாணப் பெரிது"—இக் குறட்பாவின் கருத்தை சர் பிலிப் ஸிட்னியின் வரலாறு எவ்விதம் புலப்படுத்துகிறது?

5. சித்தார்த்தர் வரலாறு உனக்கு அறிவிப்பது என்ன?

கட்டுரை :

சாரண இயக்கத்தில் வற்புறுத்தப்படும் ஒரு நல்லுதவியை நாள்தோறும் நீ புரிந்துவருகிறாயா?

நேற்றைய தினம் நீ புரிந்த நல்லுதவியைப்பற்றி ஒரு பத்தி எழுது.

---

20. சர் சி. வி. ராமன்

விஞ்ஞானக் கலை ஆராய்ச்சிக்காகச் சென்ற 1930-ம் ஆண்டு "நோபெல் பரிசு" பெற்ற சர் சி.வி. ராமனைப் பற்றி அறிந்துகொள்ள நீங்கள் யாவரும் விரும்புவீர்கள். இவரது முழுப் பெயர் சந்திரசேகர வேங்கடராமன். இந்தியா தன்னைப் புகழுக்கு இடமாக்கிக்கொள்வதற்கு அவ்வப் போது பெற்றெடுக்கும் அரும் பெரும் மக்களுள் சர் சி. வி. ராமன் ஒருவராவர். 1888-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஏழாந் தேதி யன்று இவர், திருச்சிராப்பள்ளியில் பிறந் தார். இவரது தந்தையாகிய சந்திரசேகர ஐயர் தஞ்சாவூர் சில்லா பாபவிநாசத்திற் கருகிலுள்ள மாங்குடியைச் சேர்ந்தவர். அவர், தமது வருவாயின்பொருட்டு, அப் போது திருச்சிராப்பள்ளியில் கல்லூரி ஒன்றில், இரசா யன நூற் போதகராக வேலை பார்த்துவந்தார்.

சி. வி. ராமனுக்கு நான்கு வயதாகும்போது, சந்திர சேகர ஐயர் விசாகப்பட்டினத்திலுள்ள கல்லூரி ஒன்றில் ஆசிரியராக நியமிக்கப்பட்டார். சி. வி. ராமன் விசாகப் பட்டினத்திலேயே கல்வி பயின்று, தமது பதினொன்காவது வயதில் "எப். ஏ." பரீட்சையில் முதன்மையாகத் தேறினர்.

சர் சி. வி. ராமன்

இளமையிலேயே சி. வி. ராமன் கூர்ந்த அறிவும், திறமையும், சுறுசுறுப்பும், பூதபௌதிக இரசாயன நூல்களில் மிக்க ஆர்வமும் உடையவராக விளங்கினர். தமது ஏழாவது வயதிலேயே விஞ்ஞான அறிவு நூல் ஒன்றை ஆவலுடன் படித்து முடித்தனராம். விசாகப்பட்டினத்தின் சுகாதாரம் தமக்கு ஒவ்வாமையால் சி. வி. ராமன் அடிக்கடி நோயுற்றுத் துன்பமடைந்தார். ஒரு சமயம் கடுமையான நோய் வாய்ப்பட்டுக் கவலைக்கிடமான நிலையில் படுத்த படுக்கையாக இருந்தார். அந்நிலையிலும் மின்சார சம்பந்தமான பரிசோதனை ஒன்றைச் செய்துகாட்டுமாறு தமது தந்தையைப் பெரிதும் வற்புறுத்தினராம். அவர் உடனடியாகவே கல்லூரியிலிருந்த பரிசோதனைக் கருவிகளை வீட்டிற்குக் கொணர்ந்து, பரிசோதனையைச் செய்து காட்டினர். அதன்பிறகுதான் நமது சி. வி. ராமனுக்கு மன அமைதி ஏற்பட்டதாம்.

இவர் பீ. ஏ. படிப்பிற்காகச் சென்னைப்பட்டினத்திலுள்ள இராசதானிக் கல்லூரியிற் சேர்ந்தார். இவர் உருவிற் சிறியராயினும் அறிவிற் பெரியவராக விளங்கின்மையால் கலாசாலை ஆசிரியர்கள் பலரும் இவர்பால் அதிகப் பரிவுடன் நடந்துகொண்டார்கள். தமது பதினருவது வயதில் பீ. ஏ. பரீட்சையில் முதன்மையாகத் தேறி, எல்பின்ஸ்டன் பொற்பதக்கமும், ஆரணி ஜாகீர்தாரின் பொற்பதக்கமும் பரிசுபெற்றார்.

பிறகு, அக் கல்லூரியிலேயே விஞ்ஞானக் கலையைப் பாடமாக எடுத்துக்கொண்டு, எம். ஏ. பட்டத்திற்காகப் படித்துவந்தார். ஒரு நாள் இவர் ஒளி சம்பந்தமான பரிசோதனையைச் செய்யும்போது அதுவரையிற் கண்டறியாத சில புதுமைகள் தோன்றக் கண்டார். உடனே அவற்றை ஆராய்ந்து விரிவான கட்டுரை ஒன்று எழுதி மேனாட்டுப் பத்திரிகை மூலம் வெளியிட்டார். மற்றொரு

நாள் தம்முடன் பயின்ற மாணவர் ஒருவர் ஒலி சம்பந்தமான பரிசோதனை செய்துகொண்டிருக்கும்போது சில மாறுபாடுகள் தோன்றக் கண்டு, சி.வி.ராமனிடம் அதனைத் தெரிவித்தார். அவர் அம் மாறுபாட்டின் காரணத்தை உடனே உய்த்துணர்ந்து அதனை விளக்கிக் காட்டினர். பின் அதுபற்றி விரிவாக அம்மாணவருடன் ஆராய்ச்சி செய்து, ஒரு கட்டுரை வெளியிட்டார். இவர் கண்டுபிடித்து வெளியிட்ட அருமையான புது ஆராய்ச்சிகளைக் கண்ட விஞ்ஞான மேதாவிகள் பலரும், இவரது அறிவின் திறமையைப் பாராட்டி ஊக்கமளிக்கும் நற்செய்திகள் பல அனுப்பினர்.இவரது ஆசிரியராக அப்போதிருந்த ஜோன்சு என்பவர், "வேங்கடராமன் விரைவில் உலகத்தால் போற்றப்பெறுவான்" என்று கூறினராம். விளையும் பயிர் முளையிலேயே தெரியுமல்லவா?

இவர், தம் ஓய்வு நேரங்களில் நாட்டு வரலாறு, பொருளாதார நூல், கணித நூல் முதலிய கலைகளையும் பயின்று வந்தார். விஞ்ஞானிகளுக்குக் கணித அறிவு இன்றியமையாததென்று உணர்ந்து, அக் கலையைப் பெரிதும் பயின்று தேர்ச்சியடைந்தார். பிறகு தமது பதினெட்டாவது வயதில் எம். ஏ. பரீட்சையில் முதல்தரமாகத் தேறினர்.

மேற்படிப்பிற்காக மேனாட்டுக்குச் செல்ல அவரது உடல் நிலை இடந்தரவில்லை. அக்காலத்தில் விஞ்ஞானக் கலையில் பெரிதும் பொதுமக்கள் ஊக்கங்கொள்வதில்லை; விஞ்ஞானிகளுக்குத் தகுந்த ஆதரவும் கிடையாது. எனவே, தமது ஆசிரியர்களின் ஆலோசனையின்பேரில் "இந்தியப் பொருள் இலாகா" உத்தியோக நியமனத்திற்காக நடந்த போட்டித்தேர்வுக்குச் சென்றார். அதில் நமது சி. வி. ராமன் முதன்மையாகத் தேறவே கல்கத்தாவில் உதவி அகௌண்டெண்ட்-ஜெனரலாக நியமிக்கப்பட்டார்.

பத்து ஆண்டுகள் வரையில் அவ்வரசாங்க உத்தியோகம் வகித்துத் திறமையாக நடத்திப் பேரும் புகழும் பெற்ருர். கல்கத்தாவிலுள்ள "இந்தியக் கலை ஆராய்ச்சிச் சங்கத்தில்" சேர்ந்து, தம் ஓய்வு நேரங்களிலெல்லாம் தளரா ஊக்கத்துடன் விஞ்ஞானக் கலை ஆராய்ச்சியில் ஈடுபட்டுத் தாம் கண்டுபிடித்தவைகளை வெளியிட்டார். இப்போது அச்சங்கத்தின் ஆயுள் உறுப்பினராகவும், தலைவராகவும் இவர் விளங்குகிருர். தாம் ஆராய்ச்சி செய்து வெளியிட்டுள்ளவற்றின் பயனுகை இவருக்கு மென்மேலும் புகழ் பெருக ஆரம்பித்தது. இடையிடையே இரங்கூன், நாகபுரி முதலிய இடங்களுக்கு மாற்றப்பட்டபோதிலும் விஞ்ஞானக் கலை ஆராய்ச்சியில் இவர் கொண்டிருந்த அளவற்ற ஆர்வமும் ஊக்கமும் சிறிதும் குன்றவில்லை.

அப்போது, பாலட் என்பவர் பெயரால் கல்கத்தா சர்வ கலாசாலையில் விஞ்ஞான நூற் புலவர் ஒருவரை நியமிக்க ஒரு நிதி ஏற்படுத்தப்பட்டது. அதற்குத் தகுதி வாய்ந்த ஒருவர் கிடைக்காமலிருந்த நிலையில், சி.வி. ராமன் தம் ஆராய்ச்சியின் பயனுகை ஈட்டிய பெரும் புகழ், அச்சர்வ கலாசாலை உப அத்தியட்சராக இருந்த சர் ஆசுதோஷ் முகர்ஜியின் கவனத்தைப் பெற்றது. உடனே அவர் சி. வி. ராமனை அணுகி, அப்புலவர் பதவியை ஏற்கும்படி பெரிதும் வேண்டிக்கொண்டார். விஞ்ஞான ஆராய்ச்சியில் தமக்கு இருந்த ஆர்வ மிகுதியால் தமக்குக் கிடைத்துவரும் பெரிய வருவாயைச் சிறிதேனும் பொருட்படுத்தாமல், நமது சி. வி. ராமன் அரசாங்க உத்தியோகத்திலிருந்து விலகிச் சர்வ கலாசாலைப் புலவராக மிகவும் சொற்ப சம்பளத்தில் அமர்ந்தார்.

விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் பயிற்சி பெற இந்தியாவில் பல்வேறிடங்களிலிருந்தும் மாணவர் பலர்

6

இவரை யடைந்தார்கள். தாம் ஆராய்ச்சி செய்து புதியன கண்டுபிடிப்பதைவிடத் தம் மாணவர்கள் ஆராய்ச்சியில் திறமைபெறவேண்டு மென்று பெரிதும் பாடுபட்டார். அதன் பயனைகப் பல மாணவர்கள் பெரும் பேர் அடைந்தார்கள். இடையிடையே இவரால் வெளியிடப்பட்ட ஆராய்ச்சிகள் உலகப்பிரசித்தி பெறலாயின. உலகத்திலுள்ள பல்வேறு சர்வ கலாசாலைகளும் பல பட்டங்களை இவருக்கு அளித்தன. மற்றும் லண்டன் ராயல் சங்கத்தின் அங்கத்தினராக விரும்பிச் சேர்த்துக்கொள்ளப்பட்டார். சென்ற 1929-ம் ஆண்டில் நம் இந்திய அரசாங்கத்தார் இவருக்கு "சர்" என்ற உயரிய பட்டத்தை அளித்துச் சிறப்பித்தார்கள். ரோம் நகரிலுள்ள "கலை ஆராய்ச்சிக் குழுவினர்" பொற் பதக்கம் ஒன்றளித்தார்கள். லண்டன் ராயல் சங்கத்தினரும் பதக்கம் ஒன்றளித்தார்கள்.

சுவீடனில் ஆல்பிரட் நோபெல் என்ற இரசாயன வல்லுநர் ஒருவர் இருந்தார். இவர் பாறைகளைத் தகர்த்தெறியும் புதிய வெடி ஒன்றைக் கண்டுபிடித்து, அதன் மூலம் ஏராளமான பொருளைச் சம்பாதித்தார். அவர் எழுதி வைத்த மரண சாசனப்படி ஒரு நிதி நிறுவப்பட்டது. அந் நிதியின் வட்டியைக்கொண்டு விஞ்ஞானம், இரசாயனம், வைத்தியம், இலக்கியம், உலக சமாதானம் முதலிய துறைகளில் பெரிதும் பாடுபட்டு மானிட சமூகத்திற்குப் பயன் விளைவிப்போர்களுக்குப் பரிசுகள் வழங்கப்படுகின்றன. இப் பரிசுக்கு "நோபெல் பரிசு" என்று பெயர். உலகத்திலுள்ள மற்றெல்லாப் பரிசுகளையும்விட இப்பரிசுதான் மிக்க மதிப்பு வாய்ந்தது. சென்ற 1930-ம் ஆண்டில் விஞ்ஞானக் கலை ஆராய்ச்சித் திறமைக்காக இந் நோபெல் பரிசு நமது சர் சி. வி. ராமனுக்கு அளிக்கப்பட்டது. ஆசியாக் கண்டத்தில் இத்துறையில் முதன்முதலாக இப்பரிசு பெற்றவர் இவர்தான்.

சர் சி. வி. ராமன் ஒலி சம்பந்தமாக விரிவான ஆராய்ச்சி செய்து, புத்தக உருவமாக வெளியிட்டுள்ளார். இத் துறையில் இவருக்கு இப்போது நிகர் ஒருவருமில்லை. ஜெர்மனியில் தயாரிக்கப்பட்ட "பல்பொருட் களஞ்சிய" நூலுக்கு அந் நாட்டவர் வேண்டுகோளின்படி ஒலி சம்பந்தமான கட்டுரையொன்று இவரால் வரைந்து அளிக்கப்பட்டது. ஒளியைப்பற்றியும் பலவித ஆராய்ச்சிகள் செய்து வெளியிட்டுள்ளார். வானம், கடல் இவைகளின் நீல நிறத்தின் காரணத்தைச் செவ்வையாகக் கண்டுபிடித்தவர் இவர்தான். இவரிடம் எண்ணிறந்த மாணவர்கள் பயிற்சிபெற்றுவருகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் ஏதாவது புதுமைகளைக் கண்டுபிடித்து வெளியிட்டவண்ணமாகவே இன்றும் இருக்கின்றனர். மேனாட்டுச் சர்வகலாசாலைகளின் வேண்டுகோளுக்கிணங்கி சி. வி. ராமன் இரண்டொரு முறை மேனாடுகளுக்குச் சென்று, தாம் செய்த ஆராய்ச்சிகளைப்பற்றி விரிவுரைகள் நிகழ்த்தி, அந் நாட்டவர் மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றுள்ளார். ஜெ. என். டாட்டா என்பவர் மூலதனமளித்துப் பங்களூரில் ஏற்படுத்தியுள்ள நவீன அறிவியற் கலையாராய்ச்சிச் சாலையின் தலைவராக நியமனம் பெற்று நீடிய காலம் அப்பதவி வகித்துவந்தார். தற்பொழுது அவ்வேலையினின்று நீங்கிப் பல கௌரவ பதவிகள் வகித்துப் பங்களூரிலேயே வதிந்துவருகின்றனர்.

பெரிய விஞ்ஞான ஆராய்ச்சி விஷயங்களைப் பாமர மக்களும் அறியும்படி மிக எளிய நடையில் பேசுவதில் இவருக்கு ஒப்பாரு மிக்காருமில்லை. அன்பு, ஊக்கம், தன்னலமின்மை, ஆடம்பரமின்மை முதலிய அரும் பெருங் குணங்கள் இவரிடம் உண்டு. தம் தாய்நாடாகிய இந்தியாவின்மேல் பெரிதும் பற்றுடையவர். இயற்கை அழகைக் கண்டு ஆனந்தமுறுவதில் இவரை ஒரு கவி என்றே சொல்லலாம். எனவே, நமது சர் சி. வி. ராமனைப்

போல் நீங்களும் தளரா ஊக்கத்துடனும், விடா முயற்சி யுடனும் பாடுபவீர்களானல் நீங்கள் ஒவ்வொருவரும் ஒரு சர் சி. வி. ராமனகப் புகழ்பெறலாம் என்பதில் ஐய முண்டோ? கடவுள் இவருக்கு உடல் நலமும் நீண்ட ஆயுளும் அருள்வாராக!

"தோன்றிற் புகழொடு தோன்றுக; அஃதிலார்
தோன்றலில் தோன்ருமை நன்று."

பயிற்சி

[நம் தமிழ்நாட்டுத் தற்கால விஞ்ஞானப் பெரியார் ஒருவரது வாழ்க்கை வரலாறு இப்பாடமாகும். அறிவியற் கலைகளிலும், ஆராய்ச்சிகளிலும் மாணவர்களை இவ்வரலாறு ஈடுபடச் செய்யு மென்று கருதப்படுகிறது.]

அருஞ்சொற்கள் : விஞ்ஞானக் கலை - இயற்கை நுட்பங்களை அறிவிக்கும் நூல். ஒவ்வாமை - பொருந்தாமை. மரண சாசனம் - உயில். நோபெல் பரிசு : 8000 பவுன் மதிப்புள்ளது. பல்பொருட் களஞ்சிய நூல் - பல பொருள்களைப்பற்றிய செய்திகளை விரிவாகத் தொகுத்துக் கூறும் மாபெரும் புத்தகம்.

கருத்துணர்தல் :

1. 'விளையும் பயிர் முளையிலே தெரியும்' — இப்பழமொழி சர் சி. வி. ராமன்பற்றி எவ்விதம் பொருந்தும்?

2. சிறு குறிப்புக்கள் தெறிக்க: நோபெல் பரிசு, விஞ்ஞானக் கலைகள், பல்பொருட்களஞ்சியம், டாட்டா அறிவியல் ஆராய்ச்சிச் சாலை.

3. விஞ்ஞான ஆராய்ச்சித் துறையில் சி. வி. ராமன் செய்த பணிகளையும், அவைகளால் அவர் அடைந்த பதவிகளையும் விளக்கிக் கூறு.

4. சர் சி. வி. ராமனது வாழ்க்கை வரலாறு மாணவர்க்கு ஒரு வழிகாட்டியாகும். எங்ஙனம்?

கட்டுரை :

சர். சி. வி. ராமன் வரலாற்றைப் பின்வரும் தலைப்புக்களில் சுருக்கி எழுதுக :

பிறப்பு வளர்ப்பு, இளமைப் பருவம், விஞ்ஞானக் கலையில் ஆர்வம், பதவிகளும் வாழ்க்கை நிலையும்.

21. விஞ்ஞான விந்தைகள்

மனிதர் பூமியின்கண் தோன்றியது முதல் இயற்கைப் பொருள்களையுஞ் சக்திகளையும் தம் வயப்படுத்தி, தமக்கு ஊழியக்காரர்களாக அமைத்துக்கொள்ள முயன்றுவந்திருக்கின்றனர். சாடுகளை அழித்து நாடாக மாற்றியுள்ளனர். காட்டு மரங்களை வெட்டி வீடு கட்டவும், படகுகள் அமைக்கவும், மற்றும் அநேக பொருள்கள் செய்யவும் உபயோகித்தனர். வன விலங்குகளைப் பழக்கி வாகனங்களாகவும், அவற்றை வேட்டையாடி உணவாகவும் கொண்டனர். பூமியைத் திருத்திப் பல பயிர் வகைகளைச் சாகுபடி செய்தனர். உலோக வகைகளை உருக்கி ஆயுதங்களாகவும், ஆபரணங்களாகவும், பாத்திரங்களாகவும் அமைத்தனர். மலைகளைக் குடைந்து குகை வழிகளையும், ஆறுகளைக் கடக்கப் பெரிய பாலங்களையும் ஏற்படுத்தினர்.

மேலும், காற்றின் பலத்தினால் காற்றாடி எந்திரங்களையும், கப்பல்களையும் இயங்கச் செய்தார்கள். நீர் வீழ்ச்சியின் ஆற்றலினால் பெரிய சக்கரங்களைச் சுழலச் செய்து பல ஆலைகளை அமைத்தார்கள். நீராவியின் சக்தியால் புகை வண்டிகளையும், மற்றும் பல எந்திரங்களையும் ஏற்படுத்தினார்கள். பிறகு மண்ணெண்ணெய், பெட்ரோல் இவைகளை ஆவியாகச் செய்து, நெல் அரைக்கும் எந்திரங்களையும் மோட்டார் வண்டிகளையும் ஓடச் செய்தார்கள். தற்காலத்தில் மின்சார சக்தியினால் எண்ணரிய நவீன விந்தைகளை அனைவரும் வியப்புறுமாறு அமைத்துள்ளார்கள்.

டெலிஸ்கோப்பு என்ற தூரதிருஷ்டிக் கண்ணாடியால் சந்திர சூரிய நட்சத்திரங்களின் அமைப்பின் இரகசியங்களை அருகிற் கண்டு அறிகிறோம். பூதக் கண்ணாடியின் உதவியால் கண்ணுக்குத் தெரியாத நுண்பொருள்களைப்

பெரிதாகக் காண்கிறோம். புகைப் படக் கருவியால் பல உருவப் படங்களைத் தயாரித்து நிரந்தரமாக வைத்துக் கொள்கிறோம். பட விளக்குக் கருவியால் பல சித்திரங்களையும், படக்காட்சியால் (சினிமா) பல நாடக நடிப்புக்களையுங் கண்டு களிக்கிறோம். பேசும் படக்காட்சியில் இசை, உரையாடல், நடிப்பு இவை மூன்றையும் கண்டும் கேட்டும் இன்புறுகிறோம். கிராமபோன் எந்திரங்களால் பல புலவர்களுடைய இசைத் திறனையும் சொற்பொழிவுகளையுஞ் செவியுறுகிறோம். ஆகாயக் கப்பல், ஆகாய விமானங்களின் உதவியால் வான வீதியிற் பிரயாணஞ் செய்கிறோம். மிகுந்த தூரங்களை இவை வெகு விரைவில் கடந்து செல்கின்றன. இவைகளின்மூலம் ஆகாயத் தபால்கள் தொலைவிலுள்ள இடங்களுக்குக் கொண்டு போகப்படுகின்றன. தந்தியின் மூலமாகச் செய்திகளை அதே நிமிடத்தில் தொலையூர்களுக்குத் தெரிவிக்கிறோம். டெலிபோன் கருவியால் மிகத் தொலைவிலுள்ளவர்களுடன் நேரில் நின்று பேசுவதுபோல உரையாடுகிறோம். நுட்பமான மின்சாரக் கருவிகளால் ஒலிகளைப் பரப்பிக் கம்பியில்லாத் தந்தியின் மூலமாக அநேக ஆயிர மைலுக்கப்பாலும் செய்திகளை அனுப்புகிறோம். மற்றும் ஒலி பரப்புங் (ரேடியோ) கருவிகளை வாங்கிவைத்து, நமது வீட்டிலிருந்தபடியே உலகத்தின் பற்பல இடங்களிலும் நிகழ்த்தப்படுஞ் சொற்பொழிவுகளையும் இதர நிகழ்ச்சிகளையும் அதே தருணத்தில் கேட்டு மகிழ்கிறோம்.

மாந்தர் கண்டுபிடித்துள்ள பலவிதச் சக்திகளில் எதுவும் மின்சார சக்திக்கு இணையாகாது. மின்சாரத்தின் அளவிறந்த சக்தியைச் சிறிது காலமாகத்தான் ஆராய்ந்தறிந்து, கணக்கற்ற வகைகளில் பயன்படுத்திவருகிறார்கள். மின்சார சக்தியென்றால் இன்னதென்று எளிதில் இங்குக் கூறுவது இயலாது. அதன் தன்மையையும், அதை உண்டுபண்ணக்கூடிய முறைகளையும் மேல்

வகுப்புக்களிற் கற்றறியலாம். ஆனல் மின்சார சக்தியால் நவ நாகரிகத்தில் என்னென்ன அற்புதங்கள் ஏற்பட்டுள்ளனவென்றும், என்னென்ன விதங்களில் அவை உபயோகமாகின்றனவென்றும் கண்கூடாகப் பார்த்தறிகிறோம்.

மின்சாரக் கைவிளக்குகள் எங்கும் மலிந்து பலரும் அவைகளை உபயோகிக்கக் காண்கிறோம். மின்சார சக்தியினுதவியால் தந்திக் கருவிகள், மின்சாரப் பேசுங் கருவிகள், மின்சார மணி, மின்சார விளக்கு, மின்சார விசிறிகள் இவையனைத்தும் வேலைசெய்கின்றன. பெரிய நகரங்களில் மின்சார இரயில் வண்டிகளும், டிராம் வண்டிகளும் ஓடுகின்றன. பெரிய மருத்துவசாலைகளில் மின்சார முறையால் சிகிச்சை செய்கிறார்கள். ஒலி பரப்பும் கருவிகளைப் பொதுவிடங்களில் அமைத்து, பல வூர்களில் நடைபெறும் இன்னிசை நிகழ்ச்சிகளை மக்கள் கேட்டு இன்புறவும், அன்றாட விலைவாசிகள், தினச் செய்திகள், காலநிலை இவைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்ளவும் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். வீடுகளிற்கூட மின்சார அடுப்புகளும், மின்சார இஸ்திரிப் பெட்டிகளும், மின்சார கடிகாரங்களும், மின்சார தையல் எந்திரங்களும் இக்காலத்தில் பழக்கத்தில் வந்துள்ளன.

தமது உத்தம உழைப்பாலும், முயற்சியாலும் இயற்கையின் பல இரகசியங்களையும் அறிந்து, செயற்கை வகையில் பல்கோடி விந்தைகளை மனிதர் அமைத்திருப்பது மிகவும் வியக்கத்தக்கதாகும்.

பயிற்சி

[விஞ்ஞானக் கலைகள்பற்றிய சொற்களைக் கற்பிக்க இப்பாடம் உதவியாகும். கலைச் சொற்களைத் தமிழில் அமைத்து வழங்குதல் தாய்மொழி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவும்.]

அருஞ்சொற்கள் : இப்பாடத்தில் வரும் கலைச் சொற்களை எடுத்து எழுதி, அவற்றின் விளக்கங்களை அறிக.

கருத்துணர்தல் :

1. **சிறு குறிப்பு எழுதுக :** நீராவியின் சக்தி, டெலிபோன், கம்பியில்லாத் தந்தி, டெலிஸ்கோப்பு, பூதக்கண்ணுடி, ரேடியோ.

2. மின்சார சக்தி தற்காலத்தில் எவ்வெவ் வகையில் பயன் படுகிறது?

கட்டுரை : ரேடியோவின் உபயோகத்தை விவரித்து, ஒரு கட்டுரை ஒரு பக்க அளவில் எழுதவும்.

---

22. வெனிஸ் வர்த்தகன் (நாடகம்)

[முன் கதைச் சுருக்கம்]

வெகு காலத்திற்கு முன் இத்தாலி நாட்டு வெனிஸ் நகரில் அந்தோனியோ, பஸானியோ என்னும் இரு நண்பர்கள் வசித்திருந்தனர். அந்தோனியோ பெரிய வர்த்தகன். பஸானியோ தன் கைப் பொருள்களை யெல்லாம் பல வகைக் களியாட்டங்களிற் செலவு செய்து வறியனு யிருந்தான். பெல்மாண்ட் என்னும் நகரில் வசித்த ஒரு சீமாட்டி பெரிய செல்வவதி என்றும், அவள் மணம் பெருத மங்கையென்றும் கேள்விப்பட்டு, அவளை மணக்க எண்ணினன். அவன் கையிற் பணமில்லாமையால் தன் நண்பன் அந்தோனியோவிடம் சென்று, தன் செலவுக்காக மூவாயிரம் 'டக்கெட்' நாணயங்களைக் கடன் தந்துதவ வேண்டினன்.

அந்தோனியோவின் கையில் அப்பொழுது பணமில்லை. ஆகவே, வெனிஸ் நகரத்தில் பணம் வட்டிக்குக் கொடுத்து வாங்கிக்கொண்டிருந்த யூத வர்த்தகனுகிய ஷைலக்கிடம் சென்று, கடன் வாங்குவதென்று தீர்மானித்தான். அந்தோனியோ கிறிஸ்துவன்; ஷைலக் யூதன்.

அக்காலத்துக் கிறிஸ்துவர்கள் யூதர்களைப் பகைத்தனர். அந்தோனியோ ஷைலக்கைக் கண்டவிடமெல்லாம் ஏசி, ஏளனஞ் செய்வது வழக்கம். அதனால் ஷைலாக் அந்தோனியோவிற்குத் தீங்குசெய்ய உறுதிகொண்டு தக்க சமயம் பார்த்திருந்தான். அந்தோனியோ வேறு வழியின்றி ஷைலக்கிடம் சென்று மூவாயிரம் 'டக்கெட்டுகள்' கடன் வேண்டினன். ஷைலக் தான் கொடுக்கும் கடனுக்கு வட்டி வேண்டியதில்லையென்றும், ஆனல், குறிப்பிட்ட ஒரு நாளில் பணத்தைத் திருப்பித் தரா விடின் அந்தோனியோ முதலுக்கும் வட்டிக்குமாகத் தன் மார்பிலிருந்து ஓர் இராத்தல் தசையை வெட்டித் தந்துவிடவேண்டுமென்றும் நிபந்தனை கண்டு பத்திரம் எழுதி வாங்கிக்கொண்டு, அவன் கேட்ட தொகையைக் கடன்கொடுத்தான். அந்தோனியோ அதனைப் பெற்று பஸானியோவிடம் கொடுத்தான். பணத்தைப் பெற்ற பஸானியோ நேராக பெல்மாண்ட் நகரம் சென்று போர்ஷியாச் சீமாட்டியை மணம்புரிந்து, இன்பமாக வாழ்ந்துவரலானன்.

ஷைலாக்குக்கு ஜெஸிகா என்றொரு மகள் இருந்தாள். அவள், தன் தந்தை அறியாதபடி லாரென்ஸோ என்னும் ஒரு கிறிஸ்துவ வாலிபனை நேசித்துவந்தாள். கிறிஸ்துவர்களுக்கும் யூதர்களுக்கும் அக்காலத்தில் பகை மிகுந்திருந்தது. யூதர்கள் மதப்பற்று மிகுந்தவர்கள். கிறிஸ்துவர்களோடு கொண்டு கொடுத்து வாழ்வதைவிட அவர்கள் சாவை மிகுதியும் விரும்புவார்கள். எனினும், ஜெஸிகா தான் நேசித்த கிறிஸ்துவ வாலிபனையே மணக்கத் துணிந்து, தன் இனத்தார் ஒருவரும் அறியா வண்ணம் லாரென்ஸோடு அயலூருக்குச் சென்றாள். அவள் போகுங்காலையில், ஷைலக்கிடமிருந்த விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் தன்னுடன் கவர்ந்து சென்றாள்.

இதனை யறிந்த ஷைலக் மிகவுங் கோபங்கொண்டான். தன் மகள் தன்னைவிட்டு ஓடிப்போனதுகூட அவனுக்கு அத்துணை பெரிதாகத் தோன்றவில்லை. அவள் தன் பொருள்களையும் உடன்கொண்டு சென்றது அவனல் பொறுக்க முடியவில்லை. மேலும், லாரென்ஸோ என்னும் வாலிபன் அந்தோனியோவின் தோழனுக இருந்தது, ஷைலக்கின் கோபத் தீயில் எண்ணெயை வார்த்தது.

ஷைலக், அந்தோனியோவின்மீது பழி வாங்க முனைந்து நின்று; காலம் நோக்கிக் காத்திருந்தான். பெல்மாண்ட் நகரத்தில் பஸானியோ, போர்ஷியாவுடன் இல்லற வாழ்க்கையில் ஈடுபட்டதால் அந்தோனியோவை மறந்துவிட்டான். கடனைக் கொடுக்கக் குறித்த நாளும் நெருங்கியது. அந்தோனியோ எதிர்பார்த்தபடி அவன் கப்பல்கள் நாடு திரும்பவில்லை. ஆகவே, அவன் பணங் கொடுக்கவேண்டிய கெடு நெருங்கியதை நினைப்பூட்டிப் பஸானியோவுக்குக் கடிதம் ஒன்று விடுத்தான். அதைக் கண்ட பஸானியோ போர்ஷியாவிடமிருந்து வேண்டிய பணத்தைப் பெற்றுக்கொண்டு வெனிஸ் நகரம் சேர்ந்தான்.

அந்தோனியோ பணங்கொடுக்கவேண்டிய தவணை தவறிவிட்டது. நாள் தவறவும், ஷைலக் பணம் பெற மறுத்துப் பத்திரத்திலே குறித்தபடி அந்தோனியோ தன் மார்பிலிருந்து ஓர் இராத்தல் இறைச்சியைத் தந்துவிடவேண்டுமென்று மடி பிடித்து மன்றாடினன். கடன் வாங்கியதற்கு இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகம் தருவதாகப் பஸானியோ கூறியும், ஷைலாக் பெற்றுக்கொள்ள இசையாது, பத்திரத்தில் கண்டபடியே நடந்துகொள்ளவேண்டுமென்று கண்டிப்பாகக் கூறிவிட்டான். பின்னர் வெனிஸ் நகரை யாண்ட பிரபுவின்

சபையில், தனக்கு நீதி வழங்குமாறு அந்தோனியோமீது வழக்குத் தொடர்ந்தான். பிரபுவும் அவ் வழக்கை விசாரிக்க எடுத்துக்கொண்டார்.

பெல்மாண்டிலிருந்த போர்ஷியா, ஷைலக்கின் குணங்களையும் அவன் அந்தோனியாமீது வஞ்சகங் கொண்டிருந்ததையும் அறிந்தாள். அந்தோனியோ ஷைலக்குக்கு எழுதிக்கொடுத்த பத்திரப்படியே நடக்கவேண்டி வரும் என்பதை அறிந்த அவள், அந்தோனியோவைக் காக்க வெண்ணி ஓர் யுக்தி செய்தனள். பாட்யுவா நகரில் வசித்த தன் உற்றாகிய ஒரு நியாயவாதியைப்போன்று வேடமாறி வெனிஸ் நகரஞ் சேர்ந்து, நியாய சபையை அடைந்தாள். அப்பொழுது ஷைலக் அந்தோனியோ கொடுத்த பெருந்தொகையை ஏற்க மறுத்து, அந்தோனியோவின் தசையே வேண்டுமென்று பிடிவாதமாகக் கூறிக்கொண்டிருந்தான்.

நியாய சபையை அடைந்த போர்ஷியா, தன்னுறவினாகிய பெல்லாரியோ என்னும் நியாயவாதியிடமிருந்து தான் பெற்றுக்கொண்டு வந்திருந்த கடிதத்தைப் பிரபுவிட மளித்துத் தன்னை அறிமுகஞ் செய்துகொண்டாள். அக் கடிதத்தில் அது கொண்டுவருபவர் பெல்தாஸர் என்னும் நியாயவாதியென்றும், அந்தோனியோவின் வழக்கை வாதிக்க அவரைத் தமக்குப் பதில் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கண்டிருந்தார். பிரபு, அவ்வழக்கை வாதிக்கப் பெல்தாஸருக்கு அனுமதி யளித்தார்.

[நாடகப் பகுதி]

பெல்தாஸர் என மாறுவேடம் பூண்ட **போர்ஷியா** (பிரபுவை நோக்கி): பிரபுவே! வழக்கின் அம்சங்களை நான் நன்றாய் அறிவேன். இவர்களில் அந்தோனியோ யார்? யூதன் யார்?

பிரபு: அந்தோனியோ! ஷைலக்! முன்னே வருக.

போர்ஷியா (ஷைலக்கை நோக்கி): உன்னுடைய வழக்கு இதுவரை இல்லாத புதுமையாக இருக்கின்றது. எனினும், வெனிஸ் நகரச் சட்டங்களின்படி உன்னுடைய உரிமைகளை உனக்கு அளித்தே தீரவேண்டும். (பின்பு அந்தோனியோவிடம்) நீ அவன் விரும்பியபடி செய்ய வேண்டும்.

அந்தோ :— ஆம். அவ்விதந்தான் ஷைலக் கூறுகிறான்.

போர் :— இந்தப் பத்திரத்தை நீ எழுதிக்கொடுத்ததாக ஒப்புக்கொள்ளுகிறாயா?

அந்தோ :— ஆம், நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

போர் :— ஆயின், அந்த யூதன் உன்னிடம் கருணை காட்டவேண்டும் என விரும்புகிறாய் அல்லவா?

ஷை :— இரக்கம் காட்டவேண்டுமென்று எங்கே விதித்திருக்கிறது? அதைச் சொல்லுங்கள்.

போர் :— அரசாங்கச் சட்டங்களில் இல்லை. ஆனால்,

இரக்கம் என்பதன் இனிய இயல்பு
வருத்தி வருதல் அன்றென வறிக.
வானின் இழியும் மெல்லிய மழைபோல்
நானிலம் வீழும் இருவகை நலத்தது.
ஈவான் பெறுவான் இருவரும் உய்வர்.
மாண்பினில் பெரியதோர் மாண்வலியுடையது.
அரியணை மன்னர்க்கு முடியினும் தக்கது.

* * *

ஆதலின் யூதா! நீதி நின்னதே
ஆயினும் நினைநீ; நீதியே செலுத்தினும்
நம்மி லொருவரும் உய்தல் இல்லை.
இரக்கத்தின்பொருட்டே இறைவனை வேண்டுவம்;
அவ்வேண்டுகோ ளுணர்த்தும் உண்மை யாதெனின்
நாமெல்லாம் அருட்செயல் ஆற்றல் கடனே.

ஷை :— என் செய்கைகளின் பலனை நான் அநுபவிக்கத் துணிந்திருக்கிறேன். பத்திரத்தில் கண்டபடி விதிக்கச் சபையைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

போர் :— அந்தோனியோ பணங் கொடுக்கமுடியாத நிலையிலா இருக்கிறான் ?

பஸானி :— இதோ, அவனுக்காக நான் தருகிறேன்; இரண்டத்தனை, மூன்றத்தனை....பத்து மடங்கு என்றாலும் தருகிறேன். அதற்கு இணங்கவில்லையாயின் அந்த யூதன் வஞ்சத்திற்காகவே வழக்காடுகிறான் என்பது விளங்குமே. நான் உங்களை வேண்டுகிறேன். ஒரு பெரிய நன்மை செய்வதற்காகச் சிறிது தீமையைச் செய்தேனும் சட்டத்தை மாற்றுங்கள். இந்தக் கிழப் பிசாசு கொண்ட கெட்ட எண்ணம் நிறைவேறாதபடி செய்யுங்கள்.

போர் :— ஓ! அது முடியாது. வெனிஸ் நகரச் சட்டங்களை எக்காலத்திலும் மாற்ற முடியாது. இன்று ஒரு காரியத்திற்காக நாம் மாற்றினால் பின்னும் இதைப் போலப் பல முறைகளிலும் மாற்றவேண்டி வரும்.

ஷை :— நீதி வழங்குவதில் சிறந்த தானியேல் தான் இவர்! நான் உம்மைப் போற்றுகின்றேன்.

போர் :—அந்தப் பத்திரத்தை இங்கே கொடு ; நான் ஒரு முறை பார்க்கிறேன்.

ஷை :— கற்றறிந்த பண்டிதரே! இதோ பாருங்கள்.

போர் :— ஓ ஷைலக்! நீ கொடுத்த பணத்திற்கு மூன்று மடங்கு தருகிறார்களே, அதைப் பெற்றுக் கொள்ளலாகாதோ ?

ஷை :—அது முடியாது. பணம் பெறுவதில்லையென்று இறைவன்மேல் ஆணையிட்டிருக்கின்றேன். பொய்ச் சத்தியம் செய்தவனாகலாமா ?

போர் :— இந்தப் பத்திரம் சட்டப்படி தவணை கடந்ததே. நியாய முறைப்படி யூதன் ஓர் இராத்தல் தசையைப் பெற உரிமையுள்ளவனாகின்றான். என்றாலும் ஏ யூதா! மூன்று மடங்கு பணத்தைப் பெற்றுக்கொள்; பத்திரத்தைக் கிழித்துவிடுகிறேன்.

ஷை :— பத்திரத்தில் கண்டபடி ஓர் இராத்தல் தசையைத் தந்தபின் தாங்கள் அதைக் கிழித்தெறியலாம். அதற்குமுன் கிழிக்கலாகாது. என் ஆன்மாவின்மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்; என்னை என் வழியினின்றும், கொள்கையினின்றும் திருப்ப மனிதனுடைய நாவன்மையால் முடியாது. என் பத்திரப்படியே நடக்க உறுதிகொண்டுளேன்.

அந்தோ :— தீர்ப்பளிக்கும்படி நியாய சபையை முழு மனதுடன் வேண்டிக்கொள்கிறேன்.

போர் :— ஆனால் இதுதான் தீர்ப்பு: ஷைலக்குக்கு ஓர் இராத்தல் தசை கொடுப்பதற்காக உன் மார்பிடத்தை ஆயத்தஞ் செய்யவேண்டியதுதான்.

ஷை :— சிறந்த இளைஞ! தானியேல்போல் நீதி செய்ய வந்த நீர் வாழ்வீராக.

போர் :— ஏனெனில், பத்திரத்தில் கண்ட அபராதத்தை விதிப்பதிலேயே சட்டம் முனைந்துநிற்கின்றது.

ஷை :— உண்மை; உண்மை; பட்சபாதமற்ற சட்ட வல்லுநரே!

போர் :— ஆதலின், அந்தோனியோவே! உன் மார்பை அவன்முன் காட்டுக.

ஷை :— ஆம்; அவன் மார்பு; போற்றுதற்குரிய நியாயவாதியே! அங்ஙனமன்றோ பத்திரம் கூறுகின்றது?

போர் :— அங்ஙனமே ; தசையை நிறுக்கத் தராசு கொண்டுவந்திருக்கிருயோ ?

ஷை :— ஆம். கொண்டுவந்திருக்கிறேன்.

போர் :— காயத்தைக் கட்டுவதற்கு ஒரு இரணவைத்தியரை அழைத்து வைத்துக்கொள்.

ஷை :—இரணவைத்தியர்! பத்திரத்தில் குறித்திருக்கிறதா ? இல்லையே !

போர் :— பத்திரத்தில் இல்லை ; ஆயினும், தருமத்திற்காக அவ்வாறு செய்வது நல்லது.

ஷை :— பத்திரத்தில் இல்லாததால் அவ்வாறு செய்ய இணங்கேன்.

போர் :— ஓ வாணிப! ஏதாவது சொல்லவேண்டுவதுண்டா ?

அங்தோ :— ஒன்றுமில்லை. நான் தயாராகவே இருக்கின்றேன். ஓ பஸானியோ! நான் செல்கிறேன்.

ஷை :— நேரம் வீணே கழிகிறது ; நீதிபதியே! தீர்ப்புக் கூறுங்கள்.

போர் :— அந்த வாணிபனுடைய தசையில் ஓர் இராத்தல் உனக்குரியது. சட்டம் அதனை அனுமதிக்கிறது ; சபை அங்ஙனமே தீர்ப்பளிக்கிறது.

ஷை :— பாரபட்சமற்ற வழக்கறிஞரே !

போர் :— நீ அதனை அவனுடைய இருதயத்தின் சமீபத்தினின்றும் வெட்டியெடுத்துக்கொள்ளவேண்டும். சட்டம் அதனை விதிக்கிறது ; சபை முடிவுசெய்கிறது.

ஷை :— (அங்தோனியோவை நோக்கி) இங்கே வா. (என்று சொல்லிக்கொண்டு தீட்டிய கத்தியைக் கையில் எடுத்தான்.)

போர் :— பொறு ; இந்தப் பத்திரம் ஒரு துளி இரத்த மேனும் அநுமதிக்கவில்லை ; இதில் கண்ட சொற்கள் 'ஓர் இராத்தல் தசை' என்பன மட்டும். ஆகவே, அவ் வோர் இராத்தல் தசையையும் வெட்டியெடுக்கும்போது அவனுடைய இரத்தத்தின் ஒரு துளியேனும் நீ வீண் போக்கினல் கிறிஸ்துவனின் இரத்தத்தைச் சிந்தியதற்காக வெனிஸ் நகரத்தின் சட்டப்படி உன் வீடு, வாசல் முதலிய யாவும் பறிமுதல் செய்யப்படும்.

கிரேஷியானே (பஸானியோ, அந்தோனியோ இவர்களுடைய நண்பன்) :— பாரபட்சமற்ற நியாயவாதி, யூதா! தெரிந்ததா ? கற்றறிந்தவர்.

ஷை :— அதுவா சட்டம் ?

போர் :— சட்டத்தை நீயே படித்துப் பார் ; நீ நியாயத்தையே விரும்புவதால் உனக்கு நீ விரும்புவதற்கு மேலும் நியாயந் தரப்படும்.

கிரே :— மன்றேரஞ் செய்யாத வழக்கறிஞர், யூதா ! தெரிந்ததா ? கற்றறிந்தவர்.

ஷை :— முன் தருவதாகச் சொன்னபடி மூன்று மடங்கு பணத்தைத் தந்துவிடுங்கள்; போதுமானது.

பஸா :— இந்தா, பெற்றுக்கொள்.

போர் :— பொறு ; யூதனுக்கு முழு நியாயமுந் தர வேண்டும்; அவசரப்படாதே. அவனுக்குப் பத்திரத்திற் கண்ட அபராதத்தையன்றி வேறென்றுங் கிடையாது.

கிரே:— இப்பொழுது தெரிந்ததா ? யூதா! இந்த நியாயவாதி எத்துணை நேர்மையுள்ளவரென்று ?

போர் :—ஆகவே தசையை வெட்டி யெடுத்துக்கொள்; இரத்தத்தை ஒரு துளியேனுஞ் சிந்தாதே; ஓர் இராத்தல் தசைக்குக் கூட்டியேனும், குறைத்தேனும் வெட்டாதே. ஓர் இராத்தலுக்கு அதிகமிருப்பினுஞ் சரி, குறையினுஞ் சரி, உன் உடைமைகள் யாவும் பறிமுதல் செய்யப்படும்.

கிரே :— நியாயந் தீர்க்க வந்த இரண்டாவது தானியேல்!

போர்:— யூதா! ஏன் ஆலோசிக்கிறாய்; நீ விரும்பிய படியே தசையை வெட்டிக்கொள்.

ஷை :— முதலைக் கொடுங்கள்.

பஸா :— இந்தா, பெற்றுக்கொள்.

போர் :— பொறு; சபையில் அதைப் பெற மறுத்தவனுக்கு அபராதப் பொருளுக்கு மாத்திரமே உரிமை யுண்டு.

ஷை :— அசலையாவது கொடுக்கமாட்டீர்களா?

போர் :— அபராதப் பொருளையன்றி வேறொன்றும் கிடையாது.

ஷை :— பேயே அவனுக்கு உதவிசெய்யட்டும். நான் செல்கிறேன்.

போர் :— யூதா! பொறு; மற்றுமொன்றுள்ளது; சட்டத்திற்கு நீ இன்னும் பதில்சொல்லி ஆகவேண்டும்; வெனிஸ் நகர மக்களில் ஒருவனை அநியாயமாய்க் கொல்ல வழி தேடியதற்காக, உன் பொருள்களிற் பாதியை அரசனுக்கும், பாதியை அந்தோனியோவுக்கும் சேர்த்து விடும்படி சட்டம் கூறுகிறது. அவ்விதமே உன் பொருள்கள் பறிமுதல் செய்யப்படும். [சபை கலைகிறது]

[கதையின் முடிவு]

அந்தோனியோ, தனக்கு வந்த பொருள்களை ஷைலக்கின் மகளாகிய ஜெஸிகாவிற்கு அளித்தான். தமக்காகப் பேசி விடுவித்த நியாயவாதிக்குப் பரிசளிக்க விரும்பினான். அவர் பஸானியோ அணிந்திருந்த விரலாழியேயன்றி வேறொன்றும் பெற இசையவில்லை. அவ்விரலாழி, போர்ஷியா பஸானியோவுக்குக் கொடுத்தது. அவன் அதை யாருக்குங் கொடுப்பதில்லை யென்று வாக்குக் கொடுத்திருந்தான். எனினும், அவரிடம் நன்றி செலுத்தவேண்டி, அவருக்கு அதைக் கொடுத்தான். பின் நியாயவாதி தம்மிருப்பிடஞ் சென்றார்.

அந்தோனியோ, பஸானியோ முதலியோர் பெல்மாண்டிற்குச் சென்றனர். போர்ஷியா அவர்களுக்கு முகமன் கூறி விருந்துசெய்தாள். அன்று தன் நாயகன் கையில் தானிட்ட ஆழியைக் காணாது, அவனோடு அது காரணமாக ஊடினாள். பின்னர்க் கோபந் தணிந்து அவனுக்கு அருந்தப் பானம் அளித்தாள். பானம் வார்த்திருந்த கோப்பையின் அடியில், பஸானியோ நியாயவாதிக்களித்த மோதிரம் இருந்தது.

பின் போர்ஷியா உற்றது உரைத்தாள். எல்லோரும் அவள் திறமையை வியந்து, இன்பக் கடலுள் ஆழ்ந்தனர். அச்சமயம் அந்தோனியோவின் கப்பல்கள் நாடடைந்தன என்ற நற்செய்தியும் வந்தது.

பயிற்சி

[மகாகவி ஷேக்ஸ்பியர் இயற்றிய வெனிஸ் வர்த்தகன் என்னும் நாடகத்தைத் தழுவி இச் சிறு நாடகம் எழுதப்பட்டுள்ளது.]

அருஞ்சொற்கள் : களியாட்டம் - ஆடல், பாடல் முதலியவற்றில் பொழுதுபோக்குதல். கொண்டு கொடுத்து - பெண் கொண்டும், பெண் கொடுத்தும். கெடு - தவணை ; குறித்த காலம். டக்கெட் - இத்தாலிய நாட்டு நாணயம். நியாயவாதி - நியாத்தை வாதிப்ப

வன்; வக்கீல். மன்றோரம் - நீதிச் சபையில் ஒருதலைப் பட்சமாகப் பேசுதல். ஆழி - மோதிரம். ஊடுதல் - கோபிப்பது போல் பாசாங்கு செய்தல். தானியேல் - நீதி செலுத்துவதில் சிறந்து விளங்கிய ஒரு மன்னரின் பெயர் (பைபிள் நூலில் காண்க).

சீமான், செல்வவான், தோழன், மகன், உறவினன், நாயகன்—வேறு பால் கூறுக.

எதிர்மறை கூறுக: நியாயம், அநீதி, ஞானம், தருமம், சத்தியம், இன்பம்.

கருத்துணர்தல் :

1. அந்தோனியோவுக்கும் ஷைலக்குக்கும் நீடித்த பகைமை யுண்டாகக் காரணங்கள் யாவை?

2. கடன் பத்திரப்படி அந்தோனியோவை விடுவிக்கும் பொருட்டுப் போர்ஷியா எடுத்துக்காட்டிய சட்ட நுட்பம் யாது?

3. ஜெஸிகா யார்? அவள் யாரை மணந்தாள்?

4. பஸானியோவிடமிருந்து போர்ஷியா மோதிரத்தை வற்புறுத்திப் பெற்றதன் நோக்கம் யாது?

கட்டுரை :

1. இக்கதையின் பிற்பகுதியை நாடகமாக நடித்துக் காட்டுக.

2. இந்நாடகத்தில் வரும் முக்கிய உறுப்பினராகிய அந்தோனியோ, பஸானியோ, ஷைலக், போர்ஷியா இவர்களின் பண்புகளைத் தனித்தனியே 5 வாக்கியங்களில் எழுதுக.

3. இரக்கத்தைப்பற்றிக் கூறும் செய்யுளின் கருத்தை உரைநடையில் எழுதுக.

செய்யுட் பகுதி

I. துதி மலர்

தேவாரம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

—திருநாவுக்கரசர்

திவ்வியப் பிரபந்தம்

குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தவன்
அன்று ஞாலம் அளந்தபிரான் பரன்
சென்று சேர்திரு வேங்கட மாமலை
ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே.

— நம்மாழ்வார்

பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப் பிழையும், நினையாப் பிழையும், நின் னைந்
[தெழுத்தைச்
சொல்லாப் பிழையும், துதியாப் பிழையும், தொழாப்
[பிழையும்,
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய்கச்சி யேகம்பனே!

—பட்டினத்தடிகள்

86944

திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே!
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே!
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே!
வள்ளியை மணம்புரிய வந்தமுகம் ஒன்றே!
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்!
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே!

—அருணகிரிநாதர்

திருவருட்பா

TB
31(66)
N49

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம்
தன்னைநிக ரில்லாத தனித்தலைமைத் தெய்வம்
வாயார வாழ்த்துகின்றோர் மனத்தமர்ந்த தெய்வம்
மலரடியென் சென்னிமிசை வைத்தபெருந் தெய்வம்
காயாது கனியாகிக் கலந்தினிக்குந் தெய்வம்
கருணைநிதித் தெய்வமுற்றுங் காட்டுவிக்குந் தெய்வம்
சேயாக எனைவளர்க்கும் தெய்வமகா தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம்.

— இராமலிங்க சுவாமிகள்

இரட்சண்ணிய யாத்திரிகம்

வானமும் பூமியும் மகிழ்கொண் டோங்கிட
ஞானமும் நன்மையும் நனிசி றந்திட
ஊனமும் பாவமும் ஒழியத் தோன்றிய
தீனரட் சகன்பதம் சிந்தித் தேத்துவாம்.

—H. A. கிருஷ்ணப் பிள்ளை

தமிழன்னை வணக்கம்

வானார்ந்த பொதியின்மிசை வளர்கின்ற மதியே!
மன்னியமூ வேந்தர்கள்தம் மடிவளர்ந்த மகளே!
தேனார்ந்த தீஞ்சுனைகால் திருமாலின் குன்றம்
தென்குமரி ஆயிடைநற் செங்கோல் கொள்செல்வி!
கானார்ந்த தேனே! கற் கண்டே! நன் கனியே!
கண்ணே! கண் மணியே! அக் கட்புலஞ்சேர் தேவி!
ஆனாத நூற்கடலை அளித்தருளும் அமிழ்தே!
அம்மே! நின் சீர்முழுதும் அறைதல் யார்க்கெளிதே!

கரந்தைக் கவியரசு, ரா. வேங்கடாசலம் பிள்ளை

கொடி வணக்கம்

ஒற்றுமையாய்ப் பணிவோம்—தாயின்
ஓங்கும் ஜயக்கொடியை
வெற்றிகள் கூறிடுவோம்—சுற்றி
வீர நடம் புரிவோம். (ஒற்)

செம்பசும் வெண்ணிறத்தில்—நீலத்
திருவளர் சக்கரமே
அன்பின் அறிகுறியாம்—இந்த
ஆத்ம சக்திக் கொடியே. (ஒற்)

சூரிய சந்திரர்க்கும்—நமதிசை
சொல்லிப் பறக்குது பார்!
பாரி லிதன் பெருமை—எங்கும்
பரவத் தொண்டு செய்வோம். (ஒற்)

நல்லதை ஆதரிப்போம்—தீமை
நலியப் போர்புரிவோம்!
எல்லாரும் இன்புறவே—மணிக்கொடி
ஏற்றிப் பணிந்திடுவோம். (ஒற்)

—கவியோகி சுத்தானந்த பாரதியார்

II. நீதி மலர்

1. திருக்குறள்

செய்ந்நன்றியறிதல்

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல(து)
அன்றே மறப்பது நன்று. 1

அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும். 2

ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். 3

வாய்மை

புறத்தூய்மை நீரான் அமையும் அகத்தூய்மை
வாய்மையால் காணப்படும். 4

கல்வி

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. 5

கேள்வி

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாம் தலை. 6

குற்றங்கடிதல்

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும். 7

சுற்றந்தழால்

காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்னநீ ரார்க்கே உள. 8

ஆள்வினையுடைமை

முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். 9

நட்பு

உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு. 10

—திருவள்ளுவர்

2. நல்வழி

நன்மை செயல்

புண்ணியமாம் பாவம்போம் போனநாட் செய்தஅவை
மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருள்—எண்ணுங்கால்
ஈதொழிய வேறில்லை யெச்சமயத் தோர்சொல்லுந்
தீதொழிய நன்மை செயல். 1

இரு சாதிகள்

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழிவா நெறிமுறையின்—மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி. 2

நல்லகுடிப் பிறந்தாரின் தன்மை

ஆற்றுப் பெருக்கற் றடிசுடுமந் நாளுமவ்வா
றூற்றுப் பெருக்கா லுலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டா ரிசைந்து. 3

வயிற்றுக்குத் திருப்தி செய்தல் இயலாமை

ஒருநா ளுணவையொழி யென்றா லொழியாய்
இருநாளைக் கேலென்றா லேலாய்—ஒருநாளும்
என்னோ வறியா யிடும்பைகூ ரென்வயிறே
உன்னோடு வாழ்த லரிது. 4

வஞ்சமிலாரின் நல்வாழ்வு

நீரு நிழலு நிலம்பொதியு நெற்கட்டும்
பேரும் புகழும் பெருவாழ்வும்—ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமிலார்க் கென்றுந்
தருஞ்சிவந்த தாமரையாள் தான். 5

பணத்தைப் புதைத்து வைத்தல் தகாது

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்—கூடுவிட்டிங்
காவிதான் போயினபின் பாரே யனுபவிப்பார்
பாவிகா ளந்தப் பணம். 6

வரவுக்கு மிஞ்சிய செலவு கூடாது

ஆன முதலி லதிகஞ் செலவானால்
மான மழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்குங் கள்ளனா யேழ்பிறப்புந் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனா நாடு. 7

எல்லாம் ஈசன் செயல்

ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினு நிற்கும்
எனையாளு மீசன் செயல். 8

செல்வம் நிலையாமை

ஆறிடு மேடு மடுவும்போ லாஞ்செல்வம்
மாறிடு மேறிடு மாநிலத்தீர்—சோறிடுந்
தண்ணீரும் வாருந் தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறு முயர்ந்து. 9

ஒரே உண்மையைக் கூறும் நூல்கள்

தேவர் குறளுந் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியுங்—கோவை
திருவா சகமுந் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர். 10

—ஔவையார்

3. நன்னெறி

புகழை விரும்பாது உதவிபுரிதல்

என்று முகமன் இயம்பா தவர்கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்ரோர்—துன்றுசுவைப்
பூவில் பொலிகுழலாய் பூங்கை புகழுவோ
நாவிற் குதவும் நயந்து. 1

சினங்காத்தல்

உள்ளங் கவர்ந்தெழுந்து ஓங்குசினங் காத்துக்
கொள்ளும் குணமே குணமென்க—வெள்ளம்
தடுத்தல் அரிதோ? தடங்கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு. 2

விழுமியோர் தன்மை

தங்குறை தீர்(வு) உள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா(து) உலகின்
நிறையிருளை நீக்குமேல் நின்று. 3

இரப்பவர்க்கு ஈதல்

எந்தைநல் கூர்ந்தான் இரப்பார்க்கீந்(து) என்றவன்
மைந்தர்தம் ஈகை மறுப்பரோ?—பைந்தொடீ
நின்று பயனுதவி நில்லா அரம்பையின்கீழ்க்
கன்றும் உதவும் கனி. 4

இன்சொல்லின் இனிமை

இன்சொலால் அன்றி இருநீர் வியனுலகம்
வன்சொலால் என்றும் மகிழாதே—பொன்செய்
அதிர்வளையாய் பொங்கா(து) அழல்கதிரால் தண்ணென்
கதிர்வரவால் பொங்கும் கடல். 5

—சிவப்பிரகாச சுவாமிகள்

4. நீதிவெண்பா

பிறவியினுல் இகழப்படாதன

தாமரை பொன்முத்துச் சவரங்கோ ரோசனைபால்
பூமருதேன் பட்டுப் புனுகுசவ்வா(து)—ஆம்அழல்மற்(று)
எங்கே பிறந்தாலும் எள்ளாரே; நல்லோர்கள்
எங்கே பிறந்தாலும் என்? 1

தீயவர் தன்மை

ஈக்கு விடந்தலையில் எய்தும்இருந் தேளுக்கு
வாய்த்த விடம்கொடுக்கில் வாழுமே—நோக்கரிய
பைங்கன்அர வுக்குவிடம் பல்லளவே; துர்ச்சனர்க்கு
அங்கமுழு தும்விடமே யாம். 2

உத்தமர் இயல்பு

பொன்னும் கரும்பும் புகழ்பாலும் சந்தனமும்
சின்னம் படவருத்தம் செய்தாலும்—முன்னிருந்த
நற்குணமே தோன்றும்; நலிந்தாலும் உத்தமர்பால்
நற்குணமே தோன்றும் நயந்து. 3

சிற்றுணர்வோர் என்றுஞ் சிலுசிலுப்பர் ஆன்றமைந்த
முற்றுணர்வோர் ஒன்று மொழியாரே—வெற்றிபெறும்
வெண்கலத்தி னேசை மிகுமே விரிபசும்பொன்
ஒண்கலத்தி லுண்டோ வொலி. 4

உருவத்தால் மதித்தலாகாது

கற்பூரம் போலக் கடலுப் பிருந்தாலும்
கற்பூர மாமோ கடலுப்பு—பொற்பூரும்
புண்ணியரைப் போல இருந்தாலும் புல்லியர்தாம்
புண்ணியரா வாரோ புகல். 5

5. சதகம்

வேண்டுவன - வேண்டாதன

தன்ம மதைச் செயல்வேண்டும்; தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்;
வன்மவினை செயல்வேண்டா; பொய்வேண்டா;
பிறரையொன்றும் வருத்தல் வேண்டா;
கன்மநெறி வரல் வேண்டா; வேண்டுவது
பலர்க்கும் உப கார மாகும்
நன்மைசெய்தார் நலம்பெறுவர், தீமைசெய்தார்
தீமையுற்று நலிவர் தாமே. 1

— தண்டலையார் சதகம்

செய்யவேண்டுவன

புண்ணிய வசத்தினல் செல்வமது வரவேண்டும்;
பொருளரட் சிக்கவேண்டும்;
புத்தியுடன் அதுவொன்று நூருக வேசெய்து
போதவும் வளர்க்கவேண்டும்;
உண்ணவேண் டும்;பின்பு நல்லவஸ்த் ராபரணம்
உடலில் தரிக்கவேண்டும்;
உற்றபெரி யோர்கவிஞர் தமராதுவர்க் குதவி
ஓங்குபுகழ் தேடவேண்டு(ம்);
மண்ணில்வெகு தருமங்கள் செய்யவேண் டும்;மோட்ச
வழியினைத் தேடவேண்டும்;
வலிதிற்பு தைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கமறி யாக்குருடராம்;
அண்ணலே! கங்காகு லத்தலைவன் மோழைதரும்
அழகன்எம தருமைமதவேள்!
அநுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே! 2

— அறப்பளீசுர சதகம்

கல்வியின் சிறப்பு

கடலுலகில் உற்றபொரு ளுக்குளே நன்மைதரு
கல்விநிலை பெற்ற பொருளாம்;
கனலினல் உருகாது; புனலினற் கரையாது
கள்வரால் திருடொ ணது;
திடமான ராசாதி ராசரா லும்அதைத்
தீண்டிச் சிதைக்கொ ணது;
செயல்மிக்க மாதரால் சேதமா காதொருவர்
செலவிடிற் குறைவுரு தங்(கு);
அடமிகு சகோதரர்க் கிடமது கொடாததனை
அள விடவும் முடியாதுகாண்;
அப்பொரு ளினைப்பெரு திப்புவியில் அலைகின்ற
அற்பர்உறு பயனென் கொலோ?
கடகயம் உரித்துடலி னிற்றரித் திடுதேவ!
கற்பக இராச மேவும்
கங்கைபுனை ஈசனே! மங்கைமகிழ் நேசனே!
கயிலையங் கிரிவாசனே! 3

— கயிலாசநாதர் சதகப்

III. கதை மலர்

1. தேசிங்கு ராஜன் பாராசாரி என்னும் குதிரையை அடக்கிச் சவாரி செய்தல்

புலிக்குட்டிபோலப் பாய்ந்தவனும்
புரவி யேறினனம்;
ஏறினவுடனே பாராசாரி
என்னசெய் யுதுபார்.
தடதடவென்று தவிக்குதுபார்
அந்தக் குதிரைதானும்;
கிடகிட வென்று கிளம்பிக் குதிக்குது
அந்தக் குதிரைதானும்;

லகானை இழுத்துச் சிமிட்டாக் கொடுத்தான்
ராஜா தேசிங்கு;
சிமிட்டாக் கொடுத்த வேகத்தினாலே
சீறிப் பாய்கிறது;
காடுமலைகள் செடிகள்எல்லாம்
கலங்கி நடுங்கிடவே;
குன்றுமலைகள் தாண்டிக்குதிரை
குதித்துப் போகிறதாம்.
குதிரைதட்டின வேகத்தாலே
குழந்தை தேசிங்கு
குலுங்க நகைத்துச் சிமிட்டாக் கொடுத்தான்
குதிரைக் காலாலும்.
அங்கிருந்தே குதிரையைத் திருப்பினான்
அந்தப் பாலகனும்;
பாராசாரி மனதுகலங்கி
பார்த்து நிமிர்ந்ததுபார்.
பார்த்தவுடனே தேசிங்குபாலன்
புரவியை என்னசெய்தான்
மெள்ள சிமிட் டாக்கொடுத்து
மெதுவாய் வாரானே;
பக்கம்சிமிட் டாக்கொடுத்துப்
பாலன் வாரானே;
கலகல கலகல கலகல வென்று
கனைத்து வருகுதுபார்!
அந்தச் சமயத்தில் வந்து நிறுத்தினான்
அந்தப் பாலகனும்;
பாராசாரியைக் கொண்டு நிறுத்தினான்
பாலசூரியன் போலே;
நிறுத்தின உடனே புட்பமாரி
நிலையாய்ப் பொழிந்தாராம்.

தேசிங்குராஜன் குதிரையை அடக்குதல்



முயலும் சிங்கமும்

2. உபாயத்தால் வெல்லுதல்

(பஞ்சதந்திரம்)

சிங்கத்தை முயல் கொன்ற கதை

குறுமுயல் சிங்கந் தன்னைக்
கொன்ற(து)ஒன் றுண்டே தென்னில்
செறியுமோர் காட்டி லேயோர்
சிங்கமுண்(டு)அந்தக் காட்டில்
உறுவிலங்(கு)அனைத்தும் வேட்டை
யாடியூன் மிகவுந் தின்று
வெறிகொடு திரியும் நாளில்
விலங்கெலாம் ஒருங்கு கூடி, 1

'ஆணிளஞ் சிங்க மே!உன்
அடவியில் விலங்கை யெல்லாம்
வீணிலே கொல்ல வேண்டா;
விதத்தினில் தினமொன் றாக
ஊனுனக் களிப்போம்' என்ன,
உண்மையாகக் கொண்டு சிங்கம்
ஆணையும் இட்டொவ் வொன்றாய்
அருந்தியங் கிருக்கும் நாளில், 2

தனிமுய லொன்றுக் கோர்நாள்
தன்முறை வருத லோடும்,
'இனியது விடாது நம்மை
எனினு மோர்எடுப் பெடுத்து
வினையயிப் போது செய்து
வென்றுநாம் உய்ந்தோ மாகில்
நனிவிலங் கனைத்தும் உய்யும்;
நமக்குநற் புகழுண்(டு)' என்றே, 3

கருதியச் சிங்கத் தின்தன்
கடும்பசி வேளை தப்பி
வருதலும் முயலை நோக்கி
'மன்னன்நம் பசிவே ளைக்குப்

பெருமத வேழ மேனும்
பிந்துவ தில்லை ; பிந்தி
வருவதென் ! உரைநீ' என்று
மனந்தனிற் சினந்து கூற, 4

'ஐய!நின் பசிவே ளைக்கே
அடியனேன் வந்தேன் ; ஆங்கோர்
வெய்யசிங் கத்தைக் கண்டு
வெருவியங் கொளித்தி ருந்தேன் ;
பையவே சிங்கம் ஆங்கோர்
பருமுழை புகுந்த பின்னர்த்
துய்யவுன் பக்கல் வந்தேன்
சுவாமி!' என்(று)இறைஞ்சி நிற்க, 5

சிங்கம்'நா மல்லால் வேறோர்
சிங்கம்நீ கண்டா யாகில்
அங்கதைக் காட்டுவா' என்(று)
அழைத்தலும், அழைத்துப் போயோர்
பங்கமும் புனலும் சேர்ந்த
பாழ்ந்துர வதனைக் காட்ட,
அங்கதை யெட்டிப் பார்த்(து)
அதனிழ லுருவந் தோன்ற, 6

தன்னுரு நிழலைத் தானே
சத்துரு வென்று பாய்ந்து
துன்னுபங் கத்த முந்தித்
துளங்கியே யுயிரி ழந்த(து)
என்னலால் உபாயத் தாலே
யாவையும் வெல்ல லாமென்(று)
இன்னமோர் நண்டு கொக்கை
ஈர்ந்ததோர் கதையுஞ் சொல்லும். 7

—வீரமார்த்தாண்ட தேவர்

3. புத்தரும் ஏழைச் சிறுவனும்

[மனைவிமக்களையும், அரசச்சுகங்களையும் துறந்து அரண்மனையிலிருந்து வெளியேறிச் சென்ற புத்தர், வழி நடந்த களைப்பினாலும், வெயிலின் கொடுமையாலும் சோர்ந்து மயங்கிக் கீழே விழுந்து கிடந்தார். அவரை, ஆங்கு மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்த ஏழைச் சிறுவன் ஒருவன் கண்ணுற்று அவருக்கு உதவி புரிய விரைந்துவருகிறான்.]

ஆடுகள் மேய்த்துவரும்—ஒருவன்
ஆயர்குலச் சிறுவன்
வாடிக் கிடந்தவனைச்—செல்லும்
வழியின் மீதுகண்டான். 1

வையகம் வாழ்ந்திடவே—பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெய்யிலில் வெந்திடாமல்—தழைகள்
வெட்டி அருகில் நட்டான். 2

தெய்வக் குலத்திவனை—எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே—சிறிது
சிந்தை தயங்கினின்றான். 3

உள்ளம் தெளிந்துடனே—வெள்ளா(டு)
ஒன்றை அழைத்துவந்து
வள்ளல் மயக்(கு) ஒழிய—மடுவை
வாயில் கறந்துவிட்டான். 4

நிலத்தில் கிடந்தஐயன்—மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
" கலத்தினி லேகொஞ்சம்—பாலைக்
கறந்து தருவாய் " என்றான். 5

" ஐயையோ! ஆகா "தென்றான்—சிறுவன்
" அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா—இடையன்ஓர்
காட்டு மனிதன் " என்றான். 6

உலகம் புகழ்பெரியோன்—இந்த
உரையினைக் கேட்(டு) அந்நாள்
அலகில் கருணையினால்—சொன்ன
அமுத மொழி இதுவாம்: 7

"இடர்வரும்போதும்—உள்ளம்
இரங்கிடும்போதும்
உடன்பிறந்தவர்போல்—மாந்தர்
உறவு கொள்வரப்பா. 8

பிறப்பினால் எவர்க்கும்—உலகில்
பெருமை வாராதப்பா;
சிறப்பு வேண்டுமெனில்—நல்ல
செய்கை வேண்டுமப்பா. 9

நன்மை செய்பவரே—உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே—அண்டித்
தீண்ட வொண்ணாதார்." 10

நிலத்துயர் ஞானி—இவை
நிகழ்த்தி, "என் தம்பீ!
கலத்தினிலே கொஞ்சம்—பாலைக்
கறந்து தா" என்றான். 11

ஆயர் சிறுவனும்—கலத்தில்
அளிக்க வாங்கி உண்டு
தாயினும் இனியன்—கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 12

— கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

IV. வருணனை மலர்

காடு

மிக்க நலமுடைய மரங்கள்—பல
விந்தைச் சுவையுடைய கனிகள்—எந்தப்
பக்கத்தை யும்மறைக்கும் வரைகள்—அங்குப்
பாடி நகர்ந்துவரும் நதிகள் 1

நெஞ்சிற் கனல்மணக்கும் பூக்கள்—எங்கும்
நீளக் கிடக்கும்இலைக் கடல்கள்—மதி
வஞ்சித் திடும்அகழிச் சுனைகள்—முட்கள்
மண்டித் துயர்கொடுக்கும் புதர்கள் 2

ஆசை பெறவிழிக்கும் மான்கள்—உள்ளம்
அஞ்சக் குரல்பழகும் புலிகள்—நல்ல
நேசக் கவிதைசொல்லும் பறவை—அங்கு
நீண்டே படுத்திருக்கும் பாம்பு 3

தன்னிச்சை கொண்டலையும் சிங்கம்—அதன்
சத்தத்தி னிற்கலங்கும் யானை—அதன்
முன்னின்று ஓடும்இள மான்கள்—இவை
முட்டாது அயல்பதுங்கும் தவளை. 4

—கவி சி. சுப்பிரமணிய பாரதியார்

நாட்டு வளம்

மாது ளங்கனி யைக்கரத் தில்கொடு
மந்திக் கூட்டங்கள் பந்தடித் தாடும்
பேதை வண்டுகள் பண்ணிசை கூறிடப்
பேடை மாமயில் நாடக மாடும்
கோதிலாத புளினங்கள் தோறும்
குலவி யன்னங்க ளின்றுயில் கூரும்
சீத மாமதி தங்கிய சோலை
செறிந்த பாண்டிநன் னாடெங்கள் நாடே.

—அழகர் குறவஞ்சி

மலர்கள்

வண்டின் வரவெதிர் பார்த்துநிற்போம்—நல்ல
வாசனை வீதியில் வீசிநிற்போம்.
உண்டு களிக்க மதுவளிப்போம்—சற்றே
உட்காரப் பீடமும் இட்டுவைப்போம்.
மங்கைய ரோடு குமரரையும்—மனம்
வாய்த்த மணஞ்செய்து வாழவைப்போம்.
தங்கமும் பொன்னும் மணிகளுமே—எம்மைத்
தாழ்ந்து வணங்கமேல் தங்கிடுவோம்.
ஈசன் அடியில் பணிந்திருப்போம்—அவர்
ஏந்து முடிமீதும் ஏறிநிற்போம்.
பூசனை செய்யும் அடியவரின்—உள்ளம்
பொங்கு களிப்பெலாம் காட்டிநிற்போம்.

—கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை

V. தனி மலர்

எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ் மொழி எமது—எமக்
கின்பந் தரும்படி வாய்த்த நல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு—எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை—எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாங்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல்—தமிழ்
நாட்டினர் யாவர்க்குமே தமிழ் மீதில். 1

—புரட்சிக்கவி பாரதிதாசன்

செயற்கை யறிவும் இயற்கை யறிவும்

சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்
வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்—நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம். 2

ஈகை வகை

சொல்லாம லேபெரியர் ; சொல்லிச்செய் வார்சிறியர் ;
சொல்லியும் செய்யார் கயவரே ;—நல்ல
குலாமாலை வேற்கண்ணாய் கூறு(உ)வமை நாடின்,
பலாமாவைப் பாதிரியைப் பார். 3

—ஔவையார்

வாழைப்பழமும் பாம்பும்

நஞ்சிருக்குந் தோலுரிக்கும் நாதர்முடி மேலிருக்கும்
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது—விஞ்சுமலர்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையிற்
பாம்பாகும் வாழைப் பழம். 4

—காளமேகம்

செருப்பின் பயன்

கல்லும் உறுத்தாது ; காலில்முள் தையாது ;
எல்லைமார்த் தாண்டன்சூ டேறாது;—தொல்லைவரும்
மாலை இருளில் வழிநடக்கக் கூசாது ;
காலில் செருப்பிருந்தக் கால். 5

சொற்சுவை

சென்னிமலை வேலவர்க்குச் சேர்ந்திடுங் கொம்பிரண்டு
கன்னிகுற வள்ளிக்குக் காலில்லை—முன்னமே
ஆட்டுக்குக் கொம்பில்லை ஆனைக்குக் காலில்லை
பாட்டுக்குள் ஆராய்ந்து பார். 6

—பழம் பாடல்

வண்டி மாடு

இட்டமுடன் முதலியார் வாங்கிவந்த காளைதினம்
இருபோர் தின்னும்
சட்டமுடன் கொள்ளுண்ணும் புல்லுண்ணும் அதைப்
தன்னிற் பூட்டக் [பண்டி

கிட்டவரின் முட்டவருந் தொட்டவர்மே லேசாயும்
 கீழே வீழும்
எட்டாள்கள் தூக்கிடினும் தடிகொண்டுதாக்கிடினும்
 எழுந்திராதே. 7

—மாயூரம் வேதநாயகம் பிள்ளை

புண்ணுக்குப் புண்

வஞ்சகர்பால் நடந்தலைந்த காலிற் புண்ணும்
 வாசல்தொரு முட்டுண்ட தலையிற் புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகு நெஞ்சிற் புண்ணும்
 தீருமென்றே சங்கரன்பாற் சேர்ந்தே னப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
 கொடுங்காலா லுதைத்த புண்ணும் கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லா லடித்த புண்ணும்
 பாரென்றே காட்டிநின்றான் பரமன்றானே 8

—இராமச்சந்திரக் கவிராயர்

பூசணிக்காய் மகத்துவம்

மெய்வண்ண வீடுகட்ட உனைத்தொங்க விடுகிறார்கள் ;
செய்வண்ண வேலைசெய்து திருமாடம்முடிக் கின்றாய் நீ !
பொய்வண்ணப் பூசணிக்காய் ! கறியுனைச் செய்துண்டேன்உன்
கைவண்ணம் அங்குகண்டேன்; கறிவண்ணம் இங்குகண்டேன்! 9

—புரட்சிக்கவி பாரதிதாசன்

தமிழ்நாட்டின் சிறப்பு

வேழ முடைத்து மலைநாடு ; மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து ;—பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து; தெண்ணீர் வயல்தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து. 10

— ஔவையார்

செய்யுட் பகுதி

குறிப்புரை

I. துதி மலர்

தேவாரம்: தே + வாரம் - தேவாரம். தே - தெய்வம்; வாரம்- ஒரு வகை இசைப்பாட்டு. சிவபிரான்மீது சம்பந்தர், அப்பர், சுந்தரர் இம்மூன்று சைவ நாயன்மார்கள் பாடியுள்ள தோத்திரப் பாடல்கள் **தேவாரம்** எனப்படும்.

திருநாவுக்கரசர்: பிறப்பிடம்: பன்ருட்டிக்கு அருகிலுள்ள திருவாமூர். தந்தை: புகழனார். தாய்: மாதினியார். தமக்கை: திலகவதியார். குலம்: சைவ வேளாளர். காலம்: 7-ம் நூற்றாண்டு. வேறு பெயர்கள்: மருள்நீக்கியார், அப்பர், வாகீசர்.

அருஞ்சொற்கள்: மாசில் (மாசு + இல்) - குற்றமில்லாத; வீங்கு - (அழகு) மிகுந்த; வேனில் - இளவேனிற் காலம் (சித்திரையும் வைகாசியும்); மூசு - மொய்க்கின்ற; அறை - ஒலிக்கின்ற; பொய்கை - (தாமரைக்) குளம்; எந்தை - எம் + தந்தை.

திவ்வியப் பிரபந்தம்: வைணவ அடியார்களான பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின்மீது பாடியுள்ள தோத்திரப் பாடல்கள் **திவ்வியப் பிரபந்தம்** எனப்படும்.

நம்மாழ்வார்: பிறப்பிடம்: ஆழ்வார் திருநகரி என்று வழங்கும் திருக்குருகூர். தந்தை: காரியார். தாய்: உடையநங்கை. காலம்: 8-ம் நூற்றாண்டு என்பர். வேறு பெயர்கள்: மாறன், சடகோபன்.

அருஞ்சொற்கள்: குன்றம் - கோவர்த்தன மலை; ஞாலம் - உலகம்; பரன் - மேலானவன்; திருவேங்கடமாமலை - திருப்பதி மலை; ஒன்றுதல் - பொருந்துதல்; வினை - நல்வினை, தீவினை என்ற இருவினைகளும்; ஓயும் - ஒழியும்.

வரலாறு: குன்றம் ஏந்திக் குளிர்மழை காத்தல்: கண்ணன் கோகுலத்தில் இந்திரனால் ஏவிய மழையைக் கோவர்த்தன கிரியை எடுத்துக் குடையாகப் பிடித்துப் பசுக்களைக் காத்த வரலாறு.

அன்று ஞாலம் அளந்தபிரான்: திருமால் வாமன அவதார மெடுத்து மாவலியிடத்து மூவடி மண் இரந்து பெற்று, ஓரடியால் விண்ணுலகத்தையும், மற்றோரடியால் மண்ணுலகத்தையும் அளந்த வரலாறு.

பட்டினத்தார் பாடல்: பட்டினத்தடிகள் திருவெண்காடு என்னும் ஊரில் பிறந்து, காவிரிப்பூம்பட்டினத்தில் வாழ்ந்தவர்; வணிகர் குலம்; சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முன் இருந்தனர் என்பர்.

அருஞ்சொற்கள்: ஐந்தெழுத்து - பஞ்சாட்சர மந்திரம்; கச்சி- காஞ்சீபுரம்; ஏகம்பன் - காஞ்சீபுரத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபிரானின் பெயர்.

திருப்புகழ்: முருகக் கடவுள் மீது அருணகிரிநாதர் பாடியுள்ள பாடல் தொகுதி திருப்புகழ் ஆகும்.

அருணகிரிநாதர்: ஊர்: திருவண்ணமலை; காலம்: 15-ம் நூற்றுண்டு என்பர்.

அருஞ்சொற்கள்: ஏறுமயில் - மயிலேறு - ஆண் மயில்; வினை - துன்பம்; குன்று - மாயச் செயல்களையுடைய கிரவுஞ்சம் என்ற மலை. உருவுதல் - ஊடுருவிச் சென்று பிளத்தல்; வாங்குதல் - விடுதல் என்ற பொருளில் வந்துளது; மாறு - பகைமை; அருணசலம் - திருவண்ணமலை.

திருவருட்பா: வடலூர் இராமலிங்க அடிகள் பாடிய பாக்கள் திருவருட்பா எனப்படும். திரு + அருள் + பா = திருவருட்பா. இறைவன் திருவருளினுல் தோன்றிய பா எனப் பொருள்படும்.

இராமலிங்க சுவாமிகள்: ஊர்: சிதம்பரத்துக்கு அருகிலுள்ள மருதூர். இளமையில் சென்னைப்பட்டினத்திலும், பின்னர் வடலூர் என்ற இடத்திலும் வாழ்ந்தவர். தந்தை: இராமையாப் பிள்ளை. தாய்: சின்னம்மையார். தமையன்: சபாபதிப் பிள்ளை. குலம்: கருணீகர் குலம். காலம்: கி. பி. 1823–1873. சிறப்புப் பெயர்: வள்ளலார்.

அருஞ்சொற்கள்: தாங்குதல் - ஆதரித்தல்; தனி - ஒப்பற்ற; சென்னி - தலை; மிசை - மேல்; கருணை நிதி - அருட் செல்வம்; சேய் - மகவு, குழந்தை; மகா தெய்வம் - சிறந்த தெய்வம்; சிற் சபை - சிற்றம்பலம், சிதம்பரம்.

இரட்சண்ணிய யாத்திரிகம் : இரட்சிப்பு அடையவேண்டிய ஆன்மாவின் யாத்திரையைப்பற்றிக் கூறும் நூல்.

எச். ஏ. கிருஷ்ணப் பிள்ளை : ஊர் : பாளையங்கோட்டை. மதம் : கிறிஸ்துவ மதம. காலம் : 19-ம் நூற்றுண்டு.

அருஞ்சொற்கள் : ஞானம் - கல்வி அறிவு; நனி - மிகவும் (உரிச் சொல்); ஊனம் - கேடு, குறைபாடு; தீனரட்சகன் (தீனன் + ரட்சகன) - ஏழைகளைக் காப்போன்; தீனன் - ஏழை, யாசிப்பவன்; பதம் - பாதம்; ஏத்துதல் - துதித்தல்.

தமிழன்னை வணக்கம் : கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள் தற்பொழுது தஞ்சையை யடுத்துள்ள கரந்தை யில் வசித்துவருகிறுர்.

அருஞ்சொற்கள் : வானுர்ந்த - வானம் அளாவிய; பொதி - பொதிய மலை; தீஞ்சுனை - இனிய சுனை; கான் - மணம்; கண் + புலம் - கட்புலம், கண்ணினுல்பெறும் அறிவு; ஆறுத - குறை யாத; அறைதல் - கூறுதல்; எளிதே - எளிதன்று. 'ஏ' எதிர் மறைப் பொருளை உணர்த்தியது.

கொடி வணக்கம் : கவியோகி சுத்தானந்த பாரதியார் தற் பொழுது புதுவையிலுள்ள தவராசர் அரவிந்தர் ஆச்சிரமத்தில் உறைந்து தமிழ்த்தொண் டாற்றிவருகின்றுர்.

அருஞ்சொற்கள் : திரு - மேன்மை, உயர்வு; இசை - புகழ்; மணி - அழகு.

II. நீதி மலர்

1. திருக்குறள் : குறுகிய வெண்பாக்களால் ஆகியதோர் நூல். இந்நூலில் 1330-குறட்பாக்கள் அடங்கியுள்ளன. இதன் ஆசிரி யர் தெய்வப்புலவர் திருவள்ளுவர். இவர் சுமார் 1800-ஆண்டு களுக்குமுன் வாழ்ந்தனர்.

அருஞ்சொற்கள் : (1) நன்றல்லது - தீமை; (2) அமரர்-தேவர்; உய்க்கும் - செலுத்தும்; ஆர் இருள் - மிகுந்த இருள், நரகம். (3) விழுப்பம் - உயர்வு; ஓம்புதல் - காத்தல்; (4) புறம் - உடலின் மேற்புறம்; அகம் - மனம்; வாய்மை - உண்மை; (5) கசடு - குற்றம்; (6) செவிச்செல்வம் - செவியால் உணரப்படும் கேள்விச் செல்வம்; (7) வைதூறு - வைக்கோற்போர்; (8) சுற்றந் தழால் - சுற்றத்தாரைத் தழுவி வாழ்தல்; கரவா - ஒளிக்க மாட்டா; கரைதல் - கத்துதல் (காக்கையின் ஒலி); ஆக்கம் -

உயர்வு, உயர்வுக்குக் காரணமாகிய செல்வம்; அன்ன - அப்படிப் பட்ட; நீரார் - தன்மையுடையார்; (9) ஆள்வினை - முயற்சி; திரு- செல்வம்; இன்மை - வறுமை. (10) உடுக்கை - உடை; இடுக்கண்- துன்பம்.

2. நல்வழி : மக்களுக்கு நன்மையான வழிகளைக் கற்பிக்கும் நூல். நாற்பது வெண்பாக்கள் அடங்கியது. இதன் ஆசிரியர் ஔவையார். சங்க கால ஔவையார் எனவும், இடைக்கால ஔவையார் எனவும் இருவர் இருந்ததாகக் கூறுவர். இவர் களுள் பிற்கூறியவரே இந்நூலின் ஆசிரியர் என்பர்.

அருஞ்சொற்கள் :

1. போன நாள் - முற்பிறப்பு; ஈது - இது என்னும் சுட்டுப் பெயர் நீண்டது; சமயம் - மதம்.

2. நெறி - வழி; மேதினி - உலகம்; பட்டாங்கு - மேலான நூல்கள்.

3. நல்கூர்ந்தார் - வறியவர்.

4. ஏல் - ஏற்றுக்கொள்; என்னோ - என் + நோ; நோ - துன்பம்; இடும்பை - துன்பம்.

5. நிலம் பொதியும் - நிலத்தை அடைக்கும்; பேர் - நற் பெயர்; ஊர் - ஊராட்சி; திரு - செல்வம்; சிவந்த தாமரையாள் - செந்தாமரையில் வீற்றிருக்கும் திருமகள்.

6. கூடு - உடற்கூடு; ஆவி - உயிர்.

7. மானம் - பெருமை; நாடு - ஆராய்ந்து பார்.

8. எய்தும் - பொருந்தும்.

9. உள் + நீர்மை - உண்ணீர்மை - உள்ளத்தின் தன்மை; வீறும் - சிறப்புற்று விளங்கும்.

10. தேவர் - திருவள்ளுவர்; நான்மறை முடிபு - நான்கு வேதங்களின் முடிபு, உபநிடதங்கள்; மூவர் தமிழ் - மூவர் பாடிய தேவாரம்; முனி - மாணிக்கவாசகர்; திருமூலர்-ஒரு சிவனடியார்; இவர் அருளிச்செய்த நூல் திருமந்திரம் எனப்படும.

3. நன்னெறி : நன்மை + நெறி - நன்னெறி, நன்மையைப் பயக்கும் வழியைப் போதிக்கின்ற நூல். இது நாற்பது வெண் பாக்களால் ஆகியது. இதன் ஆசிரியர் சிவப்பிரகாச சுவாமிகள்.

இவர் காஞ்சீபுரம் குமாரசுவாமி தேசிகரின் குமாரர். இவர் வீர சைவர். திருச்சிராப்பள்ளி சில்லா துறைமங்கலத்தில் இருநூறு வருடங்களுக்குமுன் வாழ்ந்தவர்.

அருஞ்சொற்கள் :

1. முகமன் - உபசார வார்த்தை; கண் - இடம்; துன்று - மிகுந்த; குழல் - கூந்தல்; குழலாய் - கூந்தலையுடையவளே! மகடூஉ முன்னிலை. பூ+கை - பூங்கை - அழகிய கை; நயந்து - விரும்பி.

2. தடம் - விசாலமான.

3. வெம் + குறை - கொடிய குறைபாடு; கறை யிருள் - களங்கமாகிய இருட்டு.

4. எந்தை - எம் + தந்தை - மரூஉச்சொல்; பைந்தொடீ - பசிய வளையலை அணிந்தவளே; அரம்பை - வாழை.

5. வியன் - பெரிய; அதிர் - ஒலி; அழல் கதிர் - வெப்பம் பொருந்திய கிரணங்களையுடைய சூரியன்; தண்+எண்+கதிர் - தண்ணெண்கதிர் - சந்திரன்.

4. நீதி வெண்பா : உவமைகள் மூலம் நீதியைப் புகட்டும் வெண்பாவாலாகிய ஒரு நூலாகும்; நூறு பாக்களைக் கொண்டது. இதன் ஆசிரியர் யார் என்று இன்னும் ஆராய்ச்சியாளர் முடிவு செய்யவில்லை. ஒரு சாரார் சுமார் 200 ஆண்டுகட்கு முன்னிருந்த ஔவையார் என்பவரால் பாடப்பட்டது என்பர்.

அருஞ்சொற்கள் :

1. சவரம் - சாமரம்; அழல் - நெருப்பு; எள்ளார்-இகழார்.

2. எய்தும் - பொருந்தியிருக்கும்; இருந்தேள் - கரிய தேள்; பசுமை+கண் - பைங்கண் - கூரிய பார்வை; அரவு - பாம்பு; துர்ச்சனர் - தீயோர்.

3. சின்னம்பட - சீர்குலையும்படி; நலிதல் - வருந்துதல்; நயந்து - மிகுந்து.

4. சிறுமை+உணர்வு - சிற்றுணர்வு; சிலுசிலுப்பர்-அளவு கடந்து பேசுவர்; ஆன்று - (கல்வி கேள்விகளில்) நிறைந்து; அமைந்த - அடக்கம் பூண்ட; ஒண் கலம் - ஒளி பொருந்திய பாத்திரம்.

5. கற்பூரம் - சூடம், பச்சைக்கற்பூரம்; பொற்பு - அழகு, மேன்மை; புண்ணியர் - மேலோர்; புல்லியர் - அற்பர்.

5. சதகம் : சதகம் என்பது நூறு பாடல்களைக் கொண்ட ஒரு வகை நீதி நூல். இந்நூல்கள் சமீப காலத்திலேயே தோன்றின. புராணக் கதைகள், நிகழ்ச்சிகள் முதலியவற்றைக்கொண்டு பற்பல நீதிகளைப் புகட்டுவன.

தண்டலையார் சதகம் : இது 'திருத்தண்டலை நீணெறி' என்ற தலத்தில் உள்ள சிவபெருமான்மீது பாடப்பட்ட நூல். இதன் ஆசிரியர் **படிக்காசுப் புலவர்** ஆவர். காலம் : 17-ம் நூற்றுண்டு.

அறப்பளீசுர சதகம் : அறப்பள்ளி என்ற தலத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்மீது பாடப்பட்ட நூலாகும். இந்நூலாசிரியர் **அம்பலவாணக் கவிராயர்;** மதவேள் என்ற வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர். சுமார் 150 ஆண்டுகட்கு முன் இருந்தவர்.

கயிலாசநாதர் சதகம் : கயிலையங்கிரியில் எழுந்தருளியுள்ள இறைவன்மீது பாடப்பட்ட நூல். ஆசிரியர்: சேலம் **சிதம்பரம்பிள்ளை.**

அருஞ்சொற்கள் :

1. தன்மம் - தருமம்; தண் + தலை - தண்டலை - குளிர்ந்த சோலை; தண்டலை நீள் நெறி என்பது ஒரு தலத்தின் பெயர்;வன்மவினை-பழி வாங்கும் செயல்; கன்ம நெறி-தீவினை வழி; வேண்டா-விரும்பப்படாதன; நலிவர் - வருந்துவர்.

2. தமர் - உறவினர்; ஆதுலர் - வறியவர்; மார்க்கம் - சன்மார்க்கம் - நல்ல வழி; கங்கா குலம் - வேளாளர் மரபு; மோழை - ஒருவன் பெயர்; நினைதரு - நினைக்கின்ற; கிரி - மலை; சதுர கிரி - கொல்லிமலைத்தொடரின் ஒரு பகுதி.

3. கடல் உலகு - கடல் சூழ்ந்த உலகம்; கனல் - நெருப்பு; புனல் - நீர்; ஒணுது - ஒண்ணுது என்பதன் குறை, முடியாது; திடம் - வலிமை; செயல்-செயலாற்றும் திறம்; அடம்-பிடிவாதம்; கடம் - மதம்; கயம் - யானை; கற்பக இராசன் - தேவேந்திரன்; மேவும் - விரும்பும், வழிபடும்; புனை - தரி; மங்கை - உமையம்மை.

கடகயம் ...... தேவன் : சிவபெருமான் தன்னை எதிர்த்த யானையைக் கொன்று அதன் தோலை உரித்து மேலே தரித்த வரலாறு; கங்கைபுனை ஈசன் : பகீரதன்பொருட்டு வந்த ஆகாச கங்கையைச் சடைமீது ஏற்றுப் பூமியில் விட்ட வரலாறு.

III. கதை மலர்

1. தேசிங்குராசன் பாராசாரி என்னுங் குதிரையை அடக்கிச் சவாரி செய்ததை விவரிக்கும் இப்பகுதி **தேசிங்கு ராசன் கதை** என்ற நாடோடிப் பாடலிலுள்ளது. இக்கதையை எழுதியவர் புகழேந்திப் புலவர் என்பது பொருந்தாது; சமீப காலத்தில் யாரோ ஒருவர் பாடியிருத்தல் வேண்டும். எளிய இந்நூல்நடையில், கொச்சைச் சொற்கள் பலவுங் கலந்து அமைந்துள்ளது; கிராம மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டுவருகிறது.

அருஞ்சொற்கள்:—புரவி - குதிரை; பாராசாரி - குதிரையின் பெயர்; சிமிட்டா கொடுத்தல் - சாட்டையால் மெதுவாகத் தட்டுதல்; பால சூரியன் - உதய காலச் சூரியன்; புட்பமாரி - பூமழை.

2. உபாயத்தால் வெல்லுதல்: இப்பகுதி பஞ்சதந்திரம் என்ற நூலில் அமைந்துள்ளதாகும். வடமொழியிலுள்ள பஞ்சதந்திரம் என்ற நூலைத் தமிழில் ஆக்கியவர் **வீரமார்த்தாண்ட தேவர்** என்பவர். இவர் சமீப காலத்தில் வாழ்ந்தவர். இந்நூலில் பல நீதிக்கதைகள் அமைந்துள்ளன.

அருஞ்சொற்கள் :

1. குறுமுயல் - சிறிய முயல்; செறி - (மரம்) அடர்ந்த; உறு - வாழ்கின்ற; ஊன் - மாமிசம்; ஊண் - உணவு.

2. ஆண் - ஆண்மை, வீரம்; அடவி - காடு; ஆணை - கட்டளை.

3. எடுப்பு எடுத்தல் - உபாயத்தால் முயலுதல்; நனி உய்யும் என மாற்றுக.

4. வேழம் - யானை; பிந்துவதில்லை - காலந்தாழ்த்திவருவதில்லை.

5. வெய்ய - கொடுமையான; வெருவி - பயந்து; பரு - பெரிய; முழை - குகை; துய்ய - தூய்மையான.

6. பங்கம் - சேறு; பாழ்ந்துரவு - பாழுங் கிணறு.

7. சத்துரு - பகைவன்; துன்னு - மிகுந்த; துளங்கி - நடுங்கி; ஈர்தல் - அறுத்தல் (கழுத்தை).

3. புத்தரும் ஏழைச் சிறுவனும் : இஃது ஆசிய சோதி என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இந்நூலின் ஆசிரியர் கவிமணி சி. தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள் ஆவார். இவர் திருவாங்கூர் நாட்டில் புத்தேரியில் வசித்துவருகிறார்.

அருஞ்சொற்கள்: (1) ஆயர்குலம் - இடையர் குலம். (2) மாதவச் செல்வன் - புத்தர். (3) சிந்தை - மனம். (4) மயக்கு - மயக்கம். மடு - பால் மடி. (5) கலம் - பாத்திரம். (6) அண்ணல் - பெருமையில் சிறந்தவர்; தீண்ட ஒண்ணுத - தீண்டக் கூடாத. (7) அலகில் - அளவற்ற. (8) இடர் - துன்பம். (10) நாடும் - விரும்பும்; தின்மை - தீமை. (11) நிலத்துயர் ஞானி - பூமியிற் சிறந்த அறிஞன்; புத்தர் பெருமான். (12) தாயினும் இனியன் - புத்தர்.

கருத்துணர்தல் :

1. ஆயர் குலச் சிறுவன் புத்தரைக் கண்டவுடன் என்ன எண்ணினன்? பின்னர் யாது செய்தன்ன்?

2. புத்தர் கண்விழித்துச் சிறுவனிடம் கேட்டதென்ன? சிறுவன் யாது கூறினன்?

3. புத்தர் சிறுவனுக்குக் கூறிய அறவுரைகளை எழுதுக.

4. புத்தர் பெருமானைக் குறிக்கும் சொற்றொடர்களைப் பாடப் பகுதியிலிருந்து எடுத்து எழுதுக. ஒவ்வொரு தொடரும் அமைந்ததன் காரணத்தை உணர்க.

IV. வருணனை மலர்

1. காடு : காட்டின் இயற்கைக் காட்சியைப் படம் பிடித்துக் காட்டுகிருர் கவி சுப்பிரமணிய பாரதியார். இவ்வாசிரியர் தமிழ் மக்களுக்குத் தேசிய உணர்ச்சியை ஊட்டிய கவியரசு ஆவர். இந்நூற்றுண்டில் வாழ்ந்தவர்.

அருஞ்சொற்கள் : வரை - மலை; கனல் - நெருப்பு; மதி-அறிவு; அகழிச் சுனைகள் - ஆழ்ந்த நீரருவிகள்; முட்டாது - எதிர்த்தல் இன்றி.

2. நாட்டு வளம் : பாண்டிய நாட்டின் வளம் இச் செய்யுளில் விவரிக்கப்படுகிறது; அழகர் குறவஞ்சியிலிருந்து எடுக்கப் பெற்றது இப்பாடல்.

அருஞ்சொற்கள் : கொடு - கொண்டு என்பதன் இடைகுறைந்தது; மந்தி - பெண் குரங்கு (ஆண் : கடுவன்); பேதை வண்டு - பெண் வண்டு; இசை கூறிடல் - இசை வகுத்தல்; பேடை மாமயில் - பேடையோடு கூடிய சிறந்த ஆண் மயில்கள்; புளினம் - மணற்குன்று; குலவி - குலாவி; இன துயில் கூரும்- இன்பமாகத் தூங்கும்.

3. மலர்கள் : மலர்களின் இயற்கை மாண்பை இனிதுறக் காட்டுவது இப் பாடல். இது கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை யவர்கள் இயற்றியது.

அருஞ்சொற்கள் : விண் - ஆகாயம்; கதிர் - சூரியன்; மது - தேன்; மணம் - திருமணம்; தங்கமும்,............தங்கிடுவோம்— தங்க நகைகட்கு மேலாக மலர்கள் சூடுதலைக் குறித்தது; ஏந்து முடி - நிமிர்ந்து நிற்கும் சிகரம்.

V. தனி மலர்

1. எங்கள் தமிழ் : புரட்சிக் கவி பாரதிதாசன் புதுவையில் வாழ்ந்து வருகிறார். தேசியக் கவி பாரதியாரின் மாணவர்களில் ஒருவர். இவரது இயற்பெயர் கனகசுப்புரத்தினம்.

கனி - முக்கனி; காதல் - அன்பு.

2. செயற்கையறிவும் இயற்கையறிவும் : நடை - ஒழுக்கம்.

3. ஈகை வகை: கயவர் - கீழ்மக்கள்; குலாம் - விளங்குகின்ற; பலா—பூக்காமல் காய்க்கும்; மா—பூத்துக் காய்க்கும்; பாதிரி—பூத்தும் காய்க்காது.

4. வாழைப்பழமும் பாம்பும் : இது வாழைப்பழத்தைப் பாம்போடு ஒப்பிட்டுக் கூறும் செய்யுள். இரு பொருள் (சிலேடைப் பொருள்) படும்படி பாடப்பெற்றது. இதன் ஆசிரியர் காளமேகப் புலவர் ஆவார். காலம் 16-ம் நூற்றாண்டு என்பர்.

நஞ்சு-விஷம்; நாதர்-சிவபெருமான்; விஞ்சும்-மிகுதியான; மலர் தேம்-மலரில் உள்ள தேன்; திருமலைராயன்-ஒரு மன்னவன்; வரை - மலை, மலை சூழ்ந்த நாடு; வெஞ்சினம்-உணவுப்பொருள்.

பாம்பு : விஷம் பொருந்தியிருக்கும்; பருவமறிந்து சட்டையைக் (தோலை) கழற்றும்; சிவபெருமான் திருமுடிமீதிருக்கும்; கொடிய கோபத்தில் அதன் பல் பட்டால் விஷம் இறங்காது.

வாழைப்பழம் : தோல் நைந்திருக்கும் ; தோலுரிக்கப்படும் ; அபிடேகப் பொருளாய் இறைவன் திருமுடிமீது சேரும். உணவாக உட்கொள்ளுங்காலத்தில் நமது பல்லிற்பட்டால் திரும்பி வாராது

TB
031(6)
N49

5. **செருப்பின் பயன் :** எல்லை மார்த்தாண்டன் - சூரியன்.

6. **சொற்சுவை :** சென்னிமலை - ஓரூர். **சென்னிமலை, வேலவர்** இச் சொற்கள் ெ, ே என்ற இரண்டு கொம்புகளைப் பெற்றுள்ளன. **வள்ளி** என்ற சொல் (ா) காலினைப் பெறவில்லை. **ஆடு** என்ற சொல் (ெ) கொம்பைப் பெறவில்லை. **ஆனை** என்ற சொல் கால் (ா) பெறுது இருக்கின்றது.

7. **வண்டிமாடு:** மாயூரம் வேதநாயகம்பிள்ளை மாயூரத்தில் முன் சீப் உத்தியோகம் வகித்தவர். சொற்சுவையும் நகைச்சுவையும் ததும்பப்பாடுபவர். சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த தமிழறிஞர். பண்டி - வண்டி. இச்செய்யுளின் நகைச்சுவையை ஓர்க.

8. **புண்ணுக்குப் புண் :** செஞ்சொல் - கவி பாடுதற்குரிய நல்ல சொற்கள்; பஞ்சவரில் ஒருவன் - அருச்சுனன்.

வரலாறு : பிரம்படியின் புண் - வந்தி என்னும் மூதாட்டிக் காகச் சோமசுந்தரக் கடவுள் பிட்டுக்கு மண் சுமந்து பாண்டிய னது பிரம்படியால் பெற்ற புண்.

கண்ணப்ப நாயனர் வழிபாடு செய்யும்பொழுது, பழைய மலர்களைத் தம் செருப்புக்காலால் நீக்கியதால் ஏற்பட்ட புண். சிவபெருமானுக்கும் அருச்சுனனுக்கும் ஏற்பட்ட போரில் வில்லால் அருச்சுனன் அடிக்க அதனல் ஏற்பட்ட புண்.

9. **பூசணிக்காய் மகத்துவம்:** மகத்துவம்-பெருமை ; வண்ணம்-அழகு ; மாடம் - மாளிகை.

10. **தமிழ் நாட்டின் சிறப்பு :** இதனைப் பாடியவர் ஔவையார். மலைநாடு - சேரநாடு; மேதக்க - மேன்மை பொருந்திய; பூழியர்-பாண்டிய நாட்டார்; தென்னடு-பாண்டிய நாடு; தெள்+நீர் - தெண்ணீர்; தொண்டை நன்னடு செங்கற்பட்டு, தென்னாற்காடு மாவட்டப் பகுதிகள் அடங்கிய நாடு; சான்றோர் - அறிஞர், பெரியோர்.

86944

ஸ்ரீ மஹாபாரதம் பிரஸ், கும்பகோணம். 26—11—1949

329